பிஸ்மில்லாஹி.

வேத புராணம்.

ஞானப்பொழிப்புரை.

இரண்டாம் பாகம்,

ஆங்காரத் தத்துவத்தை யடக்கி யுபாயமதாய்த்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெந்நாளோ. (69)

(ஞா-பொ-ரை): ஆங்கார மென்ற குரு ரக்குணத்தை ஆசை விட்டும் அறத்து விட்டு தத்துவத்தை யடைய வேண்டிய பக்குவமான உபாயங்களைக் காமிலான குருவின் ஞான நேத்திரத்தைக் கொண்டும் கண்டு பிடித்து சதா காலமும் நித்திரையைப் புகட்டி வைக்கின்ற லோக மயக்கலாகிரியை விட்டும் நீங்கி சதா நினவுடன் தவத்தில் அமர்ந்து விடுகிறதானது எந்தக் காலம் எ-று

ஓங்காரக் கம்பமதுக் குள்ளிருந்து கைகாட்டும்
பாங்கியெனைக் கைபிடித்துப் பலன்பெறுவ தெந்நாளோ (70

(ஞா-பொ-ரை): ஓங்காரக் கம்பம் என்ற சிரசின் வட்டத்தில் பிரதான பீடமாகிய நேத்திரத்தின் கண் நேரே பளீரென்று வெளிச்சமாகி பரஞ் ஜோதியின் நடனஞ்செய்து அருளென்ற கதிர்க்கையைக் காட்டா நின்ற நல்ல பாங்கியாகிய சொரூபு வாலைப் பெண்ணனவள் என் கையுடன் கை கொடுத்துப் பிடித்து நன்மை பயக்கா நின்றபலனைத்தந்து அருள் செய்வது எந்தக் காலம், எ-று

ஆரு தாங்கடந்தே யப்புறமாய்த் தற்பரத்தில்
ஊறும் சுருபமதை நோக்கிநிற்ப தெந்நாளோ (71)

[ஞா-பொ-ரை]: ஆதாரநிலை யாகிய ஆறையும் கடந்து அப்பால் வரக்கூடிய தானே பரமாய் முடியக் கூடிய கமாலுல்லீனில் ஜோதியே ஒரு சொரூபமாக நிற்கக் கூடிய, தன்னை கண்டு, அதோடும் உலகமயக்க விஷயங்களில் கருத்தை நுழைய விடாமல் நிறுத்திக் கொள்வதானது எந்தக் காலம்

உன்சிபத்தை யாரு முற்றிருந்துங் கற்றறியார்
வஞ்சகத்தை நீக்கி வாழ்வதுவு மெந்நாளோ [72]

[ஞா-பொ-ரை]: ஆண்டவனே! உன் மேலான சிப... இப்படித்தான், என்று ஒரு முடிவு கட்டிக் கொள்ள ... பெறுகிறதற்கு எவராலும் முடியாத கருமம் ஆன... இந்த அடியேனும் அப்படியே முடிவு கட்ட முடியா வி... லும், மனசில்ஊசாடி வரும் வஞ்சக வினைகளை நீக்கி ... மென்னும் மாணிக்கப் பொருளை பூமியில் எல்லாருக்கு ... ரே சமமாக வழங்கும் தன்மையில் என்னை ஆக்சி விட்... அப்போது உன் சிபத்தை அடையும் தத்வம் தெரி... ஆனதினால் நான் அப்படி யடைவது எந்தக் காலம் எ-று

அஹதியத் தும்முதலாய் ஆருமக்கா மும்கடந்து
ஜெகதலந்தி இன்சானொளி ஜெயிப்பதுவு மெந்நாளோ [73]

[ஞா-பொ-ரை]: அஹதியத்து முதலான ஆறு வ... யான மகாம்களையும் ஒன்றொன்றாய் கடந்து கொண்டு ... பால் இன்ஸான் தான் அமானித தோரணையில் ஸ்வா... மடைந்துகொண்ட குதுஸியத்தான பேரொளியில் ஒளி... கலந்து ஜெயித்துக் கொள்வதானது எந்தக் காலம் எ-று

பார்வை கேள்விவாசம் பற்றிநிற்குந் தொட்டறிவும்
நேர்சுவா சந்தனிலே நிறம்பிநிற்ப தெந்நாளோ [74]

[ஞா-பொ-ரை]: பார்வை கேள்வி, வாசம்ருஷிகரம் தொ... ட்டறியும் அறிவு முதலான ஐம்புலன்களையும் சுவாசத்தி... நேர்மையான சம்பந்தங்களுடன் செலுத்தி நிறப்பிக் கொள்... கின்ற காலம் எந்தக்காலம் எ-று

பூதமைந்து புலன் பொறியும் போக்கிப் பொருளதனை
வேதச் சுருதியுடன் விளங்கி நிற்ப தெந்நாளோ [75]

[ஞா-பொ-ரை]: அறு சிறுகள் என்று சொல்லப்ப... ஐந்து பூதியங்களையும் ஐந்து அறிவு களான புலன்களையு... அவைகளின் ஸ்தலஸ்தாபணங் களான ஐந்து பொறிகளையு... நப்சின் கொழுகுதலை விட்டும் அறப்போக்கி வேதத்தி... சொல் பிரகாரம் தன்னை யுணர்ந்து கொள்கின்றது எந்... காலம் எ-று

...நமுதற் சிரசளவும் பரிவா முறுப்புகளைச்
...லியா மற்குருவைக் காண்பதுவு மெந்நாளோ [76]

[ஞா-பொ-ரை]: பாதம் தொடுத்து சிசளவாய் அடுக்கப் ...ருக்கும் ஜடல உறுப்புக்களைப்பற்றி நம்பிக்கையும் ஆசை ...கொள்ளாமல் தன்னிலையான ஒருமைச் சாதனையில் தன் ...ருவைத் தானாகக்கண்டு களிப்பதுவும் எந்தக் காலம் எ-று

ஆதியனாதி யடங்கலுமொன்றா யெழுந்து
...தி வடிவைக்கண்டு தொழுவதுவு மெந்நாளோ [77]

[ஞா-பொ-ரை]: ஆதியும், அநாதியும் அதுவாக ஒன்று ...டுப்போய் நின்ற மலிக்குல் குத்தூசென்னும் ஜோதியைத் ... வடுவமாகக் கண்டு அதை வணங்குவது எந்தக் காலம்

ஈர்க்கம் பெட்டி தன்னி லேற்றிவைத்த தீபத்தைப்போல்
...மற்று நின்றதனை நிசமாக்க ளெந்நாளோ [78]

[ஞா-பொ-ரை]: ஈர்க்குகளால் பின்னப்பட்ட பல துவா ...களை யுடையபெட்டிக்குள்ளே பொருத்தி வைத்த விளக்கை ...ால் பலத்துப்போய் நின்றதாலும் மற்றப்படி ஜடத்தில் ...ரு காயம் ஸ்தாபிப்பதாலும் வேறு வகையான ரூபா ரூபத் ...தில் காணகப்படும் அந்த உஜீதை நீக்க மற்ற தான வேற்று ...மையில்லாத தொரணையால் ஒன்று படுத்திப் பார்ப்பதானது ...ந்தக் காலம். எ-று

வாக்கால் மனத்தால் வல்லகா யத்ததனால்
நோக்காற் காணாச்சுடரை நோக்குவது மெந்நாளோ [79]

[ஞா-பொ-ரை]; கல்விவான்களின் வாயால் பேசிக்கொண் ...லையும் பிதற்றலினாலும், முடிவை எத்திக் கொள்ளாதவர் ...ளின் வேனுமனசில் நினைக்கும் வஸ் வீண் பகல் வேஷக் ...ாரர் களான கள்ளக் குருமார்களின்ஆ காயப் பார்வைகளா ...லும் காணக இயலாத மெய்ச்சுடரான றூஹுல் குதுஸியை இதுதான் என்று பரிசுத்த மாகக் காண்கின்ற நாள் எந்த நாள். எ-று

ஏழுசிபாத்து மிருளா மெழுசிபத்தும்
ஆளு மறுசிபத்து லடக்குவ்து மெந்நாளோ [80]

(ஞா-பொ-ரை): இருளில் புதைந்திருந்த ஆதிகன் ஜ
மக்பியாவான ஏழு சிபாத்துக் களையும் ஆறு சிபாத்துக்கு
அடக்கி அத்துடன் ஒருமைப்படுவது எந்த நாள் எ-று

ஆறிரண் டங்குலமு மடக்கி யொடுங்கமுன்னே
பேறுதந்தே யுன்னளவிற் பெலப்படும் நாளெந்நாளோ (81)

(ஞா-பொ-ரை): பனிரண்டு அங்குலமான வாசி நிறு
யான ஸ்தம்பனப்பட்டு சூனியமாய் ஜடலம் விழுந்து போ
வதற்கு முன்னே ஆண்டவனே! உன் நற்பேரு வயமோட்
சாதனத்தை பண்ணியருள் பெறுகின்ற பெல பிடியான நாள்
எந்த நாள். எ-று

அறுநான்கி லோரெழுத்தை யகத்திற் பரிவாக்கிப்
பெறுபேறு பெற்றவர்பார் பேணிநிற்ப தெந்நாளோ (82)

(ஞா-பொ-ரை): இருபத்து நான்கு திரு அட்சரங்களை
யுடைய கலிமாவில் ஒரு எழுத்தாகிய ஹூவைத்தியான
மாக்கி வல்லமையை யடைந்தார்களே, அந்த மஹாத்மா
களின் அடிச்சுவட்டில் விழுந்து பணிவிடை செய்து அவ
களால் அருளைப் பெற்றுக்கொள்ளும் காலம் எந்தக் காலம்

உச்சிதனில் வைத்திருந்த வுட்பொருளை மெய்யாகப்
பச்சைமுத்துப் பவளமதாற் பரிவாக்க லெந்நாளோ (83)

(ஞா-பொ-ரை): ஜடலத்தில் உச்சியென்று சொல்லா
நின்ற நேத்திரத்தில்வீசி இலங்கின்ற ஒரு பொருளான
குதுஸின்னும் ஒளிவை, காற்று, தண்ணீர், மண், நெருப்பு
இந்நான்கு அணு சிறுகளின் ஒன்றுபடுதலைக் கொண்டும்
தெரிந்து கொள்கின்றது எந்தக்காலம். எ-று

உச்சிக்குங் கீழா லுலாவும்புருப் பட்சிதனை
நிச்சயக்கூட்டிலடைத்து நினைப்பதுவு மெந்நாளோ (84)

(ஞா-பொ-ரை); நேத்திரத்தின் கோணத்திற்கு நேரே
கீழே உலாவிவருகின்ற புருவாகிய, சுவாசத்தை நிச்சயக்
கூடாகிய, உறுதிஎன்னும் கலிமாவுடன் சேர்த்துக்கட்டி சதா
தியானஞ் செய்து கொண்டிருக்கின்ற நாள் எந்நாள் எ-று

தொண்ணூ ரேடாறு தத்துவத் தொடரறிந்து
ண்ணூறைக் கல்புதனிற் ருங்குவது மெந்நாளோ. (85)

(ஞா-பொ-ரை) தொண்ணூற்றுஆறு தத்துவாதிகளையும்
டர்பிடியாக, நல்லபடி சந்தேஹமற அறிந்து, அதற்குள்
ன்ருகச் சிச்கியிருக்கின்ற தன்ஒளிவான உண்மையை மன
தில் பதிய வைக்கின்ற நாள் எந்த நாள் எ-று

முந்நூற்றுப் பத்தாய் முழங்கிவிடு மிசுமாய்ந்து
முன்னூர்க் கடலதற்குள் மூழ்குவது மெந்நாளோ. (86)

(ஞா-பொ-ரை) முந்நூற்றுபத்து இஸ்முல் அஉலத்தை
ம் ஸ்தாபிதப்படுத்தி, முச்சுடர்க் கடலான ஜனுல்எகீனில்
முழக்கஞ் செய்வது, எந்தநாள் அதாவது: உள் நாவுக்குள்
ளே தொனிக்கின்ற வலம்புரியை திக்ருக்கிக் கொள்ளுதல்
கருத்து எ-று

தொண்ணூற் றிண்டாய்த் துலங்கும் இசிமதுதான்
ன்னுள் மூன்றைம்பதிலே தரித்திருப்பதெந்நாளோ (87

(ஞா-பொ-ரை) அப்ஜதுக் கணக்கில் தொண்ணூற்றி
ரண்டு இலக்க முடைய இசும் எதுவோ, அதை ஷி கணக்
கில் நூற்றுஐம்பது இலக்க முடைய இசுமில் சேர்த்து தியா
னம் பண்ணுகின்ற நாள் எந்த நாள் எ-று

ஆறுபத்தா றட்சரத்தில் லடங்கிய சூட்சமதை
நூற்றிரண்டு பதினுன்கில் நுவன்றறிவ தெந்நாளோ (88)

(ஞா-பொ-ரை) குர்ஆனில் அறுபத்தாறு அட்சர முடைய
இசும் எதுவோ அதை நூற்றிரண்டு அட்சர முடை இசு
முடைய திக்றில் பதிநான்கு வகையாகப் பிரித்து தியாணம்
பண்ணுகின்ற நாள் எந்த நாள் எ-று

வீறுகொண்ட வைவருத்தான் விளக்குதூப தீபமது
வேறுபட்டும் போகுமுன்னே விளங்கிநிற்ப தெந்நாளோ (89

[ஞா-பொ-ரை] மஹா பாரக்ர மசாலிகளான அணு சிறு
கள்ஐந்தும் ஒருவருக் கொருவர் எழுந்து விகாரப்பட்டு
போர் செய்யும் சமயம் ஒன்றும் ஜடலத்தில் தூண்டாமல்

பிரகாசித்துக் கொண்டிருந்த விளக்காகிய நூறுல் ஐனு...
ஆவியாகிய றூஹின்காந்திப் புகையும் அமர்ந்துபோய் ...
லம் கீழே விழுந்து போகுவதற்குள்ளாக அந்த தீபஜோ...
யைப்பகுத்து அறிந்து கொள்ளும் காலம் எந்தக் காலம் எ-று

நாலிரண்டும் நாற்பதும் நடுவினு லிரண்டுமதிற்
பாலும் நெய்யும்போல பரிந்துநிற்ப தெந்நாளோ [90]

[ஞா-பொ-ரை] அப்ஜது கணக்கில் நாற்பதாம் இலக்... திற்குரிய இஸ்மை ஆறுகலையான சந்திர வட்டத்தில் ஸ்த... த்து பாலும் நெய்யும் சம்பந்தப்படுத்திய விதமாக விர... செய்து கொள்கிறது எந்தக் காலம் எ-று

நாலோடு நாற்பதுவும் நாலிரண்டு மொன்றுன
நாலிரண்டு நாலுமன சில் நன்றுவ தெந்நாளோ [91]

[ஞா-பொ-ரை] அப்ஜது கணக்கில் நாற்பத்தெ... இலக்க முடைய இஸ்மை ஹாமீமில் நடுவிரல்வரச் செய்... பன்னிரண்டு மன்சில்களான லாஇலாஹ இல்லல்லாஹு... நல்லபடியாக வாசியில் நடனம் பெறச்செய்வது எந்... காலம். எ-று

எண்சாணுடம்பதனை யெரிந்தே யுனதருளை
இன்சானுக்கு குள்ளிருந்தே யிறைஞ்சுவது தெந்நாளோ [92]

(ஞா-பொ-ரை] எண்ஜாண்குகையான ஜடலத்தை நாள... வட்டத்தில் குறைத்து அதன் ஆங்காரத்தை அடக்கி ஆண... வா உன் மேலாம்பரமான திருவருளை அந்த ஜடத்தில் வை... தே சந்தித்து வணங்குவது எந்தக் காலம் எ-று

அஞ்சான காய மழிந்து பனுவாகித்
துஞ்சாத சோதியரு டுலங்குவது மெந்நாளோ [93]

[ஞா-பொ-ரை] ஐந்து அநுசிறுகளால் அரசாட்சிசெய்... நடத்தப்படும் ஜடலத்தின் அந்தகார சேஷ்டைகளைப் ப... செய்து என்றும் அமராத பரஞ்சோதி விளக்காகிய நூறுல் ஆலத்தைப் பளீரென்று வாலசூரிய உதயம் போலத் துல... க்க் காண்கின்ற நாள் எது எ-று

வால சுரூபமதாய் வண்மையொடும் வந்துதித்த
கோல மென்னுட்காட்டிக் குறிப்பாத லெந்நாளோ [94]

ஞாபொ-ரை] பதினாறு வயதுமுகவரை கீருதவாலை சொரூபமானது, என்ஜடலத்தின் கோலத்துடன் ஒன்றுபட்டு குறிப்பாகுதல் எந்தக் காலம் எ-று

நீலநிற வண்டுவந்து நிலவுபிறை யைச்சார்ந்த
சீலம்போ லென்னில்வந்து தீனருந்த லெந்நாளோ [95]

[ஞா-பொ-ரை] நீலநிற வண்டாகிய, நேத்திரக்கருநீல வட்டத்தில் நிலவு பிறையாகிய றூஹுல் குதுஸியில் தரிசனையோடு ஒன்றுபட்டுக் காட்சியாக மஹாஇன்பத்தேனை அதாவது ஹு என்ற கலிமாவை நிரப்பமாக்கிக்கொள்வது எந்தக் காலம் எ-று

காலுமலை கைபிடித்துக் கட்டனையாம் நடுவனைச்செங்
கோலையென்னுட் காட்டிக் குணமாக்க லெந்நாளோ [96]

(ஞா-பொ-ரை) நாயனே உன் காலை அதாவது, சுவாசமென்னும் காற்றை-மலையாகிய, புருவமத்திபஸ்தானத்தை நோக்கி, அனுப்பி, கைபிடித்து,உன்னுறை அந்த இடத்தில் சந்தித்து நடுவனையாகிய இருதயஸ்தம்பத்தில் இருந்து நினைவைப்பூட்டி, சமஸ்தமும் உன்குணத்தில் திருப்பிக்கொள்வதானது இனியெந்தக்காலம் எ-று

பாலுந்தேனும் போலே பரிந்திரண்டு மொன்றுக
மேலத்தெரு வீதிகளில் வீற்றிருப்ப தெந்நாளோ [97]

(ஞா-பொ-ரை) பாலையும் தேனையும் ஒன்று கூட்டி வார்த்தெடுத்து அருந்தின மாதிரியாக காலிக்கும் கல்க்கும் இஷ்கென்னும் மதுரத்தில்ஒன்று கலந்து மேலத் தெரு வீதி என்ற காபகௌஸைனில் வீற்றிருப்பது அதாவது றூஹுல் குதுஸி என்ற பரமாத்மாவுடல் விரவிக் கொண்டு மேல் உலகமாகிய அறிவினுடன் வாழ்ந்திருப்பது எந்தக்காலம் எ-று

நூலும்பல கற்றுணர்ந்த நூலினின் மயங்காமல்
நாலுமென்னுளாக்கி நடத்துவது மெந்நாளோ [98]

(ஞா-பொ-ரை) பலபல சாஸ்திரங்களைக் கற்றுஉணர்ந்து அதன் தெளிவில் வெளியாகும் மஅரியாவை மாத்திரம் அன்

பக்ஷிபாலே உறிவது போல் எடுத்துக்கையாண்டு யொ... மற்றப்படியதில் சொல்ல உலகமயங்காமல் அருசிறுவ... நான்கு பூதிய கிருத்தியங்களேயும் அடக்கி விட்டு அவை... ஒன்றுக்குள் அடயச் செய்து அவ் வொன்றையும் என... ளே சமதாகச் செய்து அதனல் நான் ஆலமெல்லாவற்... பரிபூரணக் கோலங்கொண்டு நிற்பது எந்தக் காலம் எ...

ஏலும் பொழுததனி லிறைஞ்சியுனேக் கண்டு நித்தம்
பாலும் நீருங்கலந்த பரிசாவ தெந்நாளோ (99)

(ஞா-பொ-ரை) சகலமான தத்வாதிகளேயும் உன... நடத்தாட்டுகின்ற என் இறையவனே! இந்த அடிமைப்... லாகிய நான், நல்ல திடக்காத்திர, சரீர பிஷ்டியுடன் உ... வும் ரோதிலேயே உன் அக்மல்ஷுஹூதை நல்லுண... செய்து உன்மேலான ஒளியின் தரிசனேயைக் காட்சிய... கண்டு எந்தநாளும் ஜலமும் பாலும் கலந்த தன்மைபோ... சதாநந்தக்கடலில் மிதப்பதானது எந்தக் காலம் எ...

மேல்வினேத் தித்திப்பால் வெட்டவெறும் நாளூரிற்
சூலமாம் முச்சுடரியின சூழ்ந்து நிற்ப தெந்நாளோ (100)

(ஞா-பொ-ரை) மனிதன் தன் ஊழ்வினேப்பயனல் எடு... வந்த இந்த ஜடலத்தின் ஆக்ரமத்தினல் ஆடிய ஆ... வோட்டங்கள் எல்லாம் படிப்படியாய்க் கழிந்ததின் பின்... அந்த ஊழ்விதியின் ஒருசிறுஅதிர்ஷ்ட வசத்தைக்கொண்... தன்பிறையாசையின் பெரும் இடுப்புக் கட்டினல் கண்... பிடித்த காமிலான குருவின் உபதேசமொழியின் தெளிவா... ஞான மதியின் உண்மையைக் கொண்டும் தஜல்லியாத்தி... மகத்தான தாத்தை அதாவது: தாய், தகப்பன், தா... என்ற முச்சுடர் பிரகாச பரஞ்சோதியைத் தெரிந்து தன... குள்ளே ஒடுங்கிவிடும் காலம் எந்தக் காலம் எ-று

மாலாகி யென்னுளத்தில் மயங்கிப்புத்தி யற்று நித்த
மேலாம் பரவொளியை வேண்டுவது மெந்நாளோ (101)

(ஞா-பொ-ரை) இந்த மயக்கத்தைத் தரா நின்ற உலக... தின் நாடகத்தில் மருண்டுகிடந்த மண்டி அறிவைதாண்டி...

...து இந்த அடிமையானவன் உனது மேலான மகாமன் ...தில் வெளிச்சம் செய்கின்ற குதுஸி என்னும் பேரொ ...யைக் கண்டு அத்துடன் விரகு நெருப்புடன் சம்பந்தப்படு ...போல் ஆகின்றது எந்தக் காலம் எ-று

...லமாம் கருவதுதான் சுகமா யுடலாகிக்
...பனி ரண்டில் நின்று காண்பதுவு மெந்நாளோ (102)

(ஞா-பொ-ரை) நாத விந்துவினேடு வந்து இந்த ஜடல ...த உற்பத்திசெய்து வெளிக்குக் கொண்டுவந்த கருவைத் ...ருப்பிக் கொண்டு விடக்கூடிய உபாய மார்க்கமான பன்னி ...டு சுவாசகலேயில் ஏற்றி வைத்து ஸமஸ்தமும் அந்த ...ரியின் கோலத்தில் கண்டு தரிசிப்பது எந்தக்காலம் எ-று

நாலு வழிதனிலே நலம்பெறவே மஹரிபத்தில்
...லு மகிழ்ந்தோட நல்குவது மெந்நாளோ (103)

(ஞா-பொ-ரை) சரியை, கிரியை, யோகம், ஞானம் என் ...ன்ற நான்கு பாதைகளில் ஒன்ருகிய, மெஞ்ஞானத்தில் ...மற்கூறிய அந் நான்கும் விலகி, அவ்வொன்றுடன் ஒட்டிக் ...காள்ள நிற்பது எந்தக் காலம் எ-று

தோலுந் துருத்தியுமாய்த் தொல்லுலகி லாகாமல்
...லம்அறு வாகுதனி லாகுவது மெந்நாளோ (104)

(ஞா-பொ-ரை) இப்பூலோகவாசியாக உடலெடுத்து ...ந்த காலந்தொட்டு இற்றைய காலபரியந்தம் சரீரத்தை ...ளர்த்து உலக ஏமாற்றத்திலேயே காலந்தள்ளி ஜடலம் ...ளேத்துக் களேத்து தோலும் நரம்புந் தொங்கி, துருத்தியை ...போல் ஆக விட்டுவிடாமல் ஆலம் அறுவாஹ் என்கின்ற ...னேவுக்குள் விரவிக்கொள்ளும் தன்மையை யடைவது ...ந்தக் காலம் எ-று

சால வுடலதுவாய்த் தலேதாடி யும்கரைத்து
மாலாகும் பெண்ணசை மயக்கறுப்ப தெந்நாளோ (105)

(ஞா-பொ-ரை) நாறி யழிந்து மண்ணுடன் ரஹித்து நசி ...து விடக்கூடிய பொய்க்கூடாகிய சரீரத்தை வெகு திறமை

யுடன் தடிக்கவளர்த்து அப்படியே கிழடுகளாகி தாடியுந் தலை
யும் முட்ட நரைத்து தள்ளாடுகிறவரையும் ஸ்திரீகளின்
மோக வினையத்தில் மூழ்காமல் கடைத்தேறி தன்னை யறிவது
எந்தக் காலம் எ-று

பெண்ணாசை மண்ணாசை பொருளாசை மேவாமற்
றன்னாசை யாலுளைந்து சார்ந்திருப்ப தென்னாளோ (106)

(ஞா-பொ-ரை) இந்த பூலோகத்தின் கண்ணுண்டா
மாய வினோதமாகிய பெண், பொன், மண்ணாகிய வீண் ஆசை
களில் இருதயத்தைக் காற்றாடியைப் போல் ஆடவிட்டலையா
மல் நிறுத்தி முக்கியம் மனிதன் அறியவேண்டிய தன் இயல்
கின் மோகத்தால் தன்னை யறிந்து கொள்ளும் நேர்வழியில்
சார்ந்து உளைத்துக்கொள்வது எந்தக் காலம் எ-று

உன்னாசை யென்னாசை யென்றும் பிணங்காம
லுன்னாசை தானுணர்த்தி யொடுங்குவது மெந்நாளோ (107)

(ஞா-பொ-ரை) ஆதியாகிய றப்பே! இந்த அடியேன்
உன்னுட்டத்தில் ஏற்பட்ட ஆசையென்றும் அல்லது என்னு
டைய நாட்டத்தில் ஏற்பட்டதென்றும் இரண்டுபடுத்திப் பாரா
யாகி விடாமல் எல்லா சமஸ்தமும் உன் ஆழிய திருநாட்ட
தில் நின்றுமே ஏற்பட்டதென்றும் ஒற்றுமைப்படுத்தி காரிய
சித்தியடைவது எந்தக் காலம் எ-று

கன்னா சவன்கலைப்பாற் கலங்கியுளம்வாடாமற்
பெண்ணா சையையகற்றிப் பேணுவது மெந்நாளோ (108)

(ஞா-பொ-ரை) கண்ணாக என்கின்ற நப்ஸ் அம்மாருவின்
மோக கலைப்பினால் இருதயமானது அழுக்கு நிறைந்துள்ள
கெட்ட குடியாகிப் போய்விடாமல் நடவடிக்கைகளிலேயே
ஸ்திரிகளின் மோகத்தைப் படிப்படியாய் விலக்கிவிட்டு முத்
தியை யடைந்து கொள்வது இனி யெந்தக்காலம். எ-று

வாணா லொடுங்கமுதல் வல்லவன்தீ தாறு தன்னைக்
காணாமற் போகாமற் காட்சிபெற லெந்நாளோ (109)

(ஞா-பொ-ரை) ஜடலத்தின் கண்ணே ஆத்மா இருப்ப
திசிடையே கை மெய்யாகி அல்லாவை யறிந்து அவனது
உண்மையான தரிசன தோத்ரத்தைக்கண்டு அதற்கடை
யாள மாகிய காட்சிகளையுந் துடர்பிடியாகக் கண்டு கொள்-
ளுதும் எந்தக்காலம். எ-று

ஊனாற் றடித்துடல முன்னடியைப் பாராமல்
வீணா யுழலாமல் வெளிகாண்ப தெந்நாளோ. (110)

(ஞா-பொ-ரை) எனதாண்டவா? இந்த ஜடலமானது
உன் திருவடிகளான பிரமஸ்ரூபத்தைத் தெரிசிக்காமல் நல்ல
அறுசுவையுண்டி பதார்த்தங்களை உண்டு நல்ல புஷ்டிபெறக்
கொழுத்து வீணுக்கு உலகத்தில் உழன்று தெரியாமல் வெளி
யாகிய தன்னைக்காண்பது எக்காலம். எ-று

காணுஞ் சொரூபமெல்லாங் கத்தன் மலுஹறென்றே
பேணிச்சுஜூதுசெய்து பெலப்படும்நாளெந்நாளோ (111)

(ஞா-பொ-ரை) பூலோகத்தின் கண்ணே நாம் பார்க்கக்
கூடிய தோற்றப் பொருள்கள் யாவற்றும் உண்மையில்
அல்லா உடைய வெளியாகுதல் என்ற திருத்தோற்ற
மென்று திட்டப்படுத்திக்கொண்டு ஒவ்வொரு வஸ்துக்கும்
தாழ்மையாக வந்தனஞ்செய்கின்ற பூரணகாலம் எது? எ-று

தானாய் அஹத்தியத்திற் றன்னுஹதத் தில்லமைத்த
மானார் முலையொளியில் மருவும்நா ளெந்நாளோ (112)

(ஞா-பொ-ரை) தன் அந்தரங்க சிபத்தைத் தானாகவே
அறிந்து தெளிந்து அஹதியத்தில் இருதயத்தைப் பூட்டி
ஒன்று பட்டபிறகு மகாமன் மகுமூதாகிய சுவர்க்கத்தின் முக
நிரை சீருத இளங்கன்னிகைகளின் ஸ்தன்னியபாறத்தின்
பேரொளிவில் அணைந்துதானும் ஒளிவாய் சம்மந்தமாகிவிடு
கிற காலம் எது?

அம்மாறத் தெனும் நபுசை யடைக்கியதி னுங்காரத்
துன்மார்க்கந் துரத்தித் துலங்கும்நா ளெந்நாளோ (113

(ஞா-பொ-ரை) மனிதனைப் பல கெட்ட வழிகளிலும்
நடத்திக்கொண்டு வருகின்ற நப்ஸ் அம்மாருவை ஒடுக்கி

அதன் ஆங்காரமென்னும் துன்மார்க்கத்தை நப்சைவிட்டு துரத்தியடிக்கின்ற காலம் எது எ-று

மிக்கலெவ்வா மாநபுசு மிகைக்கிமுல்கி மாநபுசும்
ஒக்கமுத்ம இன்னுவி லொடுங்கும்நா ளெந்நாளோ (114)

(ஞா-பொ-ரை) மூரியாட்டத்தையுடைய நப்சாகிய அம்மாருவை அறமாய்த்த பின்னுல் செய்யவேண்டிய தந்திரமாயிய நப்சு லல்வாமத்தையும், நப்சு முல்ஹிமாவையும், நப்சு முத்ம இன்னுவில் ஒன்றுசேரும்படியாக நடை பழகிக்கொள்கின்ற காலமானது எது எ-று

செக்குப்போ லேந்து திருக்கா யெழுமூச்சைச்
சிக்கென்று கண்டதிலே சேரும் நா ளெந்நாளோ (115)

(ஞா-பொ-ரை) இன்னும் செக்கானது சுழல்வதுபோல ஐந்து திருக்காக சுற்றி யெழும்புகின்ற சுவாசத்தை நாளும் வட்டத்தில்பழக்கிப்பிடித்துக் கண்டத்திலே வந்து நிற்கும்படியாக சாதனை செய்துகொள்ளும் காலமானது எது எ-று

வாஜிபுல் உஜூதும் வகைமும்கின் மூம்தனியும்
வாஜிபாம் சிபாத்ததிலே வணங்கும் நா ளெந்நாளோ (116)

(ஞா-பொ-ரை) வாஜிபுல் உஜூதாகிய ஒளிவையும் இன்னும் பலவகைப்பட்ட பல சாதனை வணக்கங்களையும் விட்டு நீங்கி ஒரு வழியான நினைவிற் கொண்டுபோய் நிறுத்தி அதிலே ஸமதாகும் காலம் எது எ-று

ஆசிக்குல் உஜூதாகி ஆரிபில் உஜூததின் பின்
வாஜ்புல் உஜூதாக வருத்தும்நா ளெந்நாளோ (117)

(ஞா-பொ-ரை) இன்னும் அன்பு என்கிற இஷ்க்கை ஒளிவாகக்கண்டு, அப்பால் அறிவைத் தெளியவைக்குதலை ஒளிவாகக் கண்டு அப்பால் நேத்ர ஜோதிமயம் நோக்கி ஒளி காண்குதலை வாஜிபாகின்ற காலம் எது எ-று

இத்தறுத்தே யீமா னிடையாமல் சிற்றதிலே
முத்திபெற்ற முத்தலக்கில் முங்கும்நா ளெந்நாளே (118)

(ஞா-பொ-ரை) இந்தப் புவியிற் கண்ணுண்டான சகல பாவதோஷங்களையும் சர்வநாசஞ்செய்து அப்பால் ஈமான் பிரகாசத்தைக் கண்ட பின்னுல் தன் சிர்ருகிய பரம ஒளிவை மோட்சமென்ற ஐனுல்எக்கீனில் கண்டு கலந்துகொள்கின்ற காலம் எது? எ-று

வித்து முளையெழுந்து விரிந்தகொப்பு முண்டாகிங்
சித்துத் தெளிவதனிற் சேரும்நா ளெந்நாளோ (119)

(ஞா-பொ-ரை) ஒரு சிறிய விதையால் மக்பியாயிருந்த பெரிய விருட்சமானது தன் கிளை குழைகளுடன் வெளியான மாதிரியாகி, இந்த ஆலம் வெளியான சிர்றைத் தெளிவது எக்காலம். எ-று

தத்துவத்தைத் தானறுத்துத் தலமேழையுங் கடந்து
குற்றமற்ற தாத்தனிற் கூடும்நா ளெந்நாளோ (120)

(ஞா-பொ-ரை) நப்சுகளின் தத்துவாதிகளை யெல்லாம் பஞெசெய்து ஏழு தலங்களையும் கடந்து குற்றமில்லாத பரஞ்சோதியில் ஒன்று கூடுகின்ற காலம் எது? எ-று

வித்திலா மரமுதலோ மேவும்வித்துத் தான்முதலோ
புத்தியினுற் றெழிந்திதனைப் புகலும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) வித்துதான் ஆதியா? அல்லது மரந்-தான் ஆதியா? என்ற கேள்விகளுக்கு அறிவைத் தெளியவைத்துப்பதில் கூறும் நாள் எது?

பூவுங்கா யுங்கனியும் பொதிந்தவித்துத் தன்னில் நின்று
மேவுசித்தன் விளையாட்டை விளங்கும்நா ளெந்நாளோ

(ஞா பொ-ரை) ஷ்டி வித்தில் தழையும் அத்துடன் பூவும் காயும் பழமும் உள் நுழைந்திருந்த மஹாசித்தன் விளையாட்டை தீபரமாக விளங்கியறிய வேண்டியது எந்தக்காலம்

பூவிலுறை வசமது போலே யென்னுள்ளமதிற்
கூவைக் குடியிருத்திக் கூடும்நா ளெந்நாளோ (123)

(ஞா-பொ-ரை) மலருடைய தேகமெல்லாம் பொதிந்து கொண்டிருக்கும் வாசனையைப் போல் ஹூவை என் இருதயத்தில் இருத்தி, நிரப்பமாக்கிக் கொள்கின்ற காலம் எது?

வேதந் தனக்கடங்கா மெய்ப்பொருளை யுள்ளமதில்
நீதமுட னேநிறுத்தி நிலைபடுநா ளெந்நாளோ (124)

(ஞா-பொ-ரை) முன்னுள்ள பின்னுள்ள நான்குவே களுக்குள்ளும் அடங்கி நிற்காத திவ்யபொருளாகியஉண் யை மனசில் நிறுத்தி நிலையில் அடக்கிவிடுவது எந்தக்கா

ஆரணத்தை யோதி யலையாம லேயுனது
பூரணத்தைக் கண்டு பொருந்தும்நா ளெந்நாளோ(125)

(ஞா-பொ-ரை) பகல்வேஷம் போட்டு வெறும் வே பாராயங்கள் செய்து அலையாமல் ஆண்டவனே! உன் சா யத்தான பூரணத்தைக் காணும் காலம் எது? எ-று

மந்திரமாய் வேதமுமாய் வண்மையுமாய் ஞானமுமாய்
தந்திரமாய் நின்றதனைத் தழுவும்நா ளெந்நாளோ(126)

(ஞா-பொ-ரை) இன்னும் வேதமும், மாந்திரீகம், வை தியமும்,மஅரிபாவும், தந்திரங்களும், இன்னும் எல்லா ஜா ஜாலங்களும்கூடி அது ஒன்ருக நின்றதே அந்த பூரண வஸ்த்தைக்கண்டு உண்மை கொள்கின்ற காலம் எது? எ-று

புந்திதனில் நின்றிலங்கிப் பூவுலகும் வானுலகும்
விந்தையதா யாடுமதை மேவும்நா ளெந்நாளோ (127)

(ஞா-பொ-ரை)தொப்பூழ்த்துவாரத்தின் வழியாகவந்து நின்று பதாதி கேசமெல்லாம் தன் மயமாக ஜோதி செய்யா நின்ற ஒரே யொரு மெய்யை ஒன்றுபடுத்திக் கொள்கின்ற காலம் எது? எ-று

ஷரீஅத்தும் ஹக்கீக்கத்துவும் சரீரமு முயிர்போலே
தரீக்கத்தாம் பஹ்றுதன்னைத் தாண்டும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) ஷரீஅத்தையும்,ஹக்கீக்கத்தையும் உட லும் உயிரையும்போல் கண்டு இனி தரீக்கத்தாகிய கடலை தாண்டி நிற்கிற காலம் எது? எ-று

எந்தப் பொழுதிலுமே யிதமாக என்னுளத்தில்
விந்தையாம் சிற்றுதனை விளங்கும்நா ளெந்நாளோ.

(ஞா-பொ-ரை) எந்தநேரமும் நல்ல வியாபகமாக என் இருதயத்தில் சிர்றைப்பற்றி விளக்கஞ்செய்வதுஎந்தக்காலம்

பன்னிரண் டாமெழுத்திற் பதிவாக்கு மூன்றெழுத்தை
யுன்னியுளத் திருத்தி யொடுக்கும் நாளெந்நாளோ(130

(ஞா-பொ-ரை) பன்னிரண்டு அட்சரங்கொண்ட கலிமா வில் மூன்றெழுத்தாகிய, ஹ்ரா, ஹி, ஹூ என்ற மணி மந்தி ரத்தை வாசியுடன் சம்பந்தப்படுத்தி பூதங்கள் புலங்களுடன் ஒடுங்குகிறது எந்தக்காலம் எ-று

முங்கவறி யாமூடன் முத்தெடுக்கப் போய்க்கடலிற்
றங்கிஹலாக் காகுமுன்னே தரிக்கும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) தண்ணீருக்குள் குளியோடத்தெரியாத மூடன்கடலுக்குள் மூங்கிமுத்து எடுக்கப்போய் ஹலாக்காகுந் தன்மை போல் உலகமென்ற கூமக்கடலுக் குள்ளின்றும் அழிந்து போவதற்குள்ளே, தன் சிர்றைத் தெரிந்து அதன் குணத்தில் நிணைவைக்கொண்டும் தரிபடுகிறது எந்தக்காலம்

அஹதா யெழுந்துலகில் அகுமதாய் வந்துனையே
அகந்திற் றெளிந்திடவே யாக்கும்நா ளென்ஞளோ

(ஞா-பொ-ரை) நாயனே நீ ஆதியில் அஹதாக இருந் தாய் அப்பால் அகுமதாக எழுந்துநின்ற உன் உஜூதை இருதயத்தில் வைத்து உன்றியுணருகிற ஊலம் எது? எ று

ஏகாந்த மெய்ப்பொருளை யெப்பொழுதுங் கண்டுகொண்டே
ஆகங் குளிரவென்னுள் ளடங்கும்நா ளெந்நாளோ (133)

(ஞா-பொ-ரை) யாதொரு துணையும் இணையுமின்றி அநாதியாக இருக்கப்பட்ட உண்மைப்பொருளை, எந்த நேர மும் கண்டு என் மனங்குளிர மனசில் அடக்கஞ் செய்கின்ற காலம் எது? எ-று

மெய்யறுத்து மெய்யதனை வெளியாக்கி யென்னகத்துள் [illegible]
ஐயமெல்லாம் போக்கியா ளாக்கும்நா ளெந்நாளோ ([illegible])

(ஞா-பொ-ரை) ஐடலத்தை மெலிய வைத்து தனி[illegible] இருப்பில் தன் உண்மையை யுணர்ந்து அப்பால் என் இ[illegible]யத்தில் உண்டான சந்தேகமெல்லாம் நீக்கிக் கொள்[illegible] காலம் எது? எ-று

மானுர் மயக்கவலை வந்தணுகாமற் காத்துத்
தானுக நின்று தவம்பெறுநா ளெந்நாளோ ([illegible])

(ஞா-பொ-ரை) மான்போன்ற சாயலையுடைய ஸ்தி[illegible]ளின் காம மயக்கத்தைத் தள்ளிவிட்டு தவத்தில் வேறு பா[illegible]கின்றி தனிமையாகவே நின்று தவத்தில் கொழுகிக்கொ[illegible]கின்ற காலமானது எது? எ-று

அஞ்செழுத் தலிபுலாம் ஹேமீம்தா லானதிலே
பிஞ்செழுத்தைக்கல்புகொண்டு பெலப்படும்நா ளெந்நாளோ [illegible]

(ஞா-பொ-ரை) அலிபு, லாம், ஹே, மீம், தால், என்[illegible] ஐந்து பஞ்சாட்சரங்களிலும், ஒன்ருகிய பிஞ்செழுத்தென்று[illegible] ஹூவை, இதயத்தில் பிடித்து இழுத்துக்கட்டி பலசாலி[illegible]கும் காலம் எது? எ-று

அஞ்செழுத்துப் பஞ்சபூதம் அஞ்செழுத்து அல்லாகு
நஞ்செழுத்தைக் கமலமதில் நாடும்நா ளெந்நாளோ ([illegible])

(ஞா-பொ-ரை) இன்னும் ஷை ஐந்து அட்சரங்களும் பஞ்[illegible] பூதங்களாக இருக்கும் இன்னும் அந்த ஐந்தெழுத்துகளு[illegible] அல்லா ஹூவாக இருக்கும் அதில ஒரு எழுத்தானது அ[illegible]தமானதும் நஞ்சுமாக இருக்கும் அதை இருதய பூஷணமா[illegible]கிலுல் அது அமிர்தமாகமுடியும், நாடாத கெடுவார்களுக்[illegible] அது நஞ்சாக மரணத்தை யநுபவிக்கச்செய்யும் அதை நா[illegible]கிறகாலம் எது? எ-று

ஹேமீம்ஜன் சீன்காபும் காபூஹேஐ ஐன்சாதுப்
காமில்முக் கம்மில்க் குருக்காட்டும்நா ளெந்நாளோ (12[illegible])

(ஞா-பொ-ரை) இன்னும் ஹே, மீம், ஐன், சீன், காபு[illegible] இன்னும் காபும், ஹேயும், ஏயும், ஐன் சாதும் காமிலா[illegible] சற்குருவாகிய தோற்றத்தில் காண்கும் காலம் எது? எ-று

[illegible]சிபனி ரண்டதனில் வாரதுவும் போறதுவும்
[illegible]சிமுனைச் சுழியி லுதிக்கும்நா ளெந்நாளோ. (139)

(ஞா-பொ-ரை) பனிரண்டு கலைகளாகிய வாசியில் போகி[illegible]ம் வருகிறதுமாக இருக்கும் பலஉபாதிகளையும் ஒரேநிதா[illegible] ஊசி நுனைபோல் இருக்கும் சுழிமுனைக்குள் வந்து [illegible]திக்கின்ற காலம் எது? எ-று

[illegible]ரசியமா முன்னுளில் நானென்ற அச்சரந்தான்
[illegible]ரேசிபோற் றிரும்பவந்து தெளியும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) இரகசியமாக ரோசிமீதாக்கில் நான் [illegible]ன்ற கோலத்துடன் இருந்த ஹூ அட்சரமானது. மறுபடி [illegible] ஒரு ஒளிவுபோல்வந்து என்னை சமதாக்கிறதுஎந்தகாலம்

கூசாம லேகலிமா குதாயோது மம்மொழியைப்
பேசாமற் பேசிப் பிதற்றும்நா ளெந்நாளோ (141)

(ஞா-பொ-ரை) இருதயத்தில் கூச்சத்தீர்ந்து கலிமாவில் [illegible]ல்லா சொன்ன ஒரே ஒருமொழியை வாயால் பேசாமல் [illegible]னதில் பேசி ஆநந்தமடைந்து பிரிவது எந்தக் காலம் எ-று

நேசமாய் லாஅுஹ இல்லா கெனும்மொழியைப்
பேசாம லேபுரட்டிப் பிடிக்கும்நா ளெந்நாளோ (142)

(ஞா-பொ-ரை) லாஅுஹ என்ற மந்திரமொழியையாதொரு கூச்சமின்றி நேசத்துடன் மௌனவாசி சாதனையில் திருப்பு[illegible]ரட்டிப் பிடிக்கின்ற நாள் எந்தநாள் எ-று

நேசந்தனில் நின்றிலங்கும் நிச்சயமாங் கலிமாவை
வாசிதனி லேபழக்கி வளர்க்கும்நா ளெந்நாளோ (143)

(ஞா-பொ-ரை) நேசமென்ற ஆஷிக்கில் வந்து சிக்கி இலங்கா நின்ற உண்மையான கலிமாவாகியஹூவைசுவாச[illegible]ற்ற இறக்கத்தில் பழக்கஞ்செய்து அப்பழக்கத்தை வளர்க்[illegible]கின்ற நாளானது எது? எ-று

லாஅுஹ இல்லா அந்த நன்றிதருங் கலிமாவில்
லாஇலா ஹாவை நீக்கி நாடும்நா ளெந்நாளோ (144)

(ஞா-பொ-ரை) லாஅனு இல்லா அந்த என்ற மொழி வில் லாஇலாஹா என்பதை நீக்கிவிட்டு நாடுகின்ற காலம் எது? எ-று

லாஇலாஹ இல்லல்லாகு லாமலிபு காபுமல்லால்
லாஹறுபு பீக்காவில் லாக்கிடும்நா ளெந்நாளோ (146)

(ஞா-பொ-ரை) லாஇலாஹ இல்லல்லாஹு என்ற மொழியில் தெளிவுபட நிற்கின்ற லாம், அலிபு, காப், இம்மூன்றையும் லாமல்லாம் ஹருபு, காபு, இவைகளை, இல்லாமல் ஆக்கி வெற்றியடைகின்ற காலம் எது? எ-று

லாபா இலாஇல் லல்லாகெனு மொழியில்
லாமவுஜூ தில்லல்லாவை நாடும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) லாபா இல இல்லல்லாஹு, என்ற மொழியில் லாமவ்ஜூது இல்லல்லாவை நாட்டத்தில் வைக்கின்ற நாளானது எது? எ-று

இசாறத் தலிபுலாமீம் இலா அஹதிய் யத்ததுமாய்
நிசானியாம் அலிபுலாமீம் நிரம்புநா ளெந்நாளோ (147)

(ஞா-பொ-ரை) இஷாறத்தாகிய, அலிபு, லாம், மீம், இலாஅ ஹதியத்ததுமாய், நிஷான் செய்கின்றதில் அலீபை யும், லாமையும், நிரப்புகின்ற காலம் எது? எ-று

பிசாறச்து காஹறுபு குவியத்திலே தாஞகி
யுசாரற்று நின்றதிலே யொடுங்கும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) பிஷாறத்தாகிய, காபு, ஹே, ஹருபு களை ஹூவியத்திறே தாஞகி, தன்னைமரந்து, ஸ்மரனையற்று நின்ற நிலையிலே ஒடுங்கின்ற நாளாகிறது எது? எ-று

மந்திரமாம் கலிமாவை மறக்காமலேயெனது
சிந்தைதனில் வைக்கவருள் செய்யும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) கலிமாவின் மந்திரமாகிய ஹூவைஒரு போதும் மறக்காத பழக்கஞ்செய்து சிந்தையில் வைத்துப் பதனஞ்செய்யற்கு, அருள்செய்வது எந்தக்காலம் எ-று

தன்சீகும் தசுபீகும் தன்சீ குமகுலதுவும்
இன்சானில் நின்றே யிலங்குநா ளெந்நாளோ (150)

(ஞா-பொ-ரை) தன்சீஹூம், தசுபீஹூம் தன் சீஹ்-மகுலதுவும், இன்ஸானில் வந்து நின்றிலங்குகின்ற காலம் எது? எ-று

லெய்சக்க மிதுலிசெய் யுன்னென்ற சொல்லதனில்
லாசக் கிரண்டுமொன்ருய் நாடும்நா ளெந்நாளோ (151

(ஞா-பொ-ரை) லைஸக்கமிதுலி, ஷையுன் என்ற திவ்ய மொழியில் இஷ்க்கின்புறத்தால் இரண்டுமொன்ருய்நாட்டஞ் செய்கின்ற காலம் எது? எ-று

மின்ஞெளிருங் காபதுக்கு மேவுமஹ ஞவிடுத்துத்
தன்ஞெளியிற்ற சுபீஹைத் தரிக்கும்நா ளெந்நாளோ (152

(ஞா-பொ-ரை) ஒளி செய்கின்ற, காபுக்கு நேராகிய அர்த்தத்தைத் தெரிந்து, தன்சிர்ருகிய, தசுபீஹைத் தரிப்படுத்துகிற காலமானது எது? எ-று

காபதுதான் சாயிதாக் கலந்திருக்கும் வேளையிலே
மாபீகிதசுபீஹாய் வணங்கும்நா ளெந்நாளோ (153)

(ஞா-பொ-ரை) மேற்கூடிய காபானது, ஒன்று பட்டுக் கலந்திருக்கின்ற சமயத்தில் வேறு, பிணக்கற்ற திக்ருகஅதை வணங்குகின்றது எக்காலம். எ-று

ஒகுவசமீ வுல்பசீறென் ருேதுகின்ற விண்மை தனிற்
பகுமாய்த் தகுலீலைப் பகரும்நா ளெந்நாளோ. (154)

(ஞா-பொ-ரை) ஒஹூ வஸமீ உல்லபசீறு என்று சொல்கின்ற ஹக்கீகத்தில் தஹூலீல் என்னும் மணிமந்திரத்தை வசியஞ்செய்து வைக்கின்ற காலம் எது? எ-று

ஒகுவசமீ வுல்பசீ ருெளிருகின்ற பார்வை கேள்வி
லெகுவாக வந்தே லெபிக்கும்நா ளெந்நாளோ (155)

(ஞா-பொ-ரை) இன்னும் ஒகுவஸமீ உல்பசீறு, என்ற பார்வை, கேள்வியாகிய கண் புலன், செவிப் புலன் மெத்த இலேசசாக வந்து, ஒளிசெய்கின்ற நற்காலம் எது?

ஒருபாகம் தன்சீகு மொருபாகந் தஸ்பீகும்
இருபாகம் ரண்டுமொன்ரு யிருக்கும்நா ளெந்நாளோ

(ஞா-பொ-ரை) தன்சீஹுடைய பாகம் ஒன்றும் தஸ்பீஹுடைய, பாகம் ஒன்றும் ஒரேபாகமாகவந்து, ஒன்று கிற காலம் எது?
எ-று

குல்லுன் லெகுக்கானித்தூன் என்னுங்குணமானசொல்லின்
அல்லும் பகலு மமையும்நா ளெந்நாளோ (157)

(ஞா-பொ-ரை) குல்லுன் லகும் கானித்தூன், என்ற அருமைபொருந்திய சொல்லின்படி, இரவு பகலாக அமைந்து விடுகிறது, எந்தக்காலம்
எ-று

வாசி பனிரண்டும் வகையா யொடுங்குமதில்
நேசமதி லேயருளை நிறுத்தும்நா ளெந்நாளோ (158)

(ஞா-பொ-ரை) பன்னிரண்டு சுவாச கலைகளையும் சிறிது சிறிதாகப் பழகிக்கொண்டு வந்து ஒடுங்கி அதில் மனநேச தை நிறுத்தி யருள்பெறுகிற காலம் எது?
எ-று

பேசியே சொன்னதெல்லாம் பிசகாமற் ருனறிந்து
நாசிக்குமேல் நின்றருளை நல்கும்நா ளெந்நாளோ (159)

(ஞா-பொ-ரை) அல்லா குர்ஆனில் சொன்ன சலாம் களெல்லாம் ஒன்றும் பிசகாமல் அவைகளின் தோரணையான பாத்தின் அர்த்தங்களை உணர்ந்து நாசிக்கு மேலாலே நட னஞ்செய்கிற திருவருளை நாடிக்கொண்டிருப்பதுஎந்தகாலம்

நானென்ப திற்பார்க்கில் நானென்ப தைக்காணேன்
தானென்ப திற்கூடித் ததும்பும்நா ளெந்நாளோ (160)

(ஞா-பொ-ரை) நான் என்றதைப் பற்றி எவ்வளவோ ஆராய்ச்சி செய்து பார்த்தும் அப்படி ஒன்றும் தோன்ரு ததினுலே, இனி அது தான் நித்தியவஸ்து என்று, ஆநந்திப்பது எந்தக்காலம்,
எ-று

...னுங் குடிபதியும் குல்லுமிவன் தானுன
...ரனின் பதையருந்தித் தெவிட்டும்நா ளெந்நாளோ (161

(ஞா-பொ-ரை) ஜடலத்தின் எல்லா உறுப்புக்களும், அது ...குஸ் தானங்களும், மற்ற எல்லா நூதன தோற்றங்களும் ...லாவின் தோற்றமென்ற தேனையருந்தி சொக்கி நிற்குங் ...லம் எது?
எ-று

அல்ஹம்து லில்லாகி யுனை நான் புகழுகிறேன்
...ல்பசலாத் தின்வசலா மாலநயி மேற்சொரிவாய் (162)

(ஞா-பொ-ரை) அல்ஹம்து லில்லாஹி, என்று நாயனே ...ன்னை நான் புகழுகிறேன். ஸலவாத்தும் ஸலாமும் உன் ...ருல் நாயகமவர்களின் மீது சொரிந்து விடுகிறேன் எ-று

நாலிகலி பத்துடனே நல்லஅசு ஹாபிகள்மேல்
...ல்க ளடங்கலின்மே லவன்பொருத்த மாயிருப்பான் (163

(ஞா-பொ-ரை) குல பாக்களான நான்கு யார்களுடன் மற்ற கனதிவான்களான அஸ்ஹாபி மார்களையும் நான் ஸ்தோத்திரஞ் செய்வதைக் கொண்டும் பொருந்திக் கொண்டேன்.

ஈரடிக் கொச்சகப்படல முற்றிற்று

ஆக படலம் 20க்குத் திருகவிதை 578

இன்சான் படலம்

தொங்கல்

1, 2, 3, 4-ம் பாடல்கள்

இந்த இன்சானி லிருக்கும் நாளி, லிசைந்த கால்கைமே லுறுப்பானதும்-வந்த வொன்பது வாசல்களும், வசந்த தோல் ரோமம், நரம்புகளும்-தந்தத் தசை ரத்த மென்புமுளை தகுத் து ஒழிவிலகில் மசிரூனதும், முந்த தாத்தாகிச் சிபாத்தானது முடுக அசுமாமுல்லு கொத்தானதும் (1)

ஆகும் அவ்வலு மாகிறது, மடுக்க ஒல்லாகிர் ஒல்ல
னும் ஏகும் பனுபக்கா ஹயாத்துமற்று. மிசைந்த நபி
பாத்தானதும்-சாமுன் செத்துத்தா னேபிழைத்த சா
முஷாஹிதா முருக்கபாவும்-போக முடனுறாஜ் நுகூலான
பொருந்துந் தன்சீகும் தசுபீஹுதும் (2)

சொல்லும் திக்குறைந்து முண்டாணதும் தொகுத்
பனிரண்டு கலேயானதும்-வெல்லும் பதினெட்டுப் பங்கான
ம் விரித்த ஹறுயுமூன் றுனதுவும்-அல்லிலெழுத்தைந்
யிருநததுவு, மதின்மே லிலக்கமே ழானதும் ஒல்லு மொ
யொன்ப தானதுவு, மொடுங்கும் பனிரண்டு மீமானதும் (3)

மீமா னதுஹேமீ மானதுவும், விரிந்த தால் றேசீன்
வானதும், ஈமான் லாமலி பானதுவு, மிகைந்த கேசேறு
ளானதும் கோமா னிசுலாமைந் தாருனதுங், கொம்போ
ழுபத்திரண்டானதும்-சீமா னபியும்மத் தறியவேண்டித்,
மாய்ச் சயக்கூனில் அல்லா சொன்னுன். (4)

(ஞா-பொரை) ஒ! அறிவாளிகளே! இந்த ஜடலமான இன்சானுடைய சூறத்தில் இருக்கின்ற காலத்தில் இதற்கு தோதாகிய, கை கால் முதலிய அவயவங்களும் மேல்உறுப்பு களாகிய கண், செவி, மூக்கு, மூளை முதலிய இராஜ கருவி களும், அன்றிமேல் அண்டங்களிலும், கீழ் ஸ்தம்பங்களா பிண்டங்களிலும், உண்டான ஒன்பதென்ற நவ துவாரங்களை யும் (இன்னும்) சதை, இரத்தம், உரோமம், என்ற மூளை தோல் முதலான ஜடல சாதனங்களும், வஸ்த்து, தரிபட்டு ருக்கா நின்ற ஒ இலேஹில் மசீறு ன்னும் எபுருவமத்தியையு அப்பால் ஆதியில் கலந்துகொண்டு வந்த தாத்து, சிபாத்து களும், அப்பால் அஸ்மாவுல் லொகத்தானதும், (இன்னும்) ஆதியம் அந்தமும் அப்பால் வெளிப்படையானதும், உட் படையானதும் அப்பால்ம்நித்திய என்றதும் அநித்யமென்றது தும், அப்பால் ஆத்துமா, நபீஇதுபாத்துகளும், அப்பால் இன்ஸான் என்பவன் மரணத்தை அநுபவிக்கிறதற்கு முன் பாகவே மரணிக்கும்படியான தத்துவங்களையும், அப்பால் எக்காலமும் மரணங்கொள்ளாத முஷாஹிதா, முருக்கிபாவும் அப்பால் .ஸ்வாச பந்தனத்தின் தரப்பிலுண்டான வா

றம், இறக்கமும், அப்பால் தன்சீஹ தஸ்பீஹுᵘம் திக்றில் ரிந்தெடுக்கப்பட்ட ஐந்து வகைகளையும், கலேயில் பனி டும், அதில் இன்னொருவிதத்தில் பதினெட்டு பங்கான யும், அப்பால் மூன்று தத்துவ அட்சரங்களையும், பஞ்சத் ாதிகள், இருட்டிடத்தில் கஞ்சுல் மக்பியாக ஒழிததிருந்த யும், அப்பால் அந்த ஐந்து தத்வாகிகள், ஏழானதும், வாகிய சிபத்தில் ஒன்பது விவரங்களும், மீமில் பனிரண்டு தார கோலங்களும், இன்னும் அந்த மீமில் நின்றும் ஒரு றயும் ஒரு மீமும் எழுந்துவந்ததும், அப்பால் அதில் நின் ம் ஒரு தால, றே, சீன், வாவு, வந்ததும், அப்பால லாமும் லிபும் அப்பால் ஹே, சீனில் றுஹுᵘல்லா தரிபட்டதும், அ லை இஸ்லாத்தின் பதவிகள் ஐந்தும், ஆறும் உண்டான ம், ஷை அட்சரங்களுக்கு எழுபத்திரண்டு கொம்புகள் உற் தியானதும், நபியவர்களின் உம்மத்துகள் அறிந்துகொள் ம்படியாக, அல்லா சயக்கூனில் திருவுளம் பற்றினன் எ-று

கலிமா வில்ஹரு மானதுவும், கசடற்ற ஹலா லானதுவும்
லியா அம்மாறத் லெவ்வாமத்துச், சார்ந்த முகில்மத் முத்
ம இன்னத்-மெலியா முத்தலக் காணதிலே, மேவி நாசூத்து
மலக்கூத்துவும்-பொலிவாம் ஜபறூத்து மலக்கூத்துவும், பொ
ருந்தும் காகூத்பாகூத்து ஜெம்கும் (5)

(ஞா-பொ-ரை) இன்னும் ஜனங்களே! நீங்கள் சொல் லிய கலிமாவில் உள்ள ஹரும் இன்னதென்றும், ஹலால் இன்னதென்றும், அதிலுள்ள ஹலால் இன்னதென்றும், இன் னும் நப்சுகளான அம்மாரு லெளவாமா, முல்ஹிமா, முத்ம இன்னு முதலியவைகள் முத்தலக்கில் பொருந்தியவுடன் மல கடந்து முதலிய மகாம்களை அடைந்துகொள்ளும் எ-று

(இதையும் காமில்லான பீர் அதாவது, முகம்மதியா இடத் தில் கேட்டறியவேணும். உண்மையை அறியவந்தவனே கேள். மஅரி பாவானது, ஒரு சமுத்திரம் அதைக்கடத்திக் கரை சேர்க்கின்ற கப்பலானது முகம்மதாக இருக்கும். அந் தக் கப்பலில் கொண்டுசேர்க்கின்ற தோணியானது, நீ கை பிடித்த பரிசுத்த செய்குமார்களாக இருக்கும், திடனுக ம அரியாவின் சமுத்திரத்தைக் கடக்க

முகம்மதராகிய கப்பலுக்கு இயன்ற வேலேயே அன்றி
படகுகளான ஷெய்குமார்களுக்கு இயலாது, இது ஹ
இருக்கும். இனி ஷெபடி தொழுகையான அசலேப்ப
பேசுகிறேன்)

ஷறுத் தெட்டுச் சுன்னத்பனிரண்டதும், சார்ந்த பறு
பத்து நாலும், மறுத்தும் கியாபத்துப் பறுலாறதும், வா
முஸ்தஹிப் தொண்ணூற்றெரன்பதும் பறுலான வையெண்
மைம்பத்தொன்றும், பரிந்த வாஜிப்பறுல் பத்துநாலு
பொருக்கும்பதினுலு சிபாத் தானதும், பொருந்து ம
சிபத்தாருனுலும் (6)

(ஞா-பொ-ரை) அது கருமத்தில் எட்டு வகையான ஷ
த்துகளும், பனிரண்டு வகையான சுன்னத்துகளும், இருப
துநாலு விதமான பறுலுகளும், இன்னும் கிபாயத்துப் பறு
கள் ஆறும், முஸ்தஹப்புகள் தொண்ணூற்றி ஒன்பதும், இ
னும் இவைகளின் தொடர்பிடியான பறுலுகள் மொத்
ஐம்பத்தொன்றும் இன்னும் வாஜிபானது, அறுபத்துநாலு
இன்னும் சிபத்தானது பதினுலும், அல்லாவுடைய பங்கி
சிபத்துகள் ஆறும், இன்னும் எ-று

அடங்காத இல்முல் எக்கீமானதும், அறியும் படிஜனு
எக்கீமானதும்-இடங்காணும் ஹக்குல் ஏக்கீமானதும், மி
ந்தகமாலுல் எக்கீமானதும்-மடங்கா ஆலம் கபீருனது
வசந்த ஆலம் சமீருனதும்-தடங்கில்லா ஆலம் பக்கீருனது
ச்மைநதே இன்சானுய் வளர்ந்ததுவும் (7)

(ஞா-பொ-ரை) இல்முல் எகீனேயும், அல்லாவை அறி
யும்படியான ஐனுல் எகீனேயும், ஹக்குல் எகீன், கமாலுல்
எகீன், ஆலம் கபீறு, ஆலம் சகீறு. ஆலம் பகீறு, கூடி இன்
ஸான் படைகோலம் கொண்டவிதமான தொண்ணூற்ருறு
தத்துவங்களேயும் அறிந்ததோடுகூட (எ-று)

திருந்தும் சிதுறந்துல் முந்தஹாவும், திறக்கு மக்கான்
மகுமூதாவும்- பொருந்தும் காபக்கௌ சௌவதுனு, புகழாம்
வாசிலாசுல்த் தானுசீரு-அருந்தும் ஹலரத்து மலுவானதை,
யருந்திஞலீமா னீலேயிலாகும்-மருந்திங் கிஃதென்று வள்
ளல்தாமும் வாகாயெடுத்துத்தா னேதிஞரே (8)

(ஞா-பொ-ரை) சிதுறத்துல் முன் தஹா மகாமன் மகு
தா காபாகவ் சைனியா, சுல்தானன் நசீரு, வசீலத்துல்
லியா முதலிய ஸ்தானங்களுடன் எவ்விதம் ஜடலந்தோ
ற் றென்று பகுத்து தொகுத்தறிந்தால்தான் இன்சான்
லாகி ஈமானும் தகுந்த நிலேயில் நிற்கும் என்று நபிகள்
ம் கூறினர்கள் எ-று

நிலேயா மந்தஹே மீமானதும், நினேத்த தாஹாஏ சீனு
ம் தொலேயாக் காபுகே ஏஜன்சாதாய்த், துலங்கும் பிசு
லகுலமாக்கி அலேயா அல்ஹம்தாய் அஹதியத்தா யதிக
றுதுவா ஹிதியத்தாகி-நிலேயா காபுநூ னிரண்டுக்குள்ளே
ப்பமானது தானுகுமே (9)

(ஞா-பொ-ரை) அவ்விதம் நிலேயாகிய அந்த ஹேயில்
ன்றும் மீம் உற்பத்தியானதும் அதில் நின்றும் தாஹாவும்
யும், சீனும் உண்டுபட்டது. இன்னும் காபு, ஹே, ஏ,ஐன்,
து என்ற அட்சரங்கள், பிஸ்மில் அஉலமாயிற்று. அதில்
ன்றும் அஹமது ஆனது அஹத்தாகி அப்பால் வஹதத்
கி, அப்பால் வாஹிதாயிற்று. இந்த ஜாலம் பரகிதங்கள்,
பு நூன் என்ற உபய அட்சரங்களின் தத்வங்களேக் கொ
டுமாயிற்று. அதுவே தான் என்றது எ-று

இதுவெல்லா முள்ளகலிமாவிலே, யேவ லெடுத்துத் தான்
லகல் நீக்கிப்-புதுமையாகவே மாள்வர் மீள்வார், பூண்ட
ந்தெல்லா மவர்க்குவரும்-முதுமை இளமையும் சாதிக்கவு,
முன்பின்முடிந்ததுந் தானறிவார்-பொதுமை யானஜன் காமி
க்கிற, புந்திக்கலக்கமும் பயமுமில்லே (10)

(ஞா-பொ-ரை) இது முதல் சகலமும் அரை யப்பட்ட
லிமாவிலே நல்லதும் கெட்டதும் பொதியப்பட்டிருக்கின்றது
தில் நல்லதை யெடுத்துக்கொண்டு கெட்டதை விலக்கிவிட
வேண்டியது. அவ்விதம் கலிமாவில் நல்லதைக் கையாடுபவர்
ள் நரக யாதனேயை விட்டும் மீட்சியடைவதோடு கூட
அவர்கள் எண்ணிய சித்தெல்லாம் ஊழிகாலம்வரைக்கும்
ஆடி வருவார்கள். அத்துடன் அவர்களின் கிழப்பருவமும்
நீங்கி வாலிபமும் திரும்பும் சென்றகால முதலிய முக்கால

சம்பவங்களும் அறிந்துகொள்வார்கள். இன்னும் அவர்க கு மரணத்தை ஒட்டிய பயமும் அற்றுப்போய் ஜெயசீலரா இருக்க முடியும்.

பயமில் லாமலே பண்டுமின்றும், படைத்து மழிக்கவு மன
னது-மயமாம் திசையெட்டுக் கோணமீரேழ், வான்மேல் நி
க்குங் காரணங்க ளெல்லாம்-தயவான சிற்று தானுன
தனக்கு யாதொரு இணையு மில்லை-நயமாம் கமாலியத் து
கிக் கொண்டால், நாமம் காலிரு முகம்ம தியா (11)

(ஞா-பொ-ரை) அந்த வல்லமையில் கலந்த மகத்துவ தால் படைத்தழிக்கும் தத்துவத்துடன் விரவிக்கொண் ராவார்கள், இன்னும் எட்டு திசை பதினன்கு கோண அண்ட கோளங்கள், சுற்றிவரும் தத்துவமும் பெறுவார் தனக்கு நிகரில்லை யென்னும் சாபல்யத்திலும் தனித்திரு பார்கள். இவ்வளவு பாக்கியங்களும் தன்னளவில் கமாலி தாக்கிக்கொண்ட முகம்மதியா வென்னும் சிரோரஞ்சி ம பிண் வரப்பிரசாதத்தின் பொருட்டினலேயே கிடைத்த வேண்டியதாக இருக்கின்றது. எ-று

அல்ல சொன்னதை யறியவேண்டி, யலியா ருரை செ
சித்தா பானதிற்-சொல்லா ல்றிந்துதான் ஹாலிருக்கி
தொண்டன் றாகுதான் துலங்கச் சொன்னேன்-முல்லா வு
மாக்க ளாலிம்களு மூமின்முசிலிம்கள் முக்கம்மி லோரும் பி
லாற் சொன்னதையறிந்து பார்த்துப் பிழைகளுண்டாரு
நீர்க்வேணும். (12)

(ஞா-பொ-ரை) நாயன் தன் கிதாபாகிய குர்ஆன் ஷரீபி அருளிச்செய்த மகத்தான தத்வ சங்கதிகளை எந்தமும் இன் சான் என்பவன் அறிந்துகொள்ள வேண்டியது, என்று நாய கம் ஞான தீபமாகிய ஹலரத் அலியவர்கள் வற்புறுத்தி சொல்லுகின்ற மஅரிபா என்னும் கிதாபில் நின்றுந் தான் என் வேதபுராணத்தை முடித்திருக்கின்றேன். என் வேத புராணமானது, மனிதர்களுடைய ஆத்மாக்களின் துடர் களை யொதிக்கி பரமாத்மாவாகச் செய்யும். சக்தியுள்ளதா இருக்கின்றது. இது நிற்க, தன்னையறிந்த மகான்களான உலமாக்கள் என் புராணத்தை யுற்று நோட்டமிட்டு அவ்வித தவரான் குற்றங்கள் இந்த புராணத்தில் கிடக்கும்

ணத்தில் ஞாயமாகவே அவைகளை நீக்கித் திருத்தித் தரவேண்டியது. எ-று

(சமஸ்தும் தத்துவங்களே அன்றி பிழையே இல்லையென் பது மகான் அவர்களின் கருத்தும் துணியும் என்பது)

பிழைகள் தீர்த்தோர்கள் நாமவாரம், பிரிய நாமவ ராகு
மின்ன- முளைய முனவித்தி லிருந்தகோல, முன் அல் ஹா
மல்காக் கோவுக்கபாய்-யிளையவா யிருந்ததும் வளர்ந்து பின்
றல், விதியாங் கலிமாவி லீமான்கொண்டு-கிளையா மவர்
மும் வேறில்லாமற் கிருபைப் பெரியவன் கழல் சேரலாம்.

(ஞா-பொ-ரை) நமது புராணத்தில் குற்றங் கண்டு டிப்போர்கள் நாமே அவர்களாக இருக்கும். ஒரு விருட்ச மானது முளை கொண்டு வெளியாவதற்குமுன் ஷை விதை யில் அக்கோலங்கள் எப்படி யிருந்ததென்று சரிவர உணர்ந் தபோது என் புராணமானது, அல்லாவின் மஅரிபாவைப் பொதிந்த ஒர் ஞானமலையைப் போல் தெரியும் அதன் பிறகு தான் இன்சானகளுக்குக் கலிமாவின் அர்த்தங்கள் நன்கு தெளிவாய் விளங்கும். அப்போது தான் எல்லாவித பிளையும் போய் ஒருமையின் பூரணத்தில் தரிபட்டு அல்லாவைப் பொருந்திக் கொள்ளலாம். எ-று

உசிமுனையிலே நின்றதுபோற், றய்ய நுக்தாவில் முகாசி
மாவில்-மாசி மறுவில்லா மலுஹறிலே மருட்டுந் துன்யாவை
வெருட்டி விட்டு-மூச்சுப் பேச்சுமற் றுணவு மற்று, மும்கினு
லஜூத்தா னதிலே-காசி முகம்மது முகியிதீனுங், கலந்தர்
லிரும் வந்தமிர் தமீவார். (14)

(ஞா-பொ-ரை) அணுவான து ஒர் கூர்மையில் நின்று நிரளும் வண்ணமாக, ஷை வித்தான நுக்தாவில் யாதொரு மாசில்லாத தோற்றத்தில் மனதை மருட்டும்படியான மாய துன்யாவின் ஆசபந்தங்களை அறவெருட்டி விட்டு மூச்சு பேச்சு முதலிய ஆதாரங்களுமற்று தரிக்கின்ற மும்கினுல் உஜூது என்றதில் நமதாண்டவர்களான முகம்மதும் சற் குருவாகிய முஹியித்தீனும் காஜா கிலுறும் தா தா ஹயாத் தே சலாந்தரும் அந்த தவசாலையினிடத்து வந்து தேவா மிர்த சஞ்சீவியை வாயில் வைத்தூட்டுவார்கள், எ-று

குன்து கன்சுல்மக்குபியாவிற்பூண்டு, குன்னென்றெ[illegible]
துகுன் பயக்கூனை-முன்பின் வேறிணை யில்லாமலே, [illegible]
லக் கானநல்ம குரூக்கிலே-உன்னு முன்னறக் கலாமு[illegible]
முயர்ந்த ஹக்காயிக்கு பகுறுக்குள்ளே-துன்னும் அல்[illegible]
யுல்க் கையுமான, துலங்கும் பார்வையு மிடைவிடாது (15)

(ஞா-பொ-ரை) குன்த கன்சுல் மகுபியாவில் இருந்து அப்பால் குன்னென்று உதயமாகி, அப்பால் குன்பயக்கூ[illegible] என்று உற்பத்தியாகி, யிருக்கும் இணையில்லாத முத்தல[illegible]கிய மஉஷுகில் நின்றும் அதன் சிர்றியத்தாகிய ஹகாயி[illegible]கள், ஒரு சமுத்திரமாக அலை மோதிக்கொண்டு நின்றது அதில் நின்று அல்ஹையுல்கையும் அதாவது மக்ஸதான[illegible] கண்ணும் செவியுமாய் உற்பத்தியாயிற்று எ-று

அதுனன் கிளைவந்த முஹம்மதுவே, அல்லா சுலாம் சொ[illegible]
ன்னன் ஜிபுரீல்வந்தே-பொதுவானதோப்பின்கனிகொண[illegible]
தே பொருள்முந் நூற்றுப்பத்தின் மூன்றுவகை-இதமா[illegible]
வறிந் தருந்த வேண்டி, யிறையோன் மகிழ்ந்துமக் கிறங்கி
விட்டான்-அதபா யிதையறிந் தருந்தாதவர் அல்லா நல்லும்
மத்தல்லவென்ருன். (16)

(ஞா-பொ-ரை) ஒரு சமயம் அல்லாவின் ஹலரத்திலிருந்து ஜிபுரீல் நாயவர்கள் சமுகத்தில் வந்து நாயகமே! தேவரீர்வர்களுக்கு ஆதியான நாயன் சலாம் சொன்னன், என்று சொல்லிச் சொன்னதாவது, சொர்க்கலோக மென்கிற சுல்து தான சீருவில் நின்றும் கமழா நின்ற சமஸ்தமும் கூடியிருக்கின்ற பூங்காவில் நின்றதும் மஅரிபத் கலிமா என்றதோர் கனியைக் கொண்டுவந்தேன் அதன் சுவையாகிறது, முந்நூற்றுப் பதின்மூன்று வகையான அர்த்தசாரங்களாக இருக்கும். அந்த சாராம்ஸங்கள் எல்லாவற்றையும் தாங்கள் அறியும்படியா, என் மூலமாக நாயன் தங்களுக்கு அத்தாட்சியான குர்ஆனை இறக்கிவைத்தான். ஆனதால் அந்த மதுரித்தபாகமாகிய கனியை அருந்தும் பக்குவா பக்குவம்போல் அருந்தத் தெரியாதவர்களெல்லாம் உங்களின் உம்மத்தில் இல்லாத ஈனர்களாக இருக்கும், என்று நாயன் உறுதிப்பாடான வார்த்தையாக திருவுளஞ் செய்தான் என்பதே. எ-று

[illegible]நூற் றிப்பதின் மூன்றுவகை, முத லக் கானநற்
[illegible]மா விலே-தன்னூ ணுகவே முன்பிற்சொன்ன தாமை செய
[illegible]லாங் காமிலாகப்- பன்னூ முந்நூற்றுப் பதின்மூன்றை
[illegible] பழகுங்கனி தின்ருற் பசிதீர்ந்திடும்-முன்னு முதலவன்
[illegible]ன்னு னென்றே யுரைத்துச் சிபுரியீல் சுவனஞ்
[illegible]ந்தார். (17)

(ஞா-பொ-ரை) இன்னுஞ் சொன்னதாவது, ஹபீபே ஷெ[illegible] நூற்றுப் பதின்மூன்று வகையான முத்தலக்கில் அமைந்[illegible]போய் இருக்கும் கலிமாவில் ஒரு தத்துவத்தின் சிர்றில் [illegible]றும் முன்பின்னனை தீர்க்க தரிசனபுறத்தால் பழய நபி[illegible]களுக்கு கட்டளையிட்டிராத பல அத்தியாவசிய ஞானத்[illegible]ரவியாதிகளை யெல்லாம் தங்களின் உம்மத்துகளிடத்தில் [illegible]பமாகச் செய்து பூரணஞ் செய்யும்படியாக ஷெ இலக்[illegible]தில் ஒரு கனியாகத் தந்தருளினன். அதை இன்ஸான் [illegible]போது அருந்திக்கொள்ளத் தரம்வாய்த்தானே அப்[illegible]போதுதான் நப்ஸ் அம்மாருவின் தொழிலில் நின்றும் மிக[illegible]ம் கொடூரப்பட்டுள்ளசிப்யென்னும் அமராதஅக்னிஸ்வாலை[illegible]னது நூர்ந்துபோம் ஜடலம் சாதகப்புடும், என்று ஆண்ட[illegible]ன் திருவுளஞ் செய்தான் என்று அமுதர்கணங்களின் கோ[illegible]னகிய ஜிபுரீல் [illegible]றிவிட்டு ஸுவர்ணநாடு சென்ருர் எ-று

(இதன் கருத்தைப்பற்றி தற்கலைமகான் அவர்கள் ஞானமணியில் (தேமாங்கனி) என்று விபரித்திருப்பதை நான் அந்நூலுக்குரைவகுத்துள்ள புத்தகத்தில் எடுத்துக் காட்டிருக்கின்றேன், கண்டுகொள்க.)

அறியா தவர்களு மறியமாட்டார், அறிந்த பெரியோர்கள்
ளிவ்வார் சொல்லார்-செறியாத் தயிரினில் நெய்வருமோ,
சேர்ந்தவுறையதிற் சேராவிட்டாற்-பிறியா இணக்கத்திற்
பிணக்கில் லாட்டாற் பிரியா திருக்கலா மேலுமேலும்-குறி
யானது மட்டும்வேலை செய்தார், கூலி சொன்னதை வங்க
லாமே (18)

(ஞா-பெர்-ரை) அந்த இன்பக்கனியான மஅரிபத்தின் அருமை ருஷிகரந் தெரியாத மௌடீக ஜனங்கள் அறியமாட்டார்கள். அப்படியறிந்துகொண்ட நாதாக்கள் யாரிடத்திலும் சொல்ல மாட்டார்கள். உதாரணம், உறை என்னும்

கருவைக் சேர்ந்திராத தைர்த் திரளைகளைக் கடைந்து
எந்த் விததிலாவது, வெண்ணை யதில் திரண்டு வரு
வராது, அதுபோல் ஆதியை வணங்கும் வணத்தில் கலி
வின் சிர்ருகிய ருஷியைக் கலந்து கொள்ளாமல் தொழு
அது எப்படி பயன் கொடுக்கும்! அவ்விதஞ்செய்து ஹ
விரவினபோதுதான், எக்காலமும் ஜடலம் நித்தியமாயிரு
கும், அன்றிமற்ற வெறும் வணக்கம் எத்தனை நூருண்
ருந்து வணங்கின போதைக்கும் இன்ஸான் நாசிய
அழிந்துதான் போகும். எவனும் தன் எஜமானிட்ட அ
வலைச் சீராய்ச் செய்து வரும் பட்சத்தில் சொன்ன கூலி
கொடுக்க எஜமான் ஏன் பொருந்தமாட்டான் எ-று

வடிவை யறியாமல் நூற்ருண்டுநாள். வணக்க மறிய
வணக்கமதிற்-பிடிபா டாகவே யரைநாளிகை, பிரிய வண
கத்தில் வாராதென்ன -மடிவாய் ரசவாதம் பொடங்கள் போ
ட்டு, மாண்டுபோனவர் கோடி கோடி-நெடியோன் ஹல
தில் மாருமலே, நினைவாயிருப்பது நினைவாகுமே. (19)

(ஞா-பொ-ரை) வணங்குவதற்குப் பாத்தியப்பட்ட வஸ்து
எது ? என்று அறியக்கூடிய சக்தியுடன் இன்ஸான் அவதரி
திருப்பதனலே அந்த சக்தியைக்கொண்டு பகுத்தறியாமல்
ஏட்டுச் சுரைக்காயை நம்பி இன்ஸானது, மனஸ் ஒருபக்கம்
அவன் ஜடலம் ஒருபக்கம் கிடந்து நாம் எதை வணங்கு
கிருேம், என்ற குறிப்பும் அவனுக்கு விளங்காமல் குருட
பிறை பிறந்ததைப் பார்க்குமாதிரியாக, கக்பீர் கட்டி நின்று
வணங்கின வணக்கம் எத்தனை நூற்ருண்டுகள் கடந்தபோ
திலும், அந்த வணக்கமானது குறிப்பைத் தெரிந்து மனஸை
நேர்நிலையாக்கி வணங்குகின்ற நாதாக்களின் வணக்கம் ஒரு
நிமிஷம் நேரத்தின் தத்துவத்திற் கீடாகாது, அவ்விதம்
குறிப்பைக்கண்டு துடக்கை யறுத்துத் தொழுவதுதான் த
துவ இஸ்லாந்தின் சம்பூரண வணக்கமாக இருக்கும், இது
தான் இரசவாதசம்பிரதாய வணக்கமென்றறியாத நிர்ப்பா
கிய மனிதர் எத்தனையோ கோடி லட்ஷம் மதியீனர்கள்
இரசத்தை வாங்கி விராட்டிப் புடம்போட்டு ஊதடா என்று
ஊதி கைசேதத்துடன் வீணில் மாண்டு அழிந்துபோனர்கள்

என்பது, நினைவு, வாதம், என்பது பூத நப்சுகள் ஐந்
தும் வாதித்து கடைசியில் மீதம் ஒன்ருகிய ஆகாயமென்
னும் நினைவில் உறுதியாகிய கலிமாவைப் பொருந்தி நிற்
கிறது, ஞான ரசவாதம். எ-று

ரி அத்தானதி லல்லா வொன்றைத், தரிப்பாய் தரீக்
தி லறிவேண்டிச் - சுருக்கு ளிருக்கின்ற ஹக்கீக்கத்திலே
த முடன்கண்டு பேசிக்கொண்டால், அரிச மகன்றுபோய்
மஃரிபத்தி, லங்கொன்று மில்லை யானவிதைத்-தரிக்கு முத
வன் சொன்னதுபார், தாஹா மாஅன்சல் னுவதிலெ (20

(ஞா-பொ-ரை) தாஹமா அன்ஸல்னுவில் ஆண்டவன்
வணக்கம் செய்திருப்பதாவது; ஷரீஅத்தென்னும்பாதையில்
நடந்து, தரீக்கதின் தாவணத்தில் நின்றும் பழக்கஞ்செய்து
இதுதான் என்று அறிந்து அப்பால் ஹகீகத்தென்னும் மா
ளிகையில் வந்து வஸ்த்தைக் கண்டு முகாமுகமாகப் பேசிக்
கொண்டதன் பிறகு, இன்ஸான் உடைய அசூகையா துடக்
கானது, அறுந்து கழுவப்பட்டுப் போயிற்று. அப்பால் மஅரி
பத்தில் யாதென்றும் இவன் எடுக்கவேண்டிய கஷ்டங்கள்
ஒன்றுமில்லை, அங்கு ஹக்குடன் ஹக்காய் விரவி சதாநந்தி
யாய் இருப்பதுதான் காரியம். எ-று

கூவும்ஹேயுமொன் ருய்க்கலந்து குறித்த தலங்கொண்டு
பேசிக்கெண்டால்-ஹேயாகி கம்ப மேலேறியே கிளர்ந்த
நாட்டுக்குட் கூச்சமைந்து-பூவாய் நிறைந் தெங்கும் பூச்சொ
ரிந்து புகுந்து மேற்ருண்டிப் பூரணமாம் - மூவா னதுவட்டச்
சுழிக்குள்ளாடு மும்மலங் கடந் தப்புரமே (21)

(ஞா-பொ-ரை) கலிமாவில் ஹூவும் ஹேயும் ஒன்ருகக்
கலக்கும்படியாக, ஹக்குக்கும் கல்க்குக்கும் சந்திப்புக்கு ஏற்
பட்டிருக்கும் ஸ்தலங் கண்டு வினவிக்கொண்டால் ஹூ
வென்ற கம்பத்தின் மேலே ஏறி நின்று தனக்குச் சொந்த
மான பிரகாசம் பொருந்திய நாடான சுவர்க்கத்தில் சேரக்
கூசாமல் வாசனை மலர்கள் சொரிவதும், மும்மலாதிகள் சுழி
கிறதுமாக கடைத்தேறப்படுவான். எ-று

மண்ணுந் தண்ணீரும் பதினெருகால் மருவும் வாயி
காலுங்கூடி - அ ன லி லொருகாலு வாய்விற்காலும்
பதினறும் பூரணத்தி - லுண்ணும் வெளிநாற்றில் நாலு
மொட்டிவிளை யாயுருக்கங் கொண்டா-லென்னும் நரை தி
யில்லையென்றே இக்குறவ் சூறத்தி லிறையோதினன் (22)

(ஞா-பொ-ரை) அதற்கப்பால் மண்ணிலும் ஜலத்தி
பதினென்றேகால், காற்றில் ஒரு முக்கால், அக்கினியில் ஒ
கால் ஆகப் பதினறும் பூரணத்தில் திரண்டுவரும்படி
தவத்தை ஒருவன் கண்டு கையாடிவரும் பட்சத்தில்
னுக்கு நரை திரையுங் காணது என்று இக்றஃ என்ற சூ
தில் ஆண்டவன் திருவுளஞ் செய்தான் எ-று

சீமான் தீனூடே மீமும் ஐனுஞ் சிறந்தசப்ருடன் சுக்கூனு
பின்-ஆமா மதுகப்பால் ஹறுப தொன்றும் கடையா ளம்
நுக் தாரண்டு-தாமா மதுக்குள்ளே ஹறுபிரண்டிற் ருனெ
ருஹர்புக் கொருநுகத்து-நாமாம் வாவுக்குள் ளறியவேண்
நவின்ருன் காபவல் குறுஆனிலே (23)

(ஞா-பொ-ரை) மகா யோக ஸாதனத்தின் வழியாயி
தீனுல் இஸ்லாத்தின் நேர் பாதையுடன் மீமும், ஐனும் சே
ந்து, சுக்கூனுனபின் அதற்கப்பாலில் அடையாளமுடன் ஒ
அட்சரமானது, இரண்டுநுக் தாவுடன் அந்த நுக்தென்னு
ஒற்றுடன் உள் அட்சரம் இரண்டும் அதை வாவுக்குள்ளே
நோட்டமிடுவதால் விளங்கவருமென்று, கா பு ஒல்குர்ஆ
என்ற சூத்திர அதிகாரத்தில் அல்லா கட்டளையருளினன்

காணப் பெருங்காட்சி கமலத்துள்ளே, சாரண மான கண்
டிறந்தால்,-வாண லானது பிராணமாஞ, வளர்ந்து பூரணம்
நிர்க்களமாய்த்-தோணும் நபிபாதம் சிரசுமுதற், றுன்ப இன்
பமு மற்றவுந்தான்-ஆனல் அலா இன்ன அல்லா சொன்னன்
அலன்ன சறகுலெக்க சூறத்தில் (24)

(ஞா-பொ-ரை) உலகத்தில் எவரும் காணுத பெரியஅற்பு
தாகரமான காட்சிகளும் இருதய கமலத்திற்குள்ளே, காண்

டி. எல்லா விதத்திற்கும் ஆதிகாரணமாக இருந்த,
ண்ணனது திறந்துவிடும்போது, ஜடலத்தில் தங்குங்
லமான ஆத்மாவான மா நிட சக்தியானது,
வம் வளர்ந்து, முதிர்ந்துகொண்ட பரம ஆத்ம சக்தி
(இ-ள்) காமிலான சற்குருக்குள் சிஷியாட்களுக்கு உபதேசஞ்செய்து அவர்களின் பர்ஜக் ஆன மறுபிறவியை யடைவிடாமல் தடுத்து அவர்களின் நப்சை காமிலாக்க வேண்டும் என்று குர்ஆனில் நூற்று ஐம்பதுஸ்தானங்களில் ஆண்டவன் சொன்ஞன் இதுபோல பீருடைய உத்திரவின்படி நடந்து சாதிக்கவேண்டுமென்றும் குர்ஆனில் நூற்றைம்பது இடங்களில் சொன்ஞன் இந்த முந்நூறு ஸ்தலங்களில் சொன்னதையும் முந்நூறு பறுலுகளாக ஏற்படுத்திஞன். யாராகிலும் இந்த முந்நூறு பறுலையும் அறியாமல் முரீது வாங்கிஞர்களாஞல் அவர்கள் தடையன்றி இப்லீசுடைய வலையில் அகப்பட்டுத் தவிப்பார்கள், அவர்கள் ஷெய்காஞலும் சரியே, உலமாக்களாஞலும் சரியே. எ-று

அந்த நாளையி லிருந்ததுவு, மதைவிட்டே கெர்ப்பமான
துவு-மிந்தப் பூமியிற் பிறந்ததுவு, மினிமே லிதைவிட்டே யே
குவதும் சொந்தமாகவே யிருப்பதுவும், துய்யோன் தீதாறு
காண்பதுவும் விந்தை விதமெல்லா மறியப்பறுல், மெய்பின்
பீர்முரீ தானவர்க்கே. (11)

(இ-ள்) கன் ஜூல்மக்பியாவாக ஆதியில் மறைந்த இருளிற்குள் இருந்த அம்ஸங்களையும் அப்பால் அதில் இருந்து நுக்தாவாகி மாதாவின் கெற்பத்தில் வந்துதரித்ததையும், அப்புறம் ஆலமின்சானில் சரீரத்துடன் பிறந்ததையும், இனி இந்த சரியான நாட்டமானது சரீரத்தை விட்டும் போயடைகின்ற இடத்தையும் அப்படிப்போன நாட்டம்.எந்தஇடத்தில் நீடூழிவசிக்கின்றது.என்றதையும் தன்னைத்தான் தீதாறுகண்டுகொள்வதையும்.இந்தவிதமெல்லாம் முதலாவது அறிகிறது முக்கியபறுலாக இருக்கும் பீரிடம் முரீதுபெற்ற சீஷர்களுக்கு.

ஆக இஃதெழு பறுலானது, மறிய வேணுங்காண் பீர்மு
ரீதே யோகமானசொல் அல்லாசொன்ன, ஞேங்கிஞல் நா
லிற்ஹாலிருக்கும் ஏகமாய் முன்னே யிருந்ததுவு, மிப்போழி
ருப்பது முன்னில் நபிதோகை மயிலாக முன்னிருந்த. துணை
யே பனியாக்கு மெனவோதினன். (12)

(இ-ள்) ஆக இந்த ஏழு பறுலுகளையும் அறிந்து கொள்ள
வேண்டியது குருமார்களுக்கும் சீஷர்களுக்கும் அறியவேண்
டிய அவஸியமான கடமையாக இருக்கும் யோகிகள் அறிய
வேண்டியது,அல்லா சொன்னபடி மகாம் நான்கையும் அறிந்
துஒவ்வொன்றையும் அதனதன் குணகுணங்களைத்தெரிந்து
பணிசெய்து எதிர்முகதெரிசனையாக தன்னைக்கண்டு நூறுல்
முகம்மதியாவானது எக்கீன் மரத்தில் மயில் ரூபமாயிருந்த
போது செய்த திக்றைவாசியில் சந்பந்தப்படுத்த வேண்டி
யது. என்று அல்லா சொன்னன். எ-று

வாஹிது றப்பில் ஆலமீனை, வணங்கு முஷாஹிதா முருக்
கபாவைத்-காவித் தூங்கிஞல் நாலிருகுந்-தானே ஹர்லிரும்
ஹாலிருனல் ஆவிச்செய்கின்ற கோலமெல்லாம், மறிய லா
குமே யெவ்வெ வையுங்கோபித்து முலிஹிமா வைத்தாண்
டிக், கூடலாங் கூடக் கூடலாமே. (13)

(இ-ள்) ஒருவஸ்த்துடன் சேர்மானமாகின்ற வஹதா
னிய்யத்தின் துறையில் வணங்குகின்ற முஷாஹிதா, முருக்க
பா ஏன்ற இருப்பில் தூங்காமல் தூங்கின்ற நினவுகனவில்
முகம்மதியாவானது விஜயமாகும். அப்போது நீ இனிப்பெற
வேண்டிய பதவிகள் அனைத்தும் அது உனக்கு அறிவிக்கும்
நப்சு முல்ஹிமா உடைய சற்குணத்தைக்கூட பராக்காகாமல்
தாண்டி விடுவாயாகில் றப்புடன் சேர்மான மென்ற பரிபூர
ணத்தையடைந்து பாக்கியம் பெற்ருய். எ-று

எந்த வணக்கமுங் கபூலதாகு, மென்ருல் மூன்றுண்டு
முஷாஹிதாவில்-முந்த ஹறுபுலா மானதிலே முறையது ஷத்
ததானதிலே, அந்த முஷாஹிதா வானதொன்றங், கருளைக்
காண்பித்த பீர்சூறத்தை-இந்த வகை மூன்று முஷாஹிதாவு
மேக ஞயகன் பறுலா மென்ருன். (14)

(இ-ள்) எந்த வணக்கங்களும் கபூல் செய்யப்பட்ட
முஷாஹிதாவென்ற வணக்கத்தில் மூன்று முறையான வை
யுண்டு அல்லா என்ற திக்றில் முந்தின லாம் என்றதில் ஒரு
ஷத்தை வைத்து (இல்) என்று இருத்தி உச்சரித்து இழுத்
தால் உன் குருவின் ஸ்ரூபத்தில் ஒரு வடிவு தெரியும் அது
முகம்மதாக இருக்கும் இதை அல்லா முஷாதாவில் செய்ய
பறுலாக ஆக்கினன். எ-று

வந்த திப்படி குருனயத்தில, வள்ள லிறைசொன்னன்
பக்கருவிலே கொந்து வீசிய மகுபூபுகாண், கோமான் முருக்க
பா ஏழுவகை-அந்த வகையறியாதபேர்கட், கருளுந் தெரி
யாது முரீதுஹரும்-சிந்தை யிஃதெல்லான் தாஞேதினன்,
திறமாய்ப் பக்கருவின் ஜுசுவுக்குள்ளே. (15)

(இ-ள்) இதன் விபரம் குர்ஆன் ஷரிபில் பக்ருவென்ற
சூறத்தில் ஆண்டவன் கூறினன் மேற் கூறியதன் மஹபூபா
கிய முகம்மதின் வடிவைக்காணமல் முஷாஹிதா செய்தால்
அந்த வணக்கமும் ஹரும் அவர் வாங்கிய முரீதும் ஹருமாக
இருக்கும். அவருடைய உறுதியும் பயன்பெருமல் அழிவுபெ
றும் அவர்கள் அல்லாவின் சொந்தகிருபை என்கின்ற அருட்
பிரகாசத்தையும் தெரிந்து கொள்ளமாட்டார்கள். என்று இந்
தவிதமாக. அல்லாகுத்தஆலா தன் -திருவசனமாகிய குர்ஆன்
ஷரிபில் பக்ரு என்ற சுஜுவுக்குள்ளே தன் றசூலுக்கு விளக்
கமாக எடுத்து அறிக்கை செய்திருக்கின்ருன். ஆனதால்
முஷாஹிதா என்பது யாதொரு பற்றும் இல்லாமல் தன்
நப்சின் ஊசாட்டங்கள் அனைத்தும் அற்றிருந்து செய்கிற
தாக இருக்கும். எ-று

கூறி முருக்கபா வானதுதான், குறித்த எல்கையே நேர்
கொள்ளவும்-வீறில்லாமலே யிருப்பதுவும், வீரும்பரங்கொண்
டுபாராமலும்-ஊறும் வாய்வைத்தான் புசிப்பதுவு, முற்ற
மூச்சைத் தம்மாக்குவதும்-சீறும்-சீறுக் கோபத்தை யடக்குவ
தும், தீன்தீன் முஹம்மதைக் காண்பதுமே. (16)

(இ-ள்) இனி முருக்கபாவின் அம்ஸங்களைப்பற்றி விப
ரந் தெரியப்படுத்துகின்ரேம். 1-வது இருப்பதற்குத் தகுதி
யான ஒர் இடத்தைத்தெரிந்து கொள்வது,

2-வது மனதிலுள்ள ஆணுவங்கள்யாவையும் அறவே நீக்கிக் கொள்வதும். 3-வது ஆணுவம் முதலிய காமக்குறிகள் ஒன்றேனும் மனதில் வந்து ஊசாடாமல் இருப்பது 4-வது வெளியில் எழுந்து வரும் காற்றை வாய்வழியாக உறிந்து குடிக்கின்றது. 5-வது உள்ளிருந்து எழுந்து வருகின்ற உதானவாயுவை தம்மாக்கி அடக்குவது 6-வது எவ்வித வழியிலும் கோபத்தையடக்கி விடுவது 7-வது றசூலுடைய தரிசனையை வேண்டும்போது காண்கத்திறமைபடைப்பது. எ-று

இந்தஎழுவகை யானதையே. யேகனாயகன் பறுலாமென்றான் சொந்தமாகிய இறுஷாதிலே, தோற்றும் வெளியாகு மட்டுமாக-அந்தப் பார்வையில் ஐனுல்எக்கீ, னாகவேணும் காண்மூமின்களே-பிந்தமுன் சொன்ன ஹாலிருவைப், பேரின்ப மாக நபியோதினார் (17)

(இ-ள்) ஆக இந்த ஏழு ஷறுத்துக்களை முருக்கபாவில் செய்துகொள்வது. பறுலாக இருக்குமென்று ஆண்டவன் குர்ஆனில் திருவுள்ம்பற்றியிருக்கின்றான். இன்னும் முருக்கபாவின் காட்சிகளில் ஆகாய வெளியைப்போல் ஐனுல் எக்கின் தெரிசனை காண்பதுதான் தகுந்த நேர்வழியாக இருக்குமென்றும், அந்த காட்சியே லிக்காவாக இருக்குமென்று நபிநாயகம் சொன்னார்கள். எ-று

கணக்கு நிலைகொண்டு கருணை நபி ஹாலிருனாக்க லிப் புவியி-லிணக்க மறந்திடும் றப்புடைய, இல்மு வெளியாகும் லுல்மு போகும்-பிணக்கம் வாராமல் ஹாலிருவைப்-பெரிய வோர்மை கேள் மூமின்களே-மணக்குந் திருவாயிற் றிறந்து வெளி, வருங்காண் இல்முல் எக்கீனாதே, (18)

(இ-ள்) இந்தக்கணக்குப்படி பார்த்து இறுஷாது செய்வதால் இல்மின் சாரங்கள் அடையப் பெறுவீர்கள், றசூலையும் அடிக்கடி சந்திப்பீர்கள். நீங்கள் முன் செய்த பாவவினைகளையும் போக்கிக்கொள்வீர்கள். உங்களுக்கு யாதொரு பிணக்கமும் வராமல் விலகும், ஆனால் நீங்கள் ஷை சாதனையில் பெரியதோர் வைராக்யத்தைக் கையாட்சி புரிந்துகொள்ள வேண்டும். அப்போது இல்முல் எக்கீனுடைய சங்கையான திருவாசல் பளீரென்று திறந்து ஒரு மஹாபாரதூரமான ஞான உதயமானது வெளியாய் வந்து உங்களுடன் வசனிக்கும். எ-று

நபுசு ஹாலிறு தாயுமானால், நாலைந்து வாயிலடைபடுங் காண்பவுசு ஹக்குல் எக்கீனாது, பறந்து வெளியாகு பக்கா னக்காப-கபுசைனிஒள அதுனாவிலே, கலந்து காணலாந் திடந்தெரிய-முகுசின் திருநபு சானதுசேர், முஸ்தபா நபியோதினாரே, (19)

(இ-ள்) நப்சு ஹாலிறு என்னும் மன இச்சை ஹவாமே லெண்ணம், ஆகியவைகள் ஒரு ஒழுங்குபட்டு வந்துவிட்டால் ஒன்பது நவதுவாரங்களும் அடைபட்டுப்போகும் அப்போது தான் ஹக்குல் எக்கீன் நிறப்பமானது, அந்நேரம் (காபபெகஸைனி அவ் அதுனா) என்னும் வாசலுடைய பிரகாச ஜோதி மின்னி ஒளிவு மலர் விரிந்து பூத்தவண்ணம் பூத்துச் சொரியும் அந்த ஒளிவில் றப்புவுதயமாகுவான் திடமாகக்காணலாம். அப்போது நப்சென்ற சூட்சியம் வெள்ளிடைமலை போல் உனக்குத்தோற்றி விடும். எ-று

ஆண்டோனருள் கொண்ட ஐனுல் எக்கீ, னாகுமிவையெல்லா முசிலிம்களே-தூண்டா மணிவிளக் கானதுகாண், தொகுத்துநிலை கொண்டு சிர்றைப்பாரு-மாண்டார் மீளுவார் வரம்பில்லாமல், மையததுமாறி ஹயத்ததாகி, ஏன்றா ரிவையெல்லாம் ஐனுலெககீ-னென்கோமான் பறுலன வோதினான்

(இ-ள்) இந்தமகாமின் தத்துவ வரிசைகளெல்லாம்மேற் சொன்ன ஐனுல் எக்கீனுடைய காட்சியே யன்றி மற்றப்படியல்ல அந்த மகாமில் தூண்டாமணி விளக்குப்போல் ஒரு ஜோதி நின்றிலங்கும் அதைத்தெரிசனையாகக் கண்டபோது அதுவே உன் ஸ்ரூப வடிவாகத் தோன்றிக் கலந்து ஸமதாகி விடும். அப்போது காணாமல்போன இரகசியவஸ்த்துக்களை மீளச்செய்யவும்,மாண்டமையத்துக்களை மறுபடி உயிர்கொள்ளச்செய்து. எழுப்பிவிடவும் அந்த ஐனுல் எக்கீனுக்கு உரிய செயலென்று அல்லா சொல்லியிருக்கின்றான். எ-று

ஹக்குல் எக்கீனெனக்கற்பித்தவன், ஹக்ககானவனமை நன்மைசெய்ய-மிக்க நிலைகொண்டே னெக்கீனெனவு, மிகுந்த சதுமறை குர்ஆனிலே யொக்கலுஞ் சொன்னான் மூரீதுக்காக, வொருவன் றனைநாடும் இல்முல் எக்கீன்-தக்க அறிவினா லில்மைப்பாருந், தரித்த எக்கீன் கொண்டேயிருந்துபாரும். (21)

(இ-ள்):- ஹக்குல் எக்கீன் என்பது, றப்பை உறுதி கொள்வதாக இருக்கும். நாலுவேதங்களையும் சேர்த்து குர் ஆனில் இல்முல் எக்கீனைப் பரத்திவைத்தான் அந்த குர் ஆனில் ஒரு மிக்கச்சொல்லியிருக்கிறதாவது, ஜனங்களே நீங்கள் முரீதைப் பெற்று இரகசிய சக்தியை விளங்கிக்கொள் ளுங்கள். என்பதாக சயிக்கினை செய்திருக்கின்ருன், ஆனதால் ஒரு வஸ்தை இணையற்றுப் பிடிகயிருகப் பிடித்து, இல்மின் நேர்வழியாக இருந்து பார்க்கவேண்டும். எ-று

இந்த விடமூன்று தலமாவதுய், இருத்துச் செய்யுந் தாலிபுக்கு-முந்து மிருப்பது செந்தாமரை, முறுஷித் திருப்ப துகல்புல்லாவாம்-சிந்தை யுடன்கண்ட மூமின்களே, தெளி வின் பறுலான கலிமாவிலே-அந்த மவுஜூதும்உஜூதும் துமாகப் பறுலென்ருன் குறுஆனிலே, (22)

(இ-ள்):- இப்படியாக மூன்று எக்கீன்களையும் மூன்று ஸ்தலங்களாக உறுகொண்டுபிடிப்பது, இறுஷாது பெற்றுக் கொள்கின்ற முரீதுகளுக்கு முக்கியம்வேண்டியது. அப்போது முறுஷிதாகிய வழிகாட்டி என்பவர் இருதய ஒளிவாக இருக் கவேண்டும். அதுதான் கல்புல்லாவாக இருக்கும். அந்தக் குருவைத்தான் றசூலுடைய பார்வையில் தரிசனைசெய்ய வேண்டும். என்றும் அதுதான்மவுஜூதும் உஜூதுமாக இருக்கும் என்று ஆண்டவன் குர் ஆனில் திருவுளமு செய்தான். எ-று

இல்முல் எக்கீனென ஹக்குல்எக்கீன், இருதத்துச் செய் யும் ஹக்குல் எக்கீன்-வல்மைத் தனங்கொண்ட மவுஜூதிலே மத்துலூபானநன் னுத்துபாதைச்-செல்வமுடனதை யடக் கிக்கொள்ளுஞ் சிறந்து மறைந்திடும் புவனமெல்லாம்-இல் மைப் பயன்கொண்ட இரவைவிட்டு, மிரவு பகலெல்லா மூச்சியிலே. (23)

(இ-ள்) இல்முல் எக்கீனைக்கொண்டு ஹக்குல்எக்கீனைப் பிடித்து அதை நாட்டத்தில் வைத்துப்பராக்காக அதுவே ஹக்கில் பொருந்தி இலங்கும் இனி அதில் வல்லபமுடைய மவுஜூது வெளியாய்வரும் அதில் அநேக கண்காட்சிகளு உதிக்கும். அதைப் பேசிக்கொள்ளப்படாது இந்த லோக மயக்கங்களெல்லாம்உடனேமறைந்துபோய்விடும்அப்போது

இரவு பகல் இரண்டும் ஒன்றுபோல் தோன்றும். எ-று

ஊணு முறக்கமு முண்டுநாளு, மொன்று மில்லாம உவைசுல் கர்னைன் வேணு மொருவனென் றிருக்குமந்த, வேளை நபியிறசூல் விரைந்தே யாணு வம்விட்ட அவுலியாவே அல்லல் விடவேணுமென வோதினர்-காண வேணுமென றிவர்கூறவே, ஹாகி லானலைக் காணுமென்றார். (24)

(இ-ள்) ஷெய்குநாயகமாகிய, ஹலரத்து உவைசுல் கர் னைன், அவர்கள் நிஷ்டை சாதனைசெய்யும்போது அநேககா லமாக உண்ணுவிரதம் பூண்டு, நித்திரையற்று ஊசாட்டமும் அற்று இருக்கும் சமயம் நபிகள் பெருமான் அவர்கள் ஹாலி ருகிவந்து ஹே! மகாத்துமாவே! இப்படி இருந்தாலும் மன தில்ஒரு நினவும் இல்லாமல் பரிபாகப் படுத்திக்கொண்டு அணுவுப்போலும் ஒரு எண்ணமற்றுப் பற்ற இருந்தால் தான் காரியம்நிறைவேறும் என்று அறிவித்தார்கள் அவ்வி தம் அவர்கள் செய்தபிறகாங்கும் தன்னைத்தான் கண்டார்கள்

இல்லென்ற பக்கா வானதுக்கும், இல்லல் லாஹூவென் றனதுக்கும்-சொல்லென்ற சொல்லை மூட்டியிரு, தோற்றும் நாலிறு ஹாலிருகு-மல்லுப் பிடித்துக்கொண் டுறக்கமாற்றி, மயக்கந்தனை மாற்றி நபியிறசூல் அல்லும்பகலாகவோர்நேர் கொண்ட அறிவைக் காணலா மெனவோதினர் (25)

(இ-ள்): இன்னும்றசூல் நாயகமானவர்கள்சொன்னதாவது (இல்) என்ற உண்மையான சொல்லுக்கும், இல்லல்லாஹூ என்று சொன்னதிற்கும் இடையிலுண்டான ஹூவை ஸ்திர பிடியாக்கிக் கொண்டு அதையே இருப்பின் உந்தியில் மோதி விடச் செய்து தம்பித்தால் உடனே வஸ்து ஹாலிருகும் அச் சமயம் அத்துடன் விடாப்பிடியாக மல்லாடிக்கொண்டு நித்தி ரையை ஒழித்து, ஒருவிதமனது கோளாறுகளுமில்லாமல் இருந்து வந்தால் அறிஞனுடைய பூரணத்தைக்கண்டு கொள்ளலாம் என்ருர்கள் எ-று

நாட்டம் இல்லல்லாஹூவெழுத்து நலமாயேயையும் வெளியில் நாட்டி-யூட்டும்வாய்வைத்தா னூட்டி மூட்டியோ தும் ஹூவென்ற வோசைகேளுஞ் சாட்டுமிவ்விடத்தாத் மறையுந்,

தானேன் தாத்துத்தான் வெளியாயென்றும்-கூட்டி நபியோ
டு தானுரைத்தான், குறுஆன் தும்மன் சல்ஹுவிலேஅன் (26)

(இ-ள்):- இல்லல்லாஹூ என்ற மந்திரத்தை நாட்டத்
தில் வைத்து ஏயை வெளியில்வைத்து, வாய்வு என்ற வெளி
காற்றை அளவுபோல் அதாவது காமிலான சற்குரு சொல்
கின்ற பிரகாரம் குடித்து, உள்வாசியை முட்டி நின்றால் உன்
நாவுக்குமேல் வுள்நாவுக்குள் இருக்கிற கபாலவலம் புரியில்
ஹூவென்று ஒரு சப்தம் கேட்கும் அது சமயம். உன் கல்
பென்ற தாமரையில் அல்லாகுத்த ஆலாவின தாத்தானது
வெளியாய்வரும் என்று அல்லகுத்தஆலா தன ஹபீபுடன்
ஸம்பாஷணை புரிந்து குர்ஆனில் தும்மன் அன்சல்ஹுவில்
தெரிவித்தான். எ-று

ஹறுபொன்று காணர் ஹாலிருஹல், காணும்ஜல்லஜலா
லாஹூவே-அறபுநபியிறசூ லோதினு, ரமலேயுடையோரே
மூமின்களே ஷறகு மிதுவாக்கு மிபாதத்துக்குத், தௌஹீதா
குங்கா ணுலமாக்களே-இறையவன் சொன்னனந்நாளேயி
லென்னை ய்றியநன் ருகப்பாரும், (27)

(இ-ள்):- அந்த தவத்தின் நிஷ்டையில் ஒரு எழுத்தா
வது றப்புல் ஆலமீனன் ஜல்ல ஜலாஹூவைத் தவிர காண
கமாட்டீர்கள். இபாதத்தும் ஷறஉம் இதுவாக இருக்கும்
என்னுடைய ஷறஉ அடங்கலும் தௌஹிதின் அஸ்திவார
மேயன்றி ஒன்றும் இல்லே. ஹே! உலமாக்களே! உலமா
களே! சகலமும் தௌஹீது இல்லாமல் வேறென்றும் உண்
மையாகாது ஆனதாலே மிஃருஜியில் அல்லா இதைத்தான்
எனக்கு உபதேசம் செய்தருளினன். நான் உங்களில் சிறந்
தவர்களுக்கு அறிவிக்கிறேன். ஆனதால் தெளிவு என்ற
தீபத்தை நீங்கள் கொழுத்திக்கொண்டு பாரும் சிர்று
வெளிப்பட்டு விடும் என்றார்கள். எ-று

மூத்திலானது நபுசுக்குள்ளே, முஸ்த பாஹாலி றென
வோதினுர்-ஆத்மா வான மீமுக்குள்ளே, அலிபை லாமுக்குள்
ளாட்டிப் பார்க்கக்-காற்றுக் கடலுமாங் காரவெளி கடந்து
பறந்தருள் முஸ்தகீமில்-ஏற்ற மானவன் மூத்தில்லாதோன்
இருந்து விளேயாடுந் தௌஹீதிலே. (28)

(இ-ள்) நபிகள் சிரோமணியவர்கள் சொன்னதாவது.
உங்கள் நப்சாகிய குணங்களில் நீங்கள் முஸ்தபா என்னும்
மஹாத்தும குணத்தைக்கொள்ளுவீர்களே அதுவேறப்பான
தாக இருக்கும் முகம்மதானது மீமாகஇருக்கும் மீம்என்றது
உங்கள் சுவாசமாக இருக்கும் அலிபாகிய நினைவை லாமாகி
ய உறுதியில்வைத்து ஆட்டிப்பார்த்தால் உங்கள் கல்புக்குள்
ளே காற்றும் கடலுமாக எழுந்துகொந்தளித்து ஆகாயவெளி
திறக்கும் அப்போதுஅந்த தௌஹீதென்கின்ற தொட்டிலில்
றப்பு இருந்து நடனம் விளேயாகிற திருக்கம்பக் கூத்தைப்
பார்த்து மகிழ்ச்சி யடைவீர்கள். எ-று

இதை யெல்லாம் சிர்றதெவோதினு, னெங்கள் யாறப்
பில் ஆலமீனே-பதுக்கத்தான் சொன்னன் பதுக்கமலும்,
பறையத்தான் சொன்னன் விதியுள்ளோர்க்கு-விதிக்க சிர்
ருன் காரியத்தை, வெளியாய்ப் பறையவும்ஹறுமாமென்னத்-
ததிர்க்கும் வெளியான காரியத்தைத், தானே சிர்ருக்க ஹரு
மாமென்ருன். (29)

(இ-ள்) இதை அடங்கலேயும் மிஃருஜியில் றப்புல் ஆல
மீன்தன் ஹபீடம் இரகசிய போதனைசெய்து அப்பால் நபியவர்
களைநோக்கி இந்தசிர்ரை நீர் மறைத்துக்கொள்ளும் ஆனல்
உம்மில் முடுகியவர்களுக்கு நீர் இவைகளை மறைக்காமல்
சொல்லிவிடவேண்டும் என்றும் ஆக்கியாபித்தான். ஆனதா
லே இந்தமஹசிர்ருன சங்கதிகளை அறிவுதெரியாத நிர்மூட
ஜனங்களுக்கிடையில் அறிவித்துக்கொண்டலேகின்றது அப்ப
டியான ஷெய்குமார்கள் பேரில் ஹருமாக இருக்கும் என்றும்
தெளிவடைந்த மன்னர்களுக்கு அறிவித்துக்கொடாமல்
மறைந்துகொள்வதும் சக்து ஹருமாக இருக்கும் என்றும்
அல்லாகுத்தஆலா உறுதிசாற்றினன். எ-று

ஈமா னென்பதிங் கிறைநபிக்கே, யிசைந்த கலிமாவை
யோதுவதும்-ஈமா னென்றது நிலேதப்பாம, லிறசூல்நபி
சொன்னபடிகேட்பதே-ஈமா னென்றதிலாகுஇல்மை,யிசைந்
து தெரிசித்துப் பார்ப்பதுவாம்-ஈமா னென்றது பேரொளி
யென்,றில்லல்லா சொன்னன் குறுஆனிலே (30)

(இ-ள்) இன்னும் ஈமான் என்பது என்னவென்ருல் அல்

லாவுடைய றசூலின் வழிக்கு ஒழுகி உறுதிகொள்கிறது இன்னும் நபியவர்கள் சொன்ன முறைப்படி தப்பாமல் நடந்துகொள்வதும், இன்னும் ஷெய்குமார்கள் சொல்கின்ற உபதேசமுறைபோல் நடந்து அதில் காட்சி காண்பதும் இன்னும் இன்சான்களைக்கடைத் தேற்றக் கூடிய ஓர் பேரொளியாக இருக்குமென்றும் ஆண்டவன் தன் திருவேதத்தில் அறிக்கை செய்தான். எ-று

ஈமா னென்றதிங் கலைந்துவிடா, தீமா னென்யறு
மமைந்துவிடா-தீமா னென்றது முலைந்துவிடா, தீமா னென்
றது மொழிந்து விடா-தீமானென்பது பலப்படாதிங், கீமா
னென்பது கவப்படாதே ஈமா னென்பது நிலைபடாதென்
றேகன் குறுஆனிலோதினனே. (31)

(இ-ள்) இன்னும் ஈமானென்பதானது. உறுதி என்று கூட்டைவிட்டும் எங்கையும் பறந்துபோய்விடாது, அதற்கு ஓரசைவுங் கிடையாது, அது நிலைபிரிந்தும் விடாது, இன்னும் அது உன்னைவிட்டும் மறைந்தும்போகாது, ஒருவராலும் களவெடுக்கவும் படாது. இன்னும் அது இலகுவில் உன் கைவசம் சிக்காது என்று ஆண்டவன் திருவுளம் பற்றினன். எ-று

இப்பா லிச்சொலை யப்பாற்கேளும், ஈமா னிலைகெண்ட
மூமின்களே-தப்பாத மொழி மெய்ப்பாகவே தரித்துப்பார்க்
கின்ற வுலமாக்களே-எப்போதுஞ் செப்புங்குறுஆன்படி,
யென்னேரமுங் கேளுமிசிலிம்களே-யொப்பாருமில்லா னிணை
யுமில்லா, தொருவன் குருஆனி லோதினனே. (32)

(இ-ள்):- ஓ! உலமாக்களே! இந்த உபதேசம் இப்படி இருக்கட்டும் இனிமேற் சொல்வதைக் கேட்பீராக, நீங்கள் ஒரு ஹறுபாகிலும் தப்பாமல் ஆராய்ச்சிசெய்துகொண்டு வரும் குர்ஆன் சொன்னபடி நான் சொல்கின்றேன், நீரும் தெரிந்து தெரியாத முஸ்லீம்களுக்கும் இதை விளக்கப்படுத்திக்கொடும் இணைசொல்லப்படாத அல்லாசொன்னன்.அதை நான் தீபரவிளக்கத்துடன் உங்களுக்குஅ றிவிக்கின்றேன்

இசுலா மானது நபியுடைய, இல்மைப்பாருங்கள் நெறி
யான திங்-கிசுலா மானதும், சலாமானதும் இபாதத்துச்
செய்யு மவுலியாகவே இசுலாமானது தீனுடை, இயல்பாங்
கோலங்க ளானதுவே-இசுலாமானது தசிலீமென விசைந்த
பறுலான காரியமே (33)

(இ-ள்):- இஸ்லாமென்று சொல்வது நபிநாயகத்தின் சொல்லாகிய இல்மின்படி நடப்பதோடுகூட சலாமத்தாகிய வணக்கங்களைச் செய்வதாக இருக்கும் அப்பால் ஒளலியாக்களின் நடவடி பாவனைகளில் முழுவதும் அமைந்து நிற்பது இன்னும். தீன்மார்க்கத்தின் கோலங்குறிகளை அணுவளவாகிலும் தப்பாமல் நடந்துவருவது அது இன்னும் நபியுடைய நடத்தை என்ற அச்சியில் பதியப்பெற்று நாயகத்தின் வடிவில் தன் வடிவை மாற்றியமைப்பதாகவும் இருக்கும். எ-று

இஸ்லாம் நெறிகொண்ட மானிடருக், கெங்கோ னெனும்
பிரானேதினதோ-ரிசுலா மொடுமீமான் றெளிந்துகொண்டே
யிலங்கும் கலிமாவைத் துலங்கும்நல்ல-அசுலா முரீதுக்குப்
பேருரைத்த, அருளைச் சொல்லவோ தாலிபாகு-ஓசுலா மைக்
கொண்டே யாடுவோர்க்கு, மொருவன் முரீத்தின் வழியே
யாரும். (34)

(இ-ள்):- றசூல் நாயகம் அவர்கள் முஸ்லீமான ஜனங்கள் எல்லோர்களுக்கும் சொன்னதாவது என்னவென்ருல் அல்லாகுத்தஆலா சொன்ன தலீலின்படி சகல நடத்தைகளையும் எடுத்து நடந்து அதில் தேறிய பிறகு,அப்பால்காமிலான பீரைத்துடர்ந்து தௌஹீதின் இரகசியங்களை அறியாவேண்டும் அப்படி முரீதாகும் பெயர் வழிகளுக்கு சிலகருமங்களைக் கட்டுரைக்கின்ருேம். எ-று

இஞ்சொலுடன் ரண்டு காரியங்கொண், டிபாதத்துச்
செய்யு முஸ்லிம்களே-அஞ்சுமாறுங் கொண்டாடினதோ,ரதபு
நெறியுள்ள முஸ்தபாவு-மிஞ்சு முரீதினல்சலாமத்தாக,வேண்
டுமெனச்சொன்னர் சொன்னபடி-கொஞ்சும் பீர்முரீ தான
வர்க்குக், கொடுப்பானிறை சொர்க்கப்பெரும்வாழ்வையே.()

(இ-ள்):- முரீதென்னும் நாட்டம் பெறுகின்றவர்கள் ஈமான் இஸ்லாம் இரண்டு காரியங்களையும் நல்லதிரவிளங்கி அறியவேண்டியது தன் செய்கின்சமுகத்தில் அதபுமரியாதையுடன் நடந்து அவரிடம் உள்ளமைப் பொருளை மெல்ல மெல்ல கொள்ளை கொண்டு அவரின் அன்பு முழுமையும் அடைந்து கொள்ளவேண்டும். அப்பால் அவருடையஇறுஷாதின் உண்மையை உறுதிகொண்டு அதனல் அமல் செய்து முத்தியடையவேண்டும் அப்பேர்ப்பட்ட நல்லமுரீதுகள்தான் அல்லா உடைய அருளைக் கைக்கொண்டு மோட்சவுலகத்தின் செல்வங்களை அனுபவிக்ககடவார்கள். எ-று

நாலு காரிய மறியவேணும், நபியுல்லா சொன்னர் பீர்
மார்க்ட்கு-நாலு காரியம் யாதெனவே,

நாலி யார்களுங்கேட்ட தற்குக் காலல்லா சொன்னு னெனவே
சொல்லிக் கண்ணின் மணியான நபி யோதினர். ஆலமறுவா
ஹு மறுவா ஹுக்குள், ளமைந்தநால்வகை யறிளப்பறுல்.

(இ-ள்):- ஷெய்குமார்கள் என்கிற ஐகத்துக்கள் நான்கு காரியங்களை அவசியம் அறிந்திருக்கவேண்டும் என்று றசூல் நாயகமவர்கள் சொன்னார்கள் உடனே அஸ்ஹாபிகள் அது என்னவென்று கேட்டதற்கு அது அல்லாவால் தங்களுக்கு அறிவிக்கப்பட்டது எனது சொல்லி அதுவாகிறது ஆலம் அறுவாஹில் அந்த நாலும் உற்பத்தியானது அவைகளையறிவது மனுடன் ஒவ்வொருவனுக்கும் பறுலு அவையாவன கீழே சொல்கின்றேன்.

றூஹு சுல்தானி நூஹானியும், றூஹு இசுமானி
றூஹு தானும்-ஆக விவை நாலும் பேச்சும்மூச்சும், ஐனும்
கேள்வியுபறியப்பறுல்-தோகைமயிலான நபி யோ தினர்,
தோததிரஞ் செய்யும் பீர்மார்களே-ஏகநாயகன் பேச்சானதை
யின் சானறிவற் கரியதுவே.

(இ-ள்) அவைகளின் விபரங்களாவன:- 1-வது றூஹ் சுல்தானி, 2-வது றூஹானி, 3-வது றூஹ்இஸ்மானி, 4-வது றூஹ் ஆக இவைகளாக இருக்கும் இவைகள் விபரமாவது, சுல்தானி என்பதுகண், றூஹானி என்பது மூச்சு, றூஹ்பேச்சு இஸ்மானி என்பது கேள்வியாக இருக்கும் இந்தப்படி யறிவது பறுலாக இருக்கும் நபிகள் நாயக மவர்கள், ஹே ஷெய்குமார்களே அல்லாவை யறிவது இந்த பாங்காகத்தான் அறிந்து கொள்ளவேண்டியது, என்று உபதேசித்தருளினார்கள். எ-று

மின்னில் லாக்குழி யுச்சிதனில், வீசி நுக்தாவை அலிபாய்
வைத்தே-அன்ன நடப்பறி மூலமதி, லதிலே நின்றெரு விலா
சம் செய்து-பன்னி யெழும்பிப்பின் தாமகரைக்குட், பரிந்து
மேற்கொண்டு நெஞ்சில்வந்து-தன்னுள் கல்கினில் வந்து
நின்று, தறித்து நாவினிற் பேச்சானதே. (38)

(இ-ள்) ஒன்ருவது பேச்சானது உச்சிக்குழியாகியதில் நின்றும் மின் பிரகாசம்போல் பளீரென்று உதித்து நுக்தா என்புதை அலிபாக நீட்டியோடி அங்கிருந்து மூலாதாரத்தின்

உந்திக்குழி வழியாக ஸ்வாசம் பிந்தப்பட்டு எழுப்பிவிட்டு அங்கிருந்து முண்டகக்கமலமாகிய தாமரைக்காயில் வந்து அடங்கிநின்று அதற்குமேல் உதித்து இருதயத்தில் வந்து படர்ந்து ஐம்புலக்கோட்டைகள் தோறுமுட்டி கபால வாசல் வழியாக ஒடி சங்காங்குழி மார்க்கமாய் நாவில் வந்து பேச்சானது வோசை செய்திற்று. எ-று

மட்டுவிழ அவிழ் நுக்தாவினில் வருந்தி, முன்சொன்ன
மூலமொன்று-தொட்டு விளைவாக்கியதுநேர்கொண்டு, தொ
குத்து வலத்திடந் தன்னிற்சுற்றி-யெட்டிக்கடந்துபின் வந்து
நேராய், இயல்பாம் பேச்சான காரியம்போ-லொட்டிவிளையா
டிப்பார்வைதானு, முறுதியிருவழியானதுவே. (39)

(இ-ள்) முன் சொன்ன நுக்தா என்றநாத விந்தானது. மூலாதாரத்தில் நின்றும் விளைவாகி அப்பால் சூரிய சந்திர குணகுணங்களைப்பதிய வைத்து அவைகளின் வடிவில் வடிவமெடுத்து அவைகளைச்சுற்றிக்கடந்து கபால மண்டலத்தில் சிம்மாசன மேடை போட்டு சர்வவுலக தத்துவாதிகளையும் தனக்குள் அடக்கிக் கொண்டு தக்க இடத்தில் வந்து நின்று இரண்டு கண்களாயிற்று. எ-று

முன்னே வந்தது நுக்தாவினில், முழுதும் பேச்சாச்சு
றூஹானிதான்-பின்னே வந்தது நுக்தாவினிற், பெருப்பமா
யுள்ள கேள்வியாச்சு-வன்னம்பலவாக்க நுக்தாவினில் வந்
தது பார்வை கண்ணுச்சுதே-என்னு ளளவிலே வந்ததுதா,
னிரவுபகலான மூச்சானதே. (40)

(இ-ள்) ஆதியில் வந்த நாதவிந்தானதுநுக்தாவில் வடிவெடுத்து பேச்சு உண்டானது அப்பால் உதித்த றூஹானியானது அதே நுக்தாவில் நின்றும் கேள்வியாயிற்று அதே நுக்தாவில் கோலாங்கொண்டதனுலே இரண்டு கண்களும் உண்டாயிற்று அதே நுக்தாவின் கோலத்தில் நின்றுந்தான் இரவு பகலான ஸ்வாசங்கள் உண்டாயிற்று இரவு பகல் என்றது வலம் இடம் என்பதாம். எ-று

றூஹு மூச்சுறூஹானிதானும், நுன்னிதாகிய பேச்
சாச்சுது-வேக சுல்தானிகண்ணுச்சுது, வேந்தன்கேள்விதான்
இசுலாமாச்சு-ஆகும் றஹ்மானி றப்பானியும், அருளும் சமா

தானி புறுக்கானியும்-தாகம் அபுருனி சுரியானியும், தா...
கொபரானி அறபானியும். (41)

(இ-ள்) இனி வட்டுருக்கமான நடையில் அறிவதா...
நூஹ் என்பது மூச்சாக இருக்கும், அந்த மூச்சில் நின்று...
பேச்சானது உதித்தது இனி சுல்தானி என்றது நேத்திர...
ளாக ஆயிற்று கேள்விஎன்பது, இஸ்மானியாக இருக்கும்...
த நான்குக்கும் றகுமானிறப்பானி சமதானி புறுக்கானி என்...
அபுருனி, சுரியானி. அறபானி, கொபுரானி, முதலான ...
ஷைகளில் பெயர்கள் உண்டாயிற்று. எ-று

இந்த வகைப்பாஷை நூஹானிக்கி, இசைந்து தெரிய...
துறூஹதுக்குக்-கொந்து நறைவீசும் நபியோதினர், குத்...
பீரான முரீதுமார்க்கே-அந்தயாசீனென் றுனதிலே, யருளு...
சுரியானிப் பாஷைகொண்டு-விந்தைப் பதினெட்டு இசுமே...
தினன், இசுமையறிவது பறுலாமென்றுன். (42)

(இ-ள்) இந்த பாஷைகள் பேரிட்டு வழங்குவ தெல்லா...
நூஹு என்னும் தத்துவத்திற்கே உரித்தானதென்று நபி...
யகமவர்கள் கூறினர்கள் அந்தப்படியேகுதுபுகள் பெருமா...
வர்களும் மற்ற சற்குரு மார்களுக்குச் சொல்லி விட்டார்க...
இன்னும் அந்த ஐனுல்லா என்னும் நூஹ் றகுமானிக்கு யா...
சினில் சுரியானிபாஷையால் பதினெட்டு பெயர்களைக் கூ...
பிட்டான் அந்த இஸ்மகளை அறிவதானது மனிதர்களில் பே...
ரில் பறுலாக இருக்கும். எ-று

பதினெட்டானதும் பரிந்தஇசும். பாரும் பீர்மாரே முரீது...
மாரே-அது திட்டமதாகத் தெரிசித்தாக்கா, லந்த யாசீனை...
யறியலாகும்-இதனைப் படுங்கண்ணு மூக்கும் நாக்கும், இசுமை...
யோதினல் விரணமாகு-மதின நபியந்த ஹேமீமென்று,
மஃனு சுரியானிப் பாஷையென்றுர். (43)

(இ-ள்) பதினெட்டுவகைப்பட்டஇஸ்மகளை சுயரூபத்து...
டன் தெரிசிப்பதானது, பீர்மார்களுக்கும் முரீதீன்களுக்கும்
அத்தியந்த கடமையாக இருக்கும் அதைத்தெரிசித்தவர்கள்
தான் யாசீன் என்பதை திட்டவட்டமாய் அறிந்த மஹான்...
ளாக இருக்கும் அப்படி யாசீனுடையமஃனவை அறிந்தால்
தான் அனுசிறுகளுடைய ழகாம்கள் இனந்தெரியும் அதற்கு
ஹேபும், மீமும், மந்திரக் கருவியாக இருக்கின்றது இதர்க்கு
சூஸ்திர அர்த்தம் சுரியானி பாஷையிலிருக்கின்றது அது தா...

...கை அந்த மகாமில் விஷயமானவுடன் தெரியும் என்று றசூல்
நாயகமவர்கள் சொன்னர்கள். எ-று

அந்த யாசீனென் றுனதுதா. னகமும் யுறமுமா யலங்க
ரிக்கும்-சொந்த ஹவாவான வும்மத்தோடும், தொடர்ந்தே
யுள்வரு மூச்சினூடே-விந்தை யானமீ மானதுதான், வெளி
யிற் புறப்படு மொளிவாகவே-இந்த வகைஇசும் ஹாவே
யென்ன, எங்கள் நபியிறசூ லோதினர். (44)

(இ-ள்) இனி யாசீன் என்பதானது ஜடலத்தின் உள்
ரங்கமும் வெளிரங்கமும் அடங்கியவளைந்த தோர்சக்தியாக
இருக்கின்றது அதுசுவாசமென்ற ஹேயுடன் ஸம்மந்தப்
பட்டு உள்ளடங்கி நிற்கின்ற மூச்சுடன் நிற்கி... றது,
றது, வெளியில் எழுந்து வரும் வாசியின் ஒளிவா...
இதுதான் ஹாமீம், என்ற நுட்பம் என்று நபி நாயகம் திரு
வுளம் பற்றினர்கள். எ-று

அலிபுலாமீ மென்றுனதுதா, ஞலமடங்கலு மாண்டபி
ரான்-ஒலிகல் தான்மஃனவிள்ளாம, லொருவ னறிவானென்
றேயோதினர்-வலிய மஃனவை ஷாபியிமாம் வருத்தி
ஞனெக் கல்லாதந்தான்-அலியாம் ஹலறத்துப் புலிமாமஞ,
ரவர்கள் முன்னல்லா வோதினனே. (45)

(இ-ள்) இனி அலிபு, லாம் மீம், என்ற தன்சுய அர்த்தத்
தை இந்தவுலகத்தில் அவுலியாக்களாயிருந்தாலும் சரிசொல்
லமாட்டார்கள். ஒருபோது ஷாபி, இமாம் அவர்களிடம் சில
ஒலிமார்கள் போய் அதைப்பற்றி விசாரணை செய்தபோது
இமாம் அவர்கள் இந்த இரகசியத்தை அலி றலியல்லாகு
அன்கு அவர்கள் சில ஒலிமார்களிடம் இலேசாக கூறிவிட்டு
அப்பால் இதுறசூல் நாயகமவர்களுக்கு அல்லா சொல்லிய
இரகசியமாய் பொருள் இது தன்னில் தானுனவர்களுக்குத்
தானுக வெளியாகும் பரிபூரணமாக இருக்குமென்று சொன்
னதாகச் சொல்லிவிட்டார்கள். எ-று

உம்மில் கித்தாபிலே யோதினதை, யுலமா வறியுங்கா
ளொலிமார்களே-செம்மி இருக்கின்ற லாஹிறில. சிறந்தே
யிருக்கின்ற மலுஹறிலே-கும்மி விளையாடும் அலிபுலாமீம்,
குதறத்துப் பெற்ற அலிபாம் கலாம்-பம்மியறியாத மஹூ
பூலெனும், பலகையாகுங் காணலா மாமது. (46)

(இ-ள்) அல்லாகுத்த ஆலா தன் இரகசிய நாட்டமென்

னும்உம்முல் கிதாபு என்ற உதிப்பில் வெளியானஇல்மை தெளிவடைந்த ஒலிமார்களும்,உலமாக்களும் அறியும்பொருட்டு விபரிக்கின்றேன். எல்லாருக்கும் பயிராங்கமாயிருக்கின்ற, வெளிப்படையாக வந்திருக்கின்ற குர்ஆன் ஷரீபிலும் புதைந்துகிடக்கின்றது. அதன்தத்துவ அட்சரங்களால்தான் சிருஷ்டிப்பண்டங்கள் வெளி தோன்றிற்று, ஆனபோதேஒவ்வொரு உருவங்களுக்குள்ளும் புறமும் இருந்து நடத்தும் றூஹைறூஹானி என்பவை லாம். மீம். ஆக இருக்கும் இவை இரண்டின் நடுவே அலிபு, முனைவஸ்தாயிருந்து நினவிற்பொருந்தி எண்ணத்தைத்தூண்டுகின்றது. அவ் வலிபு, சகல சரீரதத்துவத்தையும் தானே கொண்டு கல்பில் வந்து கூடி எண்ணம் என்ற லௌஹில் தரிபட்டு மஹ்பூல் என்ற வியாபக சக்தியாக நிற்கின்றது. எ-று

தாமே தம்மினில் விளையாடச்சரந்,தேமீம்யெனச் சொன்னிருபேர்களும்-லாமை வருத்தின தாஹிறிலே, நிலையும் வருத்தினன் பத்தினிலே-சாம மறியாமற் சாஹிபுபீர், தம்மை யறிவதே அலிபாமென்று-கோமா னிவையெல்லாங் குறியாகவே, கொண்டு வரவுமேபறுலாமென்றான். (47)

(இ-ள்) ஷை லாம் தன்னிச்சை கொண்டு ஆட்டுங்கருவியாக இருக்கும் அதை மிஃறாஜியில் தேமீம் என்று தன்ஹபீபை அழைத்தான் அஹ்மதும் அஹதும் ஒன்றுபட்டு லாமைப் பொருந்தியவுடன் அஹ்மது தன்னைலாமில் வைத்து பகாவாகிய அஹதினில் பொருந்தி பத்து என்ற கணக்கான றப்பு என்பதாகத் தன்னைத் தெரிசனை செய்திற்று இதுதான் இருட்டுவேளையில் அதாவது இரகசியமாக ஜகத்துக்கள் காதில் ஊதும் செய்தியாக இருக்கும் அந்தஷெய்கே சீடனுக்கு அலிபாக இருக்கும் ஏனென்றால் லாமுக்கும் மீமுக்கும் அலிபு ஆத்மமாக இருந்ததுபோல் ஜடலத்திற்கும் றூஹுக்கும் குருவானவர் பிதாவாக இருக்கும் இந்த அந்தரங்கத்தை யறிவது சகல முரீதுகளுக்கும் பறுலாக இருக்கும். எ-று

நேயமாகவே சொன்னது பார், நெறியார்மிவையெல்லா மறியவேதான்-ஏயும்நிலை கொண்ட தன்ஸீஹிலே. யேயைநிலைகொண்ட பக்காவானதும்-நேயும் நிலைகொண்ட சீனைதும், நெடியோ னிலைகொண்ட ஏசீனென்றே-காயம் பலகோலம்படைத்த கோமான்,கல்புதனில் நன்றாயறியச்சொன்னான்

(இ-ள்):- அல்லா தன்றசூலிடம் வகுத்துச்சொல்லிய உபதேசத்தில் சற்குருவின் இரகசியத்தையும் மற்ற தபவியற் சாதனங்களையும், விளங்கிக்கொள்ளச் சொல்லச்சொன்னான். தன்சீஹ் என்ற நாட்டத்தில் ஏய் என்ற அட்சரத்தை நிலையாக்கி, நித்தியமடைந்து சிர்றுகளின் காட்சிகளை உடனுக்குடன்கண்டு யாசின் என்று தியான வடிவில் ரூபங்கொண்டு தன்னை ஏறிட்டுப்பார்க்கும்படியாக எல்லா உலகங்களையும் உற்பத்தி செய்த கோமான் திருவுள்ம் பற்றினன், எ-று

தன்ஸீ ஹதனில் ஏயாவதுவுந், தசுபீ ஹுக்குள்ஷீனைதுவு-மஞ்சு குடையிடு நபியோதினர், மன்னன் றான்சொன்னான் தன்னூனெக்-கெஞ்சி மவுத்துக்கும் ஹயாத்திற்குந்தான், கிருபை நடுவான நூனைதும்-அஞ்சி யருளெனும் இல்முல்க்கபீ றருளாங் கித்தாமினி லோதினதே. (49)

(இ-ள்):- தன்சீஹ் நாட்டத்தில் சற்குரு ஏய் உடைய வடிவமாய் நிற்கும் பான்மையாவதும், தஸ்பீஹ் என்ற முருக்கபாவில் அதாவது தியானத்தில் சீஷன் அந்தப்பான்மையில் சொரூபங் கொள்ளுவதும் ஆக பக்குவப்படுத்திப் பழகிவர வேண்டும். என்று நபிநாயகமவர்கள் கூறினார்கள் இதுதான் அல்லா ஹதீது குதுஸியில் மவுத்துக்கும் ஹயாத்திற்கும் இடையில் சுரூபமாற்றிப் பழகவேண்டும். இதைத்தெரிவதே இல்முல்கபீறு, பெரிய கல்வி என்று திருவுளஞ் செய்தான், என்றாலும் இல்மு என்றது அருளாகிவிடுமே, அப்போது இல்முல்கபீறு நப்சுகளுக்கு ஒரு கிதாபுபோல் விஷயமாகும்.

இன்னுஞ் சிலதுள துரைக்கக்கேளு. மென்றா லறிவேய யறியவேதான்-பன்னுங் கல்புகொண்ட றிந்துகொளும், பகருமதிலுள்ள பயனானதை-கண்ணும் வகையாகச்சொல்லுகிறே, னல்குமதிலுள்ள பொருளானதை-யெண்ணு மெழுவகைத் தோற்றமாக, இசைந்து நாயன்றா னோதினறே. (50)

(இ-ள்):- இன்னும் சில அனுபவ அறிவுகள் உண்டும் அவைகளைச்சொல்கிறேன். முதலாவது ஒருவிஷயத்தைஅறியப்புகுந்த மாத்திரத்தில் கல்பு, என்ற லௌஹில் அதைப் பற்றி விசாரணை செய்யவேண்டும். அந்த ஒவ்வொன்றில் எழுவகை யறிவுகளும், வெளியாகும் அவ்வொவ்வொன்றும் ஒவ்வொரு தோற்றங்களாக இருக்கும் என்றதும் ஆண்டவன் சொல்கிறான். எ-று

சாதி னடுவிலே யானதுதான், சாது நபிப்பட்ட மானது
வும்-ஸாது மஃனுவை யுமில்கித்தாபிற் சாற்றி னுனல்லா
வுண்மையாகச்-ஸாதிலிறையவன் றசூல் பாதத்தைத் தாங்
கி னுன்சிங்காச சனமானதைச்-ஸாதின் மஃனுவால் நபியை
யேந்திச், சாலே சமதாக நிறைந்ததுவே. (51)

(இ-ள்):- சாது என்றதில் இருந்துதான் நபி பட்டமும் றியாலாத்துகளும் உண்டுபட்டது. அதன்பொருள் றசூலாய் இருக்கும் அந்த சாதில் றசூல் இருந்ததினுலே றசூலுடைய இருபாதங்களை அல்லாகுத்தஆலாஏந்திச்சுமந்தான்அதுவே அல்லாவின் சிங்காசனமாக இருக்கின்றது. அந்த சாதின் அர்த்தமே உலகத்தின் படைகோலங்களாய் நிறைந்துபோய் இருக்கின்றது. எ-று

தான்னூ னடுவாச்சுமக்காமாச்சுது. தன்னூ னேகிப
லாவாச்சுது-தன்னூன் தாமரை தாஞச்சுது. தன்னூன் தரிப்
பட்டகல்பாச்சுது-தன்னூன் ஸிதுறத்துல் முந்த ஹாவாம்
தன்னூன் மஃனுவால் நபியையேந்தித்தன்னூ னுளிவுதான்
ஜலாலாகவே தங்கள் ரியைக் கொண்டேரினதே. (52)

(இ-ள்):- ஆனதாலே அல்லாவின் தன்னூட்டமே நூன் வட்டமாயிற்று, அந்த நுனே புருவமத்தியாயிற்று அந்த நூனின் வடிவே, மக்காமன் மகுதாய் எழுந்து இலங்கிற்று அந்த நூனே, றூஹுல் குதுஸியின் முழுச்சுடராகவும் பிரகா சித்துக்கொண்டுக் கீழுலகங்களில் மனவாசிகளுடன் சம்மந் தப்பட்டு ஆடிக்கொண்டு நின்றுதாமரையில் வந்து ஜோதி செய்து நாதிக்கின்றது நூநே நாட்டமும் தேட்டமும் ஆய் நடந்து செல்கின்றது இந்த அந்த நூனே ஹவாவில் இருந் து காற்ருக வந்து நபியை ஏற்றிக்கொண்டு சிதுறத்துல் முந் தஹா என்ற மூளை மண்டலத்தில் நின்று இச்சைகளைக் கீழே தள்ளிவிட்டு அத்றகுமேல் ஏறி எண்ணத்தில் நிராமயம் பெற்று இணையற்று பரமானந்தத்தில் மிதந்துகிடந்தது.

அருளாங்காபுதான் சிரமாச்சுதங், காண்டோன் ஹல
றத்துத் தலமாச்சுது-பொருளாமஃனுவை இசுமுல்க்கபீர்
பொருந்த இருத்தினுன் பதியிலென்றும்-வெருளாம் பய
பாடாம் காபானது, வேந்தன் ஹறுபுதா னுளித்திராது

மருளாம் பெண்ணுக்கு மாணுக்குந்தான், மஹ்பூபு சுபுஹா
னுேதினுன். (53)

(இ-ள்):- இனி காபு, என்றது தலையங்கமாய்விட்டது. அது அல்லாவின்சிங்காதனத்தின்வீ டாகஇருக்கின்றதுஇந்த வீட்டில்தான் தன் இல்முடைய இரகசியத்தை பீடமாக பதி யவைத்தான் அந்த காபில் இரண்டு புள்ளிகள், இரண்டு நேத்திர வடிவாயிற்று. இன்னும் அப்புள்ளிகளே, அஹது ஐன், என்ற ஒளி உதயமாக தோன்றுகிறது. அதைக்கண்டு உறுகொள்வதே! ஆண் ஜனனத்திற்கும் பெண் ஜனனத்திற் கும் பெரியதோர் கடமையாக இருக்கும் என்று ஆஷிர்சீன் களுக்கு ஆதி சொன்னுன், எ-று

உச்சந் தலையாக்கக் காபானது, முன்னும் நடுவாச்சு
நூனுன துவச்ச பதமாச்சு சாதானது, வரிசை அலிபுலா
மீமானது-மெச்சு இடத்தினின் றேதிரும்பி, இயல்பாம் அவ்
வலாம் லாகிறுவாம்-கைச்ச வடஞ்செய்யும்பீர்முரீதே ஹாமீம்
பறுலென்று காமில்சொன்னுன். (54)

(இ-ள்):- ஆனதினுல் ஷி காப் என்றது இன்சானுடை யஜடலத்தில் சிரசாக உண்டாயிற்று, அதற்கு நடுவாகிய புருவக்காலாக நுணை இருந்தாட்டிக்கொள்ளப்பட்டதுசாதின் ரூபப் படலத்தில் நின்றும் முகம்மதை அதாவது முக மண்ட லத்தை ஸ்ரூபித்துக் கொள்ளப்பட்டது. அதன்கீழும், மேலும் அலிபையும், லாமையும் நீண்ட கோல்போல பரத்திஒளிவை மீம்ஆக இருத்திவிடப்பட்டது இதில் ஹேயை, வாசியாக இடவலமாத்திருப்பி, ஆலம் கபீறிலும், ஆலம் ஸகீறிலும் ஒடவிடப்பட்டிருக்கிறது. இதன் விஷயத்தில் லாகிறென்றும் பாத்தின் என்றும் இருபாகப்படுத்த ஏற்படுகிற ஷெய்குமார் களும், சீடர்களும் உண்மை என்பதை உணர்ச்சிசெய்து பார்த்து, இதில் அழியும் தன்மையுள்ள அட்சரங்களை, ஒவ் வொன்ருய் பஞசெய்து தாயும் காயுமான நித்திய வஸ்துவா கியசாதை ஹேயும் சேர்மானஞ்செய்ய கஷ்டதெண்டி எடுத் துப்பாடுபட்டு முத்தி படையும்படியாக ஹாமீம் உடைய கோலத்தில் குறிப்பாக நின்று ஆலங்களை நடத்துகிற றப்பு திட்டவட்டமாய் தன் ஹபீபுக்குச் சொல்லி யருளினுன். எ-று

அந்த ஹாமீமென் ருனதுவும், அந்த யாசீனென்ருனது
வும்-அந்த தாஹாவென் ருனதுவு, மந்த வொளியினு பூசா
னது-அந்த நீயல்லால்வேறில்லையென், ருன மூமினில் அன்
றுசொன்ஞர்-அந்த மவுலாகா வுயர்ந்தவரென், றப்படிச்
சொன்ஞர் ஜிபுரியிலே. (55)

(இ-ள்):- அல்லாகுத்தஆலா றசூல் நாயகத்தை நோக்
கி நீ, ஹாமீம். நீ யாசீன். நீ தாஹா. நீ நுபூஸ்என்றநூறு
இன்னும்நீயே நான் அல்லாது மற்ருென்றல்ல. நீயே மூமீன்
களின் சற்குணமாக இருக்கும் என்றுசொன்ஞன் இந்தவிதம்
றப்பு வர்ணணை செய்தவரே உயர்த்தியானதாத்தாக இருக்
கும் அவரே காரணவஸ்துவாக இருக்கும் என்று ஜிபுரீலும்
சொன்ஞர். எ-று

இங்ஙனே சொன்ன மூமினென்று, மிபாதத்துச் செய்யு
மிபாதத்தைக் கொண்-டங்ஙனேர்கொண்ட பதினெட்டிலு
மல்லாசொன்னும்மில்கித்தாபானதில்-முங்கி ஞற்காண்பார்
முஹம்மதுவே முஸ்தபா சொன்ஞர் வஸ்துவாக-எங்கே பார்
க்கவும் வேண்டுமென்றே யெங்கள். கோமான்பீர் மவுஜூ
தல்லா. (56)

(இ-ள்):- இங்ஙனம் றப்பு சொன்ன மூமீன் என்பது,
முகம்மதாக இருக்கும். அந்த முகம்மதின் குணத்தில் அமை
யப்பெற்று, அல்லா சொன்ன உம்மில் கிதாபின் 18-வது
பாடம் அடங்கலிலும் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவ
சல்லமவர்களுடைய சிர்றையே பேசிவருகிறதாக இருக்கும்,
அந்த நாயகத்தின் சற்குணத்தில் குணங்கொண்டால் ஆநந்
தப்பர வசத்துடைய சமுத்திரம் அலைமோதி வீசும் அப்போ
துதான் எவறும் அதன் தன்மையைக் காண்பார்கள் எப்படி
யென்ருல் அந்த திசையை நோக்கிஞலும் அந்த ஜமாலின்
ஸ்ரூபமே அன்றி வேருென்றும் காண்க மாட்டேனே அந்த
வடிவில் நின்றும் என்று எங்கள் றசூல் நாயகமவர்கள் திரு
வுளம் பற்றியிருக்கின்ருர்கள். (எ-று)

அலிபு லாமும் மவுஜூதென்னு, மருமூன் ருனதி லாராய
ந்துபார்-அலிபுலாமுமீ மானதிலு, மருநான் கினிலும்பா
ராறைந்திலும்-அலிபுலா மீம்கபீ ருனசீஞம்,அலிபுலாமீம்சா

ருனமீமாம், அலிபு லாமீமி தாலானதிங், கலிபுலாமீமின்
சானைம்பத்தொன்றும்-அலிபுலா மீமறு லாஹானதும், அலி
புலா மீம்தம் மானதுவே, (57)

(இ-ள்):- அலிபு லாம்தான் மவ்ஜூதென்று வெளியா
கி விட்டது இந்த ரகசியத்தை ஒன்பது இலக்கத்தையுடைய
உஜூதில் ஆராய்ச்சிசெய்துபார்க்கவேண்டியது, இருபத்து
நான்கு அட்சரத்தின் கலிமாவை உண்டாக்கிவிட்டதும் அலி
புலாம்தான் இன்னும் பெரியதாகிய சிர்றும், சிறியதாகிய
மீமும். அலிபுலாமேதான் தாலாகிய, மற்ற சராசரங்களும்,
அலிபுலாமே. இன்சானில் உள்ள ஐம்பத்தொன்று அட்சரங்
களும், ஷை அலிபு லாமாகத்தான் உண்டாயிற்று ஆலம் அறு
வாஹ் என்ற தும்மூச்சாகிய வாசியும் அலிபுலாமில்தான்
இருந்து உண்டாயிற்று. எ-று

ஆத மானது சூறத்தாச்சிங், கல்லா தாத்திலே சிபாத்
தாச்சுது-வேதமானது மோசையாச்சு, பிசிமில் அஃலம் விலா
யத்தாச்சுப் போதமானது மில்மாச்சுது, புகழே அல்ஹம்து
லில் லாகியாச்சுச்-சாத மாச்சுது சாறத்துல்லா, தந்தை யா
னது விந்தானதே. (58)

(இ-ள்):- ஆதத்தின் ஸ்ரூபமானது அல்லாவென்னும்
தாத்தின் உள்ளமையில் நின்றும் சிபாத்தாகி அதாவது
படைகோலங் கொண்டு இன்சானில் வெளிப்பட்டது, வேதம்
என்பது அதுபோல உதிப்பில் நின்றும் ஓசை பிறந்து இஸ்-
முல் அவுலம் உற்பத்தியாகி சகல அறிவுகளையும் அடக்கி வல்
லமைகொண்டது போதம் என்ற தெளிவானது இன்மின் பிர
யோசனமாக நின்று உலகமெல்லாம் புகழ்ச்சி செய்கின்ற
அல்ஹம்துலில்லாவாகி விட்டது அதுபோல இன்சான்கள்
தின்று ஜீரணசக்தி செய்த உதிரமானது மேலுலகமாகிய
கபாலத்தில்சென்று அதன் சாரமாகிய நாதவிந்துதிரண்டது,

இதுகள் யாவுமே பறுலாமென்றே, யீஸா நபிசுரி யானி
யிலே வதுவா யாடிப்பொன் ஞரினிலே, வல்ல நபியிறசூ
லோதிஞர்-முதுமையானவர் நபியாமென்று, முறுஷிதான
வர் மூமினென்றும்-புதுமை யினமொன்றுலபுலின்படி, புகலக்
கேளுங்காள் நபிசொல்லையே. (59)

(இ-ள்):- இது முதலானது யாவையும் ஒன்ருகக்கூட்டி அறிவென்ற தொட்டில்வைத்து ஆட்டிவந்து ஆராய்ச்சி செய்து தேர்தல் அடைந்து கொள்ளுதலானது மானுடவர்க்கத்தார்கள் சோலைபறுலாக இருக்கும் என்று நாலாம் வானத்தில் றசூல் நாயகம் சென்றபோது அங்குவசித்தவரான இஸா நபி தமது சுர்றியானி பாஷையில் எடுத்துப்போதித்தனர். இதை ஜிபுரீல் வியாக்கினம் செய்துகாட்டினர், ஆனபடியால் ஞானத்திற்கு அஸ்திவாரமானவர்கள், றசூல் என்னும் ஏறும்படியானவர் வழிகாட்டியாகிய ஷெய்குமார்களென்றும் நீங்கள் றசூலின் சொல்லின்படி யறியவேண்டியது. எ-று

அவ்வலானதும் ஆகிறுவும் அஹ்மதானது முஹம்மதும்-எவ்மல் லாகிறும் பாத்தினியு, மேக நாயக னபியானதும்-கொவ்மன் தன்ஸீஹுந்தசுபீஹுவுங்,குறுத்தா நபியிது பார்தானதும்-செவ்விலே வந்த பஞபக்காவும் செய்யு மிவ்வகை மெய்ப்பாகவே, (60)

இரவ தானதும் பகலானதும், இருளேயான்தும் வொளியானதும்-குருவை விடுவதும் ஆணும்பெண்ணுங் கூடிஹயாத்தாகி மவுத்தானதும்-பறவைவித்தான முத்தானதும், பாவியடியார்கள் பிழைபொறுத்துச்-சருவபீரோடு தாலிபுவைத், தங்கள் நபிஷபா அத்தானதே. (61)

(இ-ள்):- ஆனபோதே ஆதி என்பதையும் அந்தத்தில் நப்ஸுகள் அடங்குவதையும், அஹ்மதையும் முகம்மதையும் லாஹிறு பாத்தின் என்பவைகளையும், தன்ஸீஹு தஸ்பிஹு என்பவைகளையும், நபீ இது பாத்து என்பதையும், பஞபக்கா என்பவைகளையும் இரவு என்னதென்றும் பகலென்னதென்றும் இருள் எது? ஒளிவு எது வென்றும் குருவை எப்படிப்பட்ட வஸ்து வென்றும் ஆண் பெண் என்ற தன்மையால் வேற்றுமை யடைந்ததென்றும். இரண்டின் ஆசைப் புணர்ச்சிகள் எப்படி உண்டு பட்டு நிற்கின்றது? என்றும் மவுத்தென்றது எப்படிவருகிற தென்றும் ஹயாத்தென்பது எவ்விதம் உள்ளது என்றும் இன்சான் உலகமத்தில் மற்ற ஜீவாத்மாக்கள் எவ்விதம் உண்டாயிற்று? என்றும் மறத்விதுக்கள் சிப்பியில் திரள்கின்ற முத்துஎவ்விதம் வடிவு கொண்டது? என்றும் தீரத்தெளிவதே காமிலான குருவைத்துடர்ந்த, சீஷருக்கு

உள்ளபடியே ஏற்படும் பதவிக்கு முதல்வாசற்படியாக இருக்கும் இன்னவர்களுக்கே றசூல் நல்மாராயமன்ருட்டம் அகப்படும் மன்ருட்டமென்ருல் கட்டைகடைத்தேருகிறதாக இருக்கும், அதாவது இந்த உலகத்தின் அவதாரத்திலேயே, ஜடலம் மோட்சபதவி பெற்றுவிடுகிறதாக இருக்கும். எ-று

இந்தப்பனிரண்டு பறுலானது. மியல்பாயோதினர் பெரியோர் நபி-சந்தப் பெரும் அவ்வல் காபானதும், தரித்தஆகிறுமீமானதும் எந்தன் படியென்ற அல்லாசொன்ஞன், ஏகன்லாகிறு ஏயானதும் வந்த சீஞச்சு பாத்திலெனும், வழமை பொருத்துள்ள காரணமே. (62)

(இ-ள்):- மேற்கண்ட சிர்றுகளெல்லாம் பன்னிரண்டு வகைப்பட்ட பறுலான தௌஹீதைக் கொழுகினதாக இருக்கும் நபிநாயகமவர்கள் அந்த மகத்தான அஹதியத்தின் ஆலத்தில் தரிபட்டிருந்தது காபாக இருக்கும். அந்தத்தில் வெளியாகிவந்து சகல நடவடிக்கைகளையும் செய்துவிட்டு அடங்கிக்கொள்கின்றது மோக இருக்கும் என்று திருவாய் மலர்ந்து சொன்ஞர்கள் அல்லாகுர்ஆனில் ஏய், என்பது வெளிரங்கமாயிற்றுசீன்என்றதுஅந்தரங்கமாய் நின்று வெளிரங்கத்தில் கோலங்கொண்டுஅஸ்ரூரில்பூரணித்துஆலங்களை வைத்துக் கையாட்சி செய்கின்றது இந்தசிர்றையறியாமல் மனித ஜனனங்கள் இருப்பதற்கு எது காரணமென்ருலோ அவர்கள் ஊடாடிக்கொண்டலைகின்ற பழக்கவழக்கங்கள் தான் இவைகளால்தான் மரணத்தையும் பெறுகிருர்கள் பஞ்சபாதகத்திலும் தலையிட்டுக்கொள்கிருர்கள் அதை ஒழித்துப் போடுகிறதற்காகத்தான் மஹான்களெல்லாம் மலைக்குகைக்குள்ளும் வனங்களுக்குள்ளேயும் யாதொரு துணையுமற்றுச் சென்று தனிவாசஞ்செய்து சகல கஷ்டங்களையும் சஹித்திருந்து பாடுபட்டார்கள்.

கண்ட குறுஆனிலோர் சூறத்திற், கண்டெனச் சொன்ஞர் ஆலநபி-விண்டார் அவ்வல்ஹா மீமானதில், மேலோன்ருன்சொன்ஞன் ஹேமீமுக்குள்-ஒன்றுக் கடங்காத தன்சீஹிலே, யோதும் காபுஹே ஏஜன்சாது-விண்டார் ஹேமீன்ஜன் சீன்காபையும், வேந்தன்தான் சொன்ஞன் சூறத்திலே. ()

(இ-ள்):- நபிநாயகமவர்கள் நான் தெளிவாக றப்பைக் கண்டேன் என்று சொன்னார்கள். இதைப்பற்றி குர்ஆனில் ஹாமீம் என்ற சூருவில் ஆண்டவன் திருவிளஞ்செய்ததில் ஹே மீம் என்பதற்குள் அடங்காமல் நிற்கும் தியானத்தில் ஹே ஏ ஐன் சாது என்பதையும் ஹே மீம் ஐன் சீன் காப் இவற்றைத்தெரிவிப்பதே கருமம்மாக இருக்குமென்று. எ-று

நல்ல ஆகிறுதாயுமாக, நபியமுஹம்மதுதாமோதினார்-இல்லை அவ்வலும் ஆகிறுவும், இதமாயிருக்கின்ற எழுத்துப் பத்தும்-சொல்லில் நிரம்பிய தௌஹீத்தைச் சொல்லத்துணிவது மூமின்களே-வல்லமையான கலிமாவிது, வருடிப்பாருங்கள் மூமின்களே. (64)

(இ-ள்):- ஆகிறுதாயும் ஆகச்செய்யுங்கள் என்று நபிநாயகமவர்கள் கூறினார்கள் இன்னும் ஔவல் ஆகிறும் கூடி அட்சரங்கள் பத்தும் உடைய இரண்டுந்தான் தௌஹீதாக இருக்கும் இதுவே கலிமாவாக மூமின்கள் அறிவார்கள். எ-று

மன்னு மலுஹறு மிருளாகியே, வருமாம் நுகதாவை அலிபுமாக்கி-யுன்னுமதில்மட்டாய்ச் செலவாக்கியே யுடலுக்குள்ளொரு தருயிபுவை-என்னு மதினுட கல்க்கையெல்லாம் இன்சானாக்கியே இனமாக்கினான்-நண்ணு மதினுட மஃனா வைத்தா, னாயனில்மானதிலே சொன்னான். (65)

(இ-ள்):- இனி சிருஷ்டிகள் இருட்டில் நின்று வெளியானதின் சிர்றையறியவேண்டுமானால் நுக்தாவை அலிபாக்கி அதிலிருந்து மற்ற அட்சரங்கள் உறுப்புகள் கொண்டது போல இன்சானுடைய ஜடலங்கள் உண்டுபட்டன இதின் அந்தரங்கத்தை ஆண்டவன் கலாமில் பார்த்தால்தெரியும்.

ஹூவென்றே நாடியிருப்பதற்கு, ஹூவென்றேயிறை சொன்னதுகேள்-ஹூவென் றேயிரு விழியடைந்து ஹூவென் றேயிரு செவியடைத்து-ஹூவென்றே யிருவாயடைத்து ஹூவென்றேமுச்சைவாக்கியோங்கி-ஹூவென்றேயோசை கேட்கக்கேட்க ஹூவென் றேயொளி வொளிக்குமேலே. ()

(இ-ள்):- ஹூ வென்று சதாகாலமும் அழியாவரம்பெற்றிருப்பதற்கு, ஹூவென்றே இருசெவிகளையும் அடைத்து

ஹூவென்றே இருகண்களையும்மூடி ஹூவென்றே இருஉதடுகளையும் பொத்தி சுவாசத்தை ஹூவென்றே இழுத்து வாங்கி ஸ்தம்பனஞ் செய்து ஹூவென்ற இனிய முழக்கத்தைக் கேட்கக்கேட்க ஹூவென்றே பேரொளிவானது சதகோடி வெளியாகி வந்து பூரண உதயஞ்செய்யும். எ-று

அந்த வெளியான காலையிலே, அஹது நாயனை யறிந்து கொண்டே-அந்தஹேமீமாம் துயில்விரித்தே, அச்ச மாகவே தூங்கினாக்கால்-அந்த யாசீனேவெளியாய் வந்தங், க்ரூபரூபமாய்ச் சுருபமா அப்தத் தாஹாவைப் போனாக்கி,யானா லென வேண்டு மெனக்கேட்குமே. (67)

(இ-ள்):- அவ்விதமாக சகல பூரணமான ஒலிவு பிரகாசித்தவுடன், நீ றப்பைகண்டு கொண்டாய், அந்த ஒளிவானது ஹே மீம், என்ற கோலத்தில் உன்னை சொக்கிவிடச்செய்யும் அதில் நீ மஸ்தான் மாத்திரத்தில் அதில் யாசீன் என்பது வெளியாய்வரும். அப்போது அந்த ஒளிவே ஒரு அருவமாக வந்து மறுபடியும் சுருபமாக நின்று, உன் ரூபத்தில் ரூபங் கொண்டு விடும். அதுதான் தாஹா என்ற அவதாரமாகும், அதுதான் உன்னை அணைத்து முத்தி வேண்டிய வரங்களைக் கேள் தருகிறேன் என்று வல்லபத்துடன் சொல்லும். எ-று

அப்படிக்கேட்ட காலத்திலே,யதிலேதான் கேள்விகொடுத்திருக்கத்-துப்புர வான சமதானது, தோற்றுமொரு பட்சியாக வந்து-மெய்ப்பாம் காலமுல்லா தனக்குவரு, மேலோனில் மெழுத்தாக்குமஃ-தொப்பு மூவமையு மில்லாதவ, னோடு மிடமது, தெரிவருமே. (68)

(இ-ள்):- அப்போது நீ என்ன தத்துவத்தை கேட்கின்றையோ, அதை ஒரு பட்சியினுடைய வடிவில் உன்னைத் துடரச்செய்யும் இது சமதின் குதுறத்தாகஇருக்கும்இதற்கு விலாயத்தென்று பெயர். இதன் பிரிவுகளை கலாமுல்லாவில் பார்த்துணர்ந்துகொள், எ-று

அந்த வேளையிற் றூக்கமஃ, தாக திரியுங்கள் மூமுன்களே -அந்த வேளையில் மயங்கினாக்கா, லான பயித்தியந்தான் பிடிக்கும்-அந்த வேளையிற்கேட்டதல்லா, மானநாயகன் கிருபைசெய்வான் அந்த வேளையில் மலுஹறாகும், ஆனாலறியுங்கள் மூமின்களே. (69)

(இ-ள்):- தாஹா வந்து வரங்கொடுக்கும் சமயம் நீ துயின்று விடப்படாது, துயின்ருல் பைத்தியம் பிடித்துவிடும் கேட்கப்பட்ட வல்லமையுடைய மகன் கெட்டிகாரனுவான் அவன் தான் மூமீன் என்பவன் ஏனென்ருல் தாஹாவுடைய சவுந்தரியமருளாமல் நின்று கேட்கவேண்டும். எ-று

நுகத்தாவுயிரோ கண்ணபுசோவது-நுக்தா வுயிரோடு நபுசாமஃ தொகுத்தோ டதைவளைத் திருந்தஜம்மி லொக்க வும்மது தானுமது-பகுத்திங் கறியாத பேர்களெல்லாம் படைத்தோன்றனையறியாதவரே-மிகுத்த பிரமாண மிதுவா மென்று, வேதாம் பர்க்கிதை விண்டோதினுன். (70)

(இ-ள்):- நுக்தா என்பதை பரமாத்மவா அல்லது கண்ணு? அது நப்சோ? அல்லது நப்சுடன் கலந்த றூஹா? என்று அறிவில் தீர விசாரித்தது தெளிவடைந்து அறிந்து கொள்ளாத மனிதர்களெல்லாம் இஸ்லாமுமல்ல, நல்லமூமின் களுமல்ல, என்று ஆண்டவன் சொன்னுன். எ-று

அல்லா வென்றசொல் லானதுக்கிங், கான இருபது சிபத் துண்டென-ஒல்லா முன்சொன்னுன் பகுமுண்டென, வுயர்ந் தோன்ருன்சொன்னு னில்முண்டென - வல்லோன் தான் சொன்னுன் அக்கிலுண்டென,வண்மையாகவேகுறுஆனென் றும்-நல்லோன் ருன் சொன்னு ளில்லுண்டென, நாடுங்கண் ணுடி லதுவேயென்றும். (71)

(இ-ள்):- அல்லா என்ற சொல்லுக்கு, இருபது சிபத்துக் துள் உண்டும் என்று அல்லா தன் உம்முல் கிதாபில் சொல் லியிருக்கின்ருன். இந்த இருபதையும் அறிந்தவர்களுக்கு இல் மின் தெளிவுண்டாகுமென்றும் சொல்லினன் அதுவேஞானத் தின் நிலைக்கண்ணுடி யென்றும் சொன்னுன். எ-று

மூணு நுகதாகவே குறுஆனுக்கு, முற்றுந் தேய்க்கும் சீனுனதுக்கு-ஆணில் ருதுவான ஆணுக்கென்றும்,அல்ஹம்து லில்லாஹீயானது-கானும் பெண்ணுக்கே இல்லையென்றுங், கண்டாலறியுங்காள் பெரியோர்களே-தோணச் சொல்கிறே னின்னமொன்று, சொல்லப்பாருங்காள் யாசீனிலே. (72)

(இ-ள்):- மூன்றே மூன்று நுக்தாவே குர்ஆனுக்கும் தேய்க்கும் சீனுக்கும், இதன் மக்சதானது ருபமெத்தின்

ஆண், அதாவது நாதமூறிய ஆண்பிள்ளைக்கொன்று அல்ஹம் துலில்லாஹி என்பதற்கும் இன்னும் இத்தத்துவம் பெண் ணுக்கு இல்லை யென்றும் இதைப் பெரிய ஆரிபீன்களர்யுள்ள வர்கள் அறிவார்கள். நல்ல வெட்ட வெளிச்சமாய்ச் சொல்லி விட்டேன். இன்னும் யாசினில் உள்ள ஒரு ரகசியத்தையும் சொல்கிறேன் கீழே பாருங்கள், எ-று

ஆதம் பரிசாகு மெனவோதினு,னறிவு முஹம்மதென்றே பேசினன்-வேதம் யப்தமாய்பிறையோதினுன், விளங்கும் விண்ணொளி தானேதினுன்-போத மிருசாதன் றேயோதி னுன், போஜனம் வித்தென்றே சொன்னதாற்-சாதமறிந் ததும் இசாறத்தெல்லா, தனக்குச் சுஜூதிட்டா ரிப்படி யங்ஙனே, (73)

(இ-ள்):- ஆதம் என்பது ஜடலம் என்றும் அதில் அறி வாக நிற்பது முகம்மதென்றும் வேதம்என்பதுவெளிக் கல்வி யென்றும் அதில் புதைந்து போய்கிடக்கும் சூத்ரப்பொருளே ஞானமென்றும் அதில் மஸ்துக்கொள்வது இறுஷாது என்றும் விபரம்தோன்றும் அதன்ருஷிகரங்களுமாக இருக்கும்இதைத் தெரிசனை செய்துதான் வணங்கவேண்டும். எ-று

அல்லா சொன்னது கலாமுல்லாவாம், அதிலே திருந் தியதிற சூலுவாம்-ஒல்லா சுஜூதுக்கங்கிடமுண்டாச்சே, யொருவன்றனக்காகப் பறுலுமாச்சே-எல்லா சுன்னத்தும் நபிக்காச்சுதிங், கில்முக்கிடமாச்சு ஷெய்குமார்கள்-வல்லா னிஃதிலோ ரெழுத்தாச்சுது வகுத்துச் சயக்கூலில் வகுத்தனனே. (74)

(இ-ள்):- அல்லா கலாமை வெளியாக்கினுன், அதில் இருக்கின்ற ரசத்தை நபிகள் சிகாமணி எடுத்துப்பிழிந்துவிட் டார்கள். ஆனதாலே றசூலை வணங்குவது சுன்னத்தென்றும் அல்லாவை வணங்குவது பறுலென்றும் ஆயிற்று, ஆனதாலே சற்குருமார்கள் றசூலைத்தான் தியானிக்கவேண்டியதுகடமை யென்பதாக சயக்கூன் யென்ற சூரத்தில் வந்திருக்கின்றது.

ஹாவென் றெருமூச்சுப் புறம்பாகவே, கவலுந் தாலென் றே யுள்வரவே ஆவென் ஹெருமூச்சங் கசும்வரவே, அல்ல வொருமூச்சுப்,

புறம்போகவே-ஈயென் றொருமூச்சு யுள்வரவே ஊவென்றொ ரு மூச்சுப் புறம்போகவே-மேவென் றொரு மூச்சை யுள்ளே வாங்க, மேன்மையாகுமேமூமின்களே. (75)

(இ-ள்):- இனி நிஷ்டைசாதனையில் ஹாவென்று ஒரு வாசியை வெளியே விட்டுதால் என்றே உள் இழுத்துவிட வேண்டும் ஆவென்று ஒருசுவாசத்தை உள்இழுத்து அதிலே வெளியவும் ஒரு மூச்சை விடவேண்டும். ஈ என்று ஒருமூச்சை உள் இழுத்து ஊவென்று ஒரு வாசியை வெளிக்கி விடயவண் டியது. மே என்று ஒரு மூச்சை உள்ளே இழுத்துவாங்கி ரம் மிக்கைச் செய்வதே வல்லமை யுண்டாக்கி விடும். எ-று

யாவென் றொருமூச்சி யுள்வரவே, யாசீ னொருமூச்சுப் புறம்போகவே-ஹூவென், றொருமூச்சு துள்வரவே, ஊஅனு வென்று புறம்போகவே-ஹஹான்றொருமூச்சுப் புறம்போக வே ஹாமீமொரு மூச்சுதுள்வரவே-ஹூவென்ற மூச்சுக் கோடாகோடி குருவினிலை யானவழியாகுமே, (76)

(இ-ள்):- யா என்று உள்ளுக்கு ஒரு மூச்சை இழுத்து வெளியே யாசீன் என்று, ஒரு மூச்சை, விடவேண்டும் ஹூ வென்று, ஒரு மூச்சு, உள்ளே இழுத்து ஹூஅனு. என்று ஒரு மூச்சை வெளியே விடவேண்டியது. ஹா வென்று, ஒரு மூச்சு வெளியே போகும்படியாக, விட்டு ஹாமீம் என்று ஒரு மூச்சை உள்ளுக்கு இழுத்துவிட்டு ஹூவென்ற மூச்சை எப் போதும் தியானத்தில் வைக்க கோடிக்கணக்கான தவநிலை களும் சித்தியாகும் இதுவே இலகுவான வழியாகவும் இருக் கும். எ-று

கோடானு கோடிச் சம்சுகளுங், கோடானு கோடிக் கமறு களுங்-கோடானுகோடி நுஜூமுகளுக், கோடானுகோடி மின் னிணயுக்-கோடானு கோடிக் கதறுகளுங், கொண்டாடுமந்த வெளியானதிற்-கோடானு கோடிப் பாஷை வருங் குருவின் மொழியான பாஷைகளே. (77)

(இ-ள்).- இந்த தவப்பீடத்தில் சதகோடி சூரியசந்திரர் களும், சதகோடி நட்சத்திரங்களும் சதகோடி மின்னல்களும் சதகோடி பிரஹஸ்பதிகளும், அந்த ஒவ்வொரு வொளிவுக ளில் நின்றும் சதகோடி பாஷைகளும் பேசப்படும் இவை

களெல்லாம் சற்குருவின் சமபீடத்தில் நின்றும் வெளிப்படு கின்ற றசூலின் பாஷைகளாக இருக்கும். எ-று

ஆவென் றலிபுதான் தானதே, அலிபில்மூன்றுதான்வகை யானது-கோவென்றராஜன் கூப்பிட்டது ஹூவென்றே முஹம்மதுவானது-மேவென் றேசொலி விண்டதுவு, மிகுரு ஜிலன்றங் கழைத்ததுவும்-தாலில் வகுத்தானே முஹம்மக் குத், தானு யிருந்ததங் கிம்மூன்றுமே. (78)

(இ-ள்):- ஆ என்ற அலிபு, உஜூதாயிற்று, அதில் நின் றும் முச்சுடர் எழுந்தது கோ, வென்று அரசதொனி தொனித் திற்று, அதில் நின்றும் ஹூவென்று முகம்மது வெளியாயிற் று, இந்த ரகசியங்களை யறிவிக்கத்தான் முகம்மதை மிஃருஜி யில் அழைக்கப்பட்டது. இதெல்லாம் தாலில் இருந்தே எடுத் து வருவித்துக் காட்டினர், எ-று

கண்கொண்டேபார்க்கமூன்றுவகை,கமலும்சுல்புடன்கமல வுச்கி-முன்கொண்டு பார்க்கச்சொல்லுகிறேன் முருக் கபா வென்ற மூலமது-பின்கொண்டே பார்க்குஞ் சமதானதை, மின்கொண்டு பார்க்கு மூமின்களே-மன்கொண்டே பார்க்கும் ஷெய்குமார்கள், வகைகொண்டே பாருமுலமாக்களே. (79)

(இ-ள்):- நாயகமவர்கள் அதின் சுல்புகளை தங்கள் திருக் கண்களால் பார்க்க, மூன்றுவகை ஒலிவுகளாக, கமல உச்சி யில் நின்றும் பிரகாசித்திற்று அதைச் சொல்கிறேன் முருக் கபா என்ற மூலாதாரத்தில் சந்திரனில் நோக்க ஏகபரிபூரண மாகத் தெரியும். ஹே! தெளிந்த பக்கிறிகளே உலமாக்களே! இதைக் கூர்ந்தறியுங்கள். எ-று

காபு ஹே ஏஐன்சாதானதுங், கருணை யெழுத்தைந்தும் சாதானதும்-கொவும்கஃபத்துல் லாவிலேயும். கோமான் பயித்துல் மகுமூறிலு.மேவு மறுஷொடு குறுசிலேயும், மேலோன் மகாமேரும் வானத்திலும்-ஆகும் படியிந்த ஐந் தெழுத்தை, அறியுங்காள் நல்ல மூமின்களே. (80)

(இ-ள்):- காப், ஹே, ஐன், சாது ஆனவைகளும், பஞ்சாட் சர கருவிகளாக கஅபத்துல்லாவிலும் பைத்துல் மஉமூறிலும் அருஷிலும்வானமண்டலங்களிலும், ஒட்டிஉண்டாயிருபதால் இந்தஐந்துஅட்சரங்களையும்அறிந்தவர்கள்தான் ஆரிபீன்கள்

காபு நின்றிடம் கண்மேருவாம் ஹேயும்நின் றிடங் கஃபத்துல்லா-ஏயும்நின்றிடமகுமூறுதா, னேகன் ஐனுமே அறுஷதாகும்-மேவும் சாத்து குறுசதாகு, மேலோன் குறுஆனிலோதினனே-யாவும் நின்றிடமிப்படியாம், நாலாம் பாதையிலோதினனே. (81)

(இ-ள்):- காபு நிற்கின்ற ஸ்தலம் கண்மலராக இருக்கும் ஹேயானது நிற்கின்றஸ்தலம் புருவமத்தி என்றகஃபத்துல்லாவாக இருக்கும். ஏயானது நிற்கின்ற ஸ்தலமானது கபாலம் என்ற பைத்துல் மஉமூறு இனி நேத்திரத்தில் இருக்கும் கருப்பு வட்டமே, அல்லாவின் அனுஷாக இருக்கும் இனி சாது குர்சாகிய நாவாக இருக்கும் இது குர்ஆனில் சொல்லப்பட்ட நாலாம்பாதையாக உண்மையாக இருக்கும். எ-று

இந்தப்படியேதானைந்தெழுத்தை, யீமானுள்ளபேரறிய விதி-அந்தப் படிசொன்னன்குறுஆனிலே, அல்ஹம்தைந்தெழுத்தானவையைச்; சொந்தப்படிசம்கில் கமறி லேயும், தொகுத்த நுஜூமிலும் வானிலேயு-சந்தப் படியன்ன வகையைந்திலும், தானய் நிற்பதும் வெளியாகுமே. (82)

(இ-ள்):- இவ்விதமாகத்தான் டை ஐந்து அட்சரங்களையும் அறிவது ஈமான் உள்ளவர்கள் பேரில் கடமையாக இருக்கும்; இது போலெதான் அல்ஹம்து என்ற ஐந்து அட்சரத்தையும் அறிய விதியாக இருக்கும். அறிந்தால் உடனே சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும் மற்றுண்டானவைகளும் நிற்கின்ற ஜோதியானது இன்னது என்று பளீரென்று வெளியாகிப் போகும். எ-று

ஆனலிவைகட்கோ ரிசுமோதின னதுவே தௌஹீதுக்காணி மூலம் தேன லதுகாதி ருகவேணு ந், தேகந்தனைமூன்று நாளைக்குத்தான்-மானருறக்கமு மூணுமாற்றி, வருந்திமுருக்கபாவொதுக்கங் கொண்டு-கோமான்பதின்மூன்று மெழுத்தைநாடிக், குறித்துப்பாருங்கள் குதறத்தினல். (83)

(இ-ள்):- ஆனல் இவைகளை தியானஞ் செய்வதற்காக. ஒரு இசுமை ஆண்டவன் உற்பத்தி செய்திருக்கின்றன் அது வே தௌஹீதைப் பொருந்திக் கொள்வதற்கு மூலை காணியாட்சியாக இருக்கும். முதலாவது அந்த இசுமு லாத் தாகிவிடவேண்டும். அந்த இஸ்மு வசியப், படுவதற்கு முன் மூன்று நாள்பரியந்தம் அன்ன ஆகாரமற்று நித்தியற்று ஒரு தனித்த இடத்தில் தரிபடவேண்டும். அப்பால் அல்லாவின் திக்றில் பதிமூன்று அட்சரங்களை குறுமார்கள் காட்டித் தருகிறபடி குதுறத்தில் பதியவைத்து மனஸைப் பிரியவிடாமல் கட்டியிருத்தி. தியானித்திருந்து ஜெயமடைந்துகாட்சிகளைத் தெரிசனைசெய்ய வேண்டியது. எ-று

அலிபு லாமீமும்காபுஹேயும் ஐனும்சாதும்யா சீனதையும்-அலிபு லாமீம் றேயானதும், ஆனல்தா ஹநூன் காபானது-அலிபு லாமீம் ஏயானதுவும், அந்த ஹேமீமே யானதுவும்-அலிபுலாமீமில்நின்றகோலம், அல்லாஹுவதை யறியச்சொன்னன். (84)

(இ-ள்):- நபிநாயகமவர்கள் சொன்னர்கள். ஆகிருகிய கடைசியானதே தாயுமானது, அவ்வலும் ஆகிறும் நடுத்தர யோக்மென்று அறிவில் தேர்ந்துள்ள தெளிவிடையவர்கள் அறிவார்கள். இது பத்து அட்சரத்தால் நிரம்பியிருக்கிறது இதைக்கலிமாவில் வைத்துப்பார்த்தால் நல்லபடிவிளங்கும்.

அலிபு லாமீமே யானதின; லதுவேதௌஹீதுக்கச் சாரமாம். அலிபு லாமீம்தன் குதறத்தின, லன்று கூறிருள் நுக்தானது-அலிபு லாமீமே வெளியானது, அஹதுஅஹமது முஹம்மதாச்சு-அலிபு லாமீமே யதிலேநின்றும்,அஃலம் ஆதமென் றனதுவே. (85)

(இ-ள்):- வெளியாகியிருக்கின்ற பல பல விதமான தோற்றப்பொருள்களுக்குள்ளேஇருள்மயமாகஅந்தவஸ்த்து நின்று, சூக்கும் ஜடமாகத்தோற்றுகின்றது, அந்த ஜடலத்தின் தோந்தத்தில்தான் இனி இந்த ஜடலம் மோட்சம் அடையவேண்டியதாக இருக்கின்றது. எ-று

தன்னு ளனதும் தம்மீமையும், தன்பே யானதும் நூ
தம்மதும்-மூன்னு ளனது சிர்றதுவாம், முதமா வாகிய நூ
துவும்-பின்னு ளனதி லுயிர்நிற்பதும், பேரும் பிறப்புமுண்
டானதுவே-மின்னு ளனதில் விளங்குகின்ற. வேத நாய
ளேதினனே. (80)

(இ-ள்):- மேலே சொல்லிவந்த அட்சரங்களில் தனக்குள் சம்பந்தப்பட்டுள்ள (நூன்) ஒன்றும் (மீம்) ஒன்றும் (பே) ஒன்றும் சர்வ ஜடலங்களுக்கும் ஆதியாக எழுத்து நின்ற நூன் ஒன்றும். உண்டும். இந்த ஆதி நூனனது. இன்சானுடைய இரகசியமாக இருக்கும். இதுவே முகமண்டலமாக தோன்றிற்று, கடைசியாக உண்டாகிய நூனனது பரமாத்மாவாகிய ரூஹ-ல்குதுசியைப் பொதிந்துகொண்டது. இனி அதுவே இந்த சரீரத்தை எடுத்தது. அதுவே தனக்கு ஒரு போர்வை துக்கொண்டது. அது தன்னுட்டமென்னும் துர்வி நியோகத்தின் பொருட்டால்தான் என்னென்ன சுரூபங்களைப்பின் யுகங்களில் எடுக்கவேண்டுமோ அவைகளைத் தோரணைபோல் எடுத்துக்கொள்ளவுங்கூடியது. இந்த ரகசியத்தை நாயன் தன்றசூல் நாயகமவர்களுக்கு வேதத்தின் மூலமாய் அறிவித்தான். எ-று

2-வது பாகம் 45

அறிவைக் கொண்டுதா னறிவுதன்னை, யறிந்திமாமத்து
செய்யவேணும்-செறியு லாமினி லொளிவுவந்காற், சிறந்
நபியிறசூலொளிவாம்-மறியா தலிபினி லொளிவுப்ந்தால்,
மன்னன் தானவனொளிவாமென்றுங்-குறியாம் ஹேயினி
லொளிவுவந்தாற் கோமான் ஹலறத்தி னொளிவாகுமே. ()

(இ-ள்):- இன்னும் நாயன் தன் ஹபீபவர்களுக்குச் சொன்னுன், உமது உம்மத்துகளில் இமாமத்துச் செய்கிறவர்கள். மேல்சொல்லிய மாணிக்கமாகிய மஅரிபாவின் அறிவுகளை எல்லாம் தெளிவுடன் அறிந்துகொண்டபிறகுதான் அந்த பதவிக்குத் தகுதியாவார்கள். முஷாஹிதாவில் லாமுடைய மகாமில் ஒளிவைத்தெரிசிக்கும் பட்சத்தில் அந்த ஒளிவானது, முகம்மதுற்றசூலுல்லாவுடைய தாத்தின் ஒளிவாக இருக்கும், இன்னும் அலிபுடைய மகாமில் ஒளிவுதெரியுமானுல் அது அல்லாவுடைய சிபாத்தின் புறத்தால் வந்து ஒளிவாக இருக்கும். இன்னும் ஹேயுடைய வடிவில் ஒளிவு

தெரியும்பட்சத்தில் அது அல்லாவுடைய அறுஷின் ஒளிவாக இருக்கும் என்றறியவேண்டியது, எ-று

ஆனு லிருக்கட்டு மப்பாற்கேளு, மாகுமொளிவுதான்
முன்னே வந்து-கோனு னவனது முகத்தைமுத்திக். குறித்தே
நடுவுச்சி தன்னைநோக்கித்-தேனு னிருவிழி நடுவில்முத்திச்
சிறக்கு மிஃதென்னைப் பார்த்தென்று-தானுய்மொழிந்திடில்
நபிநூறது தாங்குமபூபக்கர் மொழிந்ததுவே. (88)

(இ-ள்):- மஅரிபத்தை யறியவந்தமகனே! இந்த சங்கதியை இம்மட்டில் நிறுத்திவிட்டேன், இனிவரக்கூடிய விபரத்தைச் சொல்லுகிறேன். கேளுங்கள் முகம்மதுற்றசூலுடைய ஒளிவு என்ன வடிவத்தில் வந்து நிற்குமோ, அதைக் கூர்ந்து பார்த்து, அதின் முகத்தை முத்திவிட்டு, இருவிழியின் அதில் நீ வடிவங்கொண்டு நிற்கவேண்டும் என்று அபூபக்கர் சித்தீக்குச் சொன்னுர்கள். எ-று

மத்தே நெடிதாக நின்றதுவு, யத்தே சுல்பாக வுறைந்
ததுவு-முத்தே ஜெயமாகவுறைந்ததுவு, முதலோனுக்தாவர்
யிருந்ததுவுங்-குற்றே பிரமாண மாக்கிக்கொள்ளு, கோமான்
சவருசேர்க்கிடஞ் சொல்கிறேன்-உற்றே யிதனேடே சவர்
சேராகு முண்மையாய்ச் சொன்னுன் யாசீனிலே, (89)

(இ-ள்):- மத்துஎன்ற அட்சரமே நெடியதான அலிபாக நீண்டதாக இருக்கும். இனி அதுவே சுல்பாகவும் இருக்கும். இன்னும் அதுவே (பஹ்றுல் ஹகாயிக்கு) என்னும் கடலில் அஹ்மதுடைய தத்துவத்தில் வெண்முத்தின் வடிவத்தில் திரண்டிருந்தது. அல்லாவின் சிபாத்தின் கோலங்களை வெளியாக்கும் பொருட்டு ஆதியில் நுக்தவாக இருந்ததும் அதுவே, இனி அல்லாவின் சிர்றின் குணுகுணுங்களைப் பொதிந்ததான் சபர் சேர் உடையதன்மைகளைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன் அந்த இரண்டு அட்சரங்களைப்பற்றியும் ஆண்டவன் தன் திருவேதமாகிய குர்ஆனில் (யாசீன்) என்ற சூறத்தில் திருவுளம்பற்றியிருக்கின்ருன். எ-று

ஆனுலதுகேளுமூமின்களே, யருளுமுள்ளீரலிஃதேயெல்
லாம்-ஆனு லீரலும் பித்துமாக, அருந்து நுரையீரல் கருவீர
லுந்-தேனுர் சிறுகுடற் பெருங்குடலுஞ், சேர்ந்ததாமரை

யானதுவும்-கோனுன் பதின்மூன்று ஹுறுபுதனிற், கொண் டாடிக் கொண்டுநின்றிடுமே. (90)

(இ-ள்):- அதன் உண்மை விபரத்தைப்பற்றி விபரிக் கின்றேன். அறிவு தெளிவடைந்த மூமின்களாயுள்ளவர்கள் கேட்டறிவேண்டியது. ஷை (மத்து) என்ற திவ்விய அட்சர மானது. உள்ளீரலாக இருக்கும். மற்ற இரண்டும் பித்தும், கறுஈரலுமாக இருக்கும். இன்னும் நுரையீரல். மாங்காய் கிட்னியீரல், மன்னீரல், சிறுகுடல், பெருங்குடல். அதைச் சேர்ந்த சில கருவிகள் யாவற்றும் பதிமூன்று அட்சரங்களால் கொழுவிக் கொண்டாடுகின்றன. எ-று

அல்லா தனக்கிரு பதுசிபத்தும், அன்பியாநபிக்கைந் தைந்து-நாளெல்லா மிக்தெல்லாம் கமறுஷம்சும், ஏகும் ஹேயினில் மூன்றுவகை, வல்லான் முதல்வீட்டில் ஹாவெ னவு, மன்னனடுவீட்டில் ஹூவெனவும்-நல்லான் சுல்புக்குள் ஹீயெனவும், நாய ஞமத்தை யோதுவதே (91)

(இ-ள்);- அல்லாவுக்கு சிபத்து இருபது சிபத்துக்கள் முகம் மதுர்றசூல்லா அவர்களுக்கு பதினைங்கு சிபத்துகளும் உண்டும். சந்திரன் சூரியனுடைய வல்லமை யெல்லாம் ஹேயிக்குள் முக்குணங்களாக இருக்கின்றன. அதில் ஆதி யாக சந்திரனின் மகாமில் ஹா,என்ற ஓசைவெளியாகும் மற் றய நடுவானவீட்டில் ஹூ என்றதொனி கேட்கும். அப்பால் சுல்புடைய வீட்டில் ஹீயென்று. கேட்கும் அப்படியே நீயும் முஷாஹிதாவின் புறத்திலும் நல்ல வியாபக சக்தியுடன் தரி பட்டு திக்றை பியயோகஞ் செய்து வர வேண்டும். எ-று

இல்லென் ருனதை சுல்புக்குள்ளே, இருத்தி இருகலை தன்னை வாங்கி-அல்லென் ருனதைக் கமலத்துள்ளே.யடைத் தே திறந்திடுமப்போதிலே-நல்ல ஹூவான ஹூவா னதை. நடுமக்காமிருவிழி நடுவிற்-சொல்லிச் சொல்லாமல் நோக்கினுக்காற், ருேற்றும் நபிநூறு துலங்கிடுமே. (92)

(இ-ள்):- இனிமேல் நிஷ்டையிருப்பில் அமர்ந்து யோக நிலை சாதனையைச்செய்யும் விபரம் பகுத்துச் சொல்கிறேன் சக்தியுண்டிய புண்யவான்கள் எடுத்துக்கொண்டு வைராக்ய பிடியுடன் கையாளவேண்டியது எப்படி என்ருல் கல்பு என்று

இதயகமலத்தில் (இல்) என்றிருத்திக்கொண்டு அதை சந் திர சூரியகலைகள் வழியாய் ஏற்றி இறக்கவேண்டியது அச் சயமம்(அல்)என்ற யாதையும்கமலவெளியாகிய புருவக்சுடை மத்தியில்வைத்துப்பொதியவேண்டியது அவ்வாறுபொதிந்து திறந்ததும் அந்த சமயம் ஹூவுடைய மகாமில் அதாவது இரண்டு கண்களின் நடுவே நினைவில் ஹூவைப்பொதிந்து மனதில் திக்றுசெய்து மேல் நோக்கமாகிய சுழிமுனை வீட்- டைப்பார்த்தக்கால் அப்போது அஹ்மதிய்யத்தான ஒளிவு ஜகஜோதிமயமாக வந்து பளீரென்று தோற்றரவாகும். அப் பால் அதனுல் நீ அடையப்படுகிற பாக்யங்களை யாரால் சொல்ல முடியும். எ-று

இந்த வகையினுற் றுண்டானது, மிமிர்தக் கலிமாரண் டெழுத்தானதும்-சொந்தப் பார்வையில்ஷுஹூதானதும், சுபுஹானேன் சொன்ன படியானதும்-வந்து ஷம்சிலே முகத் தைமூட்டி. மலுஹறுப்பார்வைமனதினுலே-சிந்தைதெரிய வேபார்த்திருந்தால்,ஷெய்கைக் காணலாந் திருநாமமே. ()

(இ-ள்):- இந்த மகாமில் நால் வகைப்பட்ட சூறத்துகள் வெளியாகும். அதானது தேவாமிர்தமாகிய கலிமாவின் இரண்டு அட்சரங்களான ஹூவினுல் உண்டாகின்ற ஹூ ஹூதாக இருக்கும். இந்த ஹூ ஹூது உன் சொந்தமான பார்வையின் திறமையினுலே உண்டாகிறதாக இருக்கும், படைக்கோலங்களான சர்வ அஸ்ருறுகளின் முகங்களையும் உன் அகப்பார்வையின் வடிவில் திருப்பிக்கொண்டால் சூரிய னுடைய சூறத்தே சூறத்தாகக்கூடிக்கொள்ளும், அப்போது ஆலத்திலுண்டான சகல பிராணிகளுக்கும் நீயும் உனக்குள் அவைகளும் இருக்கக்காண்பாய், இதுதான் ஷெய்காகிய குறுபானின் வடிவைத்தெரிசித்த பதவியின் பூரணமாக இருக்கும், எ-று

சங்கு வலம்புரி காதிரியாந், தானுமுத்து றசூல்லாவாம்- பொங்கு மயிலது றசூல்லாவாம் பொருந்தும் எக்கீன்மரங் காதிரிய்யாம்-எங்கு மிருந்ததும் றசூலுல்லாவாம், மேக மானதுங்காதிரியும்-தங்குங் கலிமாவே றசூல்லாவாம், தானு யிருந்தது காதிரிய்யாம். (94)

(இ-ள்):- ஹே! மஅரிபத்துல்லாவைத் தூண்டியறிய வந்த மகனே! கேள், அல்லா அறுஷில் தன்ஹபீபை அழைத்துக்காட்டிவிட்டு ரகசியப்பொக்கிஷப்புரையில் போட்டுவைத்திருந்த சிர்றுல் ஆலம் வெளியாகிறது, பத்திரப்படுத்திக் கொள். அந்த முஷாஹிதாவில் ஒரு மஹாசிம்ஹாஸனம் வெளியாகி வலம்புரிசங்கு நின்று கீதவோசைபாடும் அது என்ன அதுதான் சமஸ்தமும் தனக்குள் அடக்கிவைத்திருந்த ஏகதொனியாகிய ஹக் முஹியித்தீன். அதுவே ஜகத்குருவாக இருக்கும். அந்த வலம்புரிக்குள் இருந்து ஒரு ஆணி முத்து உதயஞ்செய்துகொண்டிருக்கும் அதுதான் றசூலுல்லாவாக இருக்கும். அப்பால் அங்கே ஒரு பிரமாண்டமான மரகத மயில் நின்றுநடனமாடும். அதுவானதுமுகம்மதியாவாக இருக்கும். அந்த மயிலுக்கிருப்பிடமாகிய எகீன் மரமானது அல்மத்த முகியித்தீனாக இருக்கும் இந்த ஆலம் பதினெண்ணாயிரம் அதில் ஒன்றொன்றாக வெளியாகும் அவைகள் எல்லாவற்றுள்ளும் றசூலே சுயசுரூபியாக இருக்கும். அது பராபரத்தில் ஒரேமயமாக ஒருவிலாயத்து நின்று சிருஷ்டிக்கும் அது, தில்முஹியித்தீனாக இருக்கும். இத்தனை மகத்துவங்களையும் காணக்கூடிய சக்தியாயிருந்த கலிமாவானது றசூலாக இருக்கும். அக்கலிமாவின் தேனமிர்தமானது ஹுவானது, திருமணி, முஹியித்தீனாக இருக்கும். ஆனதினால் முகியித்தீனே தான் தானான பரமவஸ்தாக இருக்கும். இதை சக்கரி ஒப்புக்கொண்டால் ஒளலியாத்தான முண்டாகும்.

எ-று

உயிராம் ஹறுபுதான் காதிரியை, யுற்றேயதிற்போட்டு
முஷாஹிதத்தைப்-பயிராக் கிடலது பெருப்பமாகும், பவ்வதி
கடலது மூமின்களே-தயிராகும் வெண்ணெய் தானுமாகும்,
தந்தை நெய்யாகு முகந்தெரியிங்-கயிரு கும்நல்ல பறக்கத்
தாகுங், காதிரிய்யத்தைப் பிடித்துக்கொண்டால் (95)

(இ-ள்);- இவ்வித மேன்மைபெற்றுள்ள காதிரியத்தான ஹுவென்ற அட்சரமாகிய முஹியித்தீனை நினைவில் நிலையாக வைத்துப்பொதிந்து முஷாஹிதாவில் இருந்து யோகத்தை நீ ஒரு பயிராக விளையவைத்து விடுவாயாகில் அது நாளாவட்டத்தில் கடுகாகி அப்பால் மலைபோல் பெருகி

விர்த்திக்கிக் கொண்டு வந்துவிடும், இன்னும் நீ செய்த பாவக்கருமங்களெல்லாம் அறநூர்ந்து உன்னை சாது சங்கத்தில் கொண்டுபோய் சேர்த்து மேன்பதவியில் ஏற்றிவிடும் இன்னும் பாவஉடம்பாகிய உன் ஜடலமானது அந்த முகியித்தீனுடை ஜகத்தருளால் அம்மாருவின் குணமென்ற பாலானது முத்மஇன்னா வென்னும் தயிராகி அப்பால் ருலியா வென்னும் மோராகி அப்புறம் மறலியா வென்னும் வெண்ணெயாய்த் திரளப்பட்டு ஒடுக்கத்தில் நறு நெய் என்கின்ற காமிலாவில் உன்முகத்தைத் தெரியச்செய்து உன்னை சமதியத்தின் பாக்கியமெல்லாம் ஒருமிக்க வாரிக்கொடுத்து குதுபு பட்டமும் கட்டிவைக்கும். அப்பால் உன்மகிமை பொருந்திய பெரும்வாழ்வுக்கு ஒரு அளவு சங்கையுண்டுமா? ஆலமெல்லாம் உனக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாகும் அவ்வளவு மகத்தான பெறும்பாக்கியங்களெல்லாம் பரம குருநாதனாகிய முகியத்தீனைத் துயர்ந்து பிடித்துக்கொண்ட நாதாக்கள் எல்லாரும் கை மெய்யாக அடைந்தார்கள்.

சூறுஆனி லிஃதுண்டோ வென்று கூர்மையுலமாவோடெ
திர்த்துகேளுங்-குறுஆனி லிஃதெங்கே யுண்டுங். கோர்வை
நாயகன் சொன்னதெங்கே-குறுஆன்றனக்குத் தாய்பாத்தி
ஹாவிற். குற்றமின்றியே நித்தஞ்சொன்னன்-குறுஆன்தப்
சீறுங்கமாலியத்தைக் கூர்க்க வறிந்தவர் கூறுவாரே. (96)

(இ-ள்);- ஆரிபீயத்தான முற்ற ஆராய்ந்து வேர்வரை நோண்டிப்பார்த்து தெளிவடைந்திராத சிலபசாதுக்காரர்களான பகல்வேஷ உலமாக்கள் இந்த இடத்தில் வெளியாக்கிய மஹா ரகசிய இல்மின் பாரதூரம் இன்னவிதமென்று தெரியாமல் என்னை இன்காறுசெய்த இந்தபேச்சு குர்ஆனில் இருக்கிறதா? எந்தசூறவில் எந்த ஆயத்தில் இருக்கிறது? என்று எப்படிக் காட்டமுடியும் என்று கேட்கத்தலைப்படுவார்கள். நான் இங்கேயே அவர்களின் வாயை அடைத்து மூடிவிட்டு அவர்களுக்கு இல்முல் எக்கீனில் கமாலியத்தாகி இருக்கும் கபீறுல் ஆலமாகிய இல்மைத்தெரிவித்துப்போடுகிறேன், மஹா ஆரிபுக்கடலாகிய முகியித்தீன் இபுனு அறநபி நயகத்தின் புது ஆத்துல் மக்கியா முதலிய அவர்களின் தப்சீறுகளில் இதன் விபரம் எடுத்துக் காணபிக்கப்படுகிறது.

அதையும் தெளிவில்லாத மௌடீகஉலமாக்கள் காண்க இயலாது, ஆனதால் காமிலியத்தான ஆரிபீன்களை அடுத்துக் கேட்டு உண்மை விளங்கவேண்டியது. எ-று

பாத்தி ஹாத்தனி லெங்கேவரும், பரிந்தவுலமாவேகேட்டாற் சொல்லும்-ஏத்தமாகிய எவ்மித்தீனென், றெவர்க்கும் பெரியவன் தானேதினுன்-சாற்றுங்கலிமாவிலெங்கேவருந், தானே தன்சீஹாுக் கலிமாவிலுஞ்-சூத்திர மான ஷஹ்ராதத்திலுந், தொல்லை யில்லாததையிபிலும். (97)

(இ-ள்):- அதையும் இன்னதுதான் என்று உலகத்தார்களுக்கு வெளியாக்கிவிடுகிறேன், அதாவது குர்ஆனின் தாய் தாய் சூரத்தாகிய பாத்திஹா என்னும் அல்ஹம்தில் சொல்ல முடியாதமஹாசங்கைவாய்ந்துள்ள,(எவ்மித்தீன்)என்று ஹக்கு ஜல்லஜலாலஹு திருவுளம் பற்றினன் அந்த ஒருசொல்லில்தான் இந்த ஆலங்களும் அவைகளின் இரகசியங்களும் புதைந்து கொண் டிருக்கின்றது, இதைத்தான் குணங்குடிமஸ்தான் அவர்கள் "ஒருசொல்லாலே இப்படி தோணும்" என்று அருளிச்செய்தார்கள், ஒ! உலமாக்களே! இன்னும் இது கலிமாவில் எங்கே வருகிறதென்று கேளும் சொல்கிறேன், இதானது தன்சீஹாுக் கலிமாவிலும், மஹாசூட்சாதி சூட்சப்பொருளாகிய ஷஹ்ராதத்து கலிமாவிலும், தையிபுக் கலிமாவிலும், (இன்னும்) எ-று

ஆத்ம தவ்ஹீதுக் கலிமாவிலும் அல்லா தான் சொன்னுன் காதிரியைப்-பார்த்த பேர்க்கது தெரியுமென்றும், பாராதவர்கட்குத் தெரியாதென்றும், நேத்தி யாகவே அல்லா சொன்னு, னினைவில்யா கவ்துல் அஃலமதை-யூற்றும் ரஹ்மத்தால் பறக்கத்தினுல், ஒல்லா இல்லாத இடமில்லையே ()

(இ-ள்):- ஆத்துமங்களின் பரமரஹஸ்யமாகிய தொஹீதுக் கலிமாவிலும் அல்லகுத்தஆலா அறிக்கை செய்திருக்கிருன். இந்த பாரதூரமான இல்மானது, சற்குரு நாதனுகிய முகியித்தீனுடைய தரிசனத்தைக் காணப்பட்ட மஹான்களுக்கன்றி மற்றசாமான்யர்களுக் கெல்லாம் விளங்காது,மஅரிபா என்றதும், உஜூதென்றதும், பகா வென்றதும் என்றனுடைய மஹ்பூபாகிய முஹியித்தீனுக இருக்கும் என்று ஆண்ட

வன் குதுஸியில் அருளிச்செய்திருக்கின்ருன், தவத்தைப் பற்றி நிஷ்டை சாதனையிலமர்ந்த என் அன்பர்கள் என் கௌதுல் அஃலத்தை நினைவில் ஹுவாகவைத்துப்பாராட்டி வந்தால் என் றகுமத்துடைய ஊற்ருனது சதகோடி மூலையாக ஊறத்தலைபட்டு விடும் அப்பால் அவனுக்கில்லாத பாக்கியம் எங்கும் தடையில்லை, என் கௌதுல் அஃலம் இல்லாத இடந்தலம் ஒன்றுமே இல்லை நம்பினவர்கள் மூமின்களாகள், நம்பாதபாமரஜனங்கள் பாவியாவார்கள். எ-று

எல்லா ஷெய்குமார் போலல்லவே, யெங்கள் ஷெய்குயா கவ்துல் அஃலம்-வல்லான் றனக்குள்ளே சிர்றுகளை,வருந்தும் சிர்றிற் சொல்திக்கிருனது-நல்லான் கலிமாவில் லாமானவர் நலங்குந்துனியாவிற் பேரானவர்-எல்லா பறக்கத்து முள்ளஷெய்கா, மிவரைத் தான்ஹாலி ருக்கிக்கொள்ளே. ()

(இ-ள்);- மஅரிபத்துல்லாவை விளங்க வந்த தீசனே கேள்! மற்ற எல்லா குதுபுகளான ஷெய்குமார்களைப்போல் எங்கள் நாயகமாகிய திருமணியாகிய குருநாயகம் கௌதுல் அமிகலம் முஹியித்தீனை நீ நினைத்து விடாதே! அவர்களின் திருநாமமே அல்லாவின் சிர்றின் சிர்ருக விசவி திக்று செய்வதற்கு காரண காரியமாக இருக்கிருர்கள். இன்னும் ஆலங்களின் ஜீவகோடி ஜந்துகளில் றூஹாகவும் பொதிந்திருக்கின்ருர்கள். திக்று ஜல்லியாகிய கலிமாவில் (லாம்) என்ற அட்சரமாக நிற்கின்ருர்கள். இன்னும் ஆலத்திலுள்ள ஒளலியாக்கள் குதுபுகள் எல்லாருடைய வாழ்வுகளும் அந்த நாயகத்தின் கையிலகப்பட்டதாக இருக்கின்றது. ஆனதாலே ஏ! தாலிபானவனே! இந்த குரு பரவஸ்தாகிய, முகியித்தீனை உன் நாட்டத்தில் எப்போதும் ஹாலிருக்கிக் கொள்வாயாக, இவ்விதம்தான் ஒளலியாக்கள் எல்லோர்களும் செய்து ஈடுமுச்சியடைந்தார் களப்பா. எ-று

இந்த சடலத்திற் புதுமைகேளீ, ரேகருனட்படியிறசூல் சொன்னுர் வந்தபடிமூன்றுவாயிலுண்டுவரப்பிலெழுத்துண்டுமெழுத்திருக்கும்-அந்த எழுத்துக்கோ சவருமில்லை,யதுக்குச் சேரில்லைப் பேச்சுமில்லை-எந்த வகையாலே ஹிச்சிடுவே, னியம்பிஹிச்சுட இயல்புதந்தான். (100)

(இ-ள்):- இனியறியவேண்டியது ஒன்றிருக்கின்றது. அதாவது, இந்த மாநுட ஜடலத்தைப்பற்றி புதுமையாய் இருக்கும் அதைக்கேட்பாயாக, அல்லாஹுத் தன் ஹபீபாகிய றசூலவர்களைக் கூப்பிட்டு ரஹஸிய வழியில் சொன்னன் அதாகிறது மூன்று ரகசிய வாசலிருக்கின்றது, அந்த மூன்று வாசலுக்கும் மூன்று திவ்விய எழுத்துக்கள் இருக்கின்றது, அந்த அட்சரங்களுக்கு ஸவரும் இல்லை, சேருமில்லை பேஷுமில்லை, அதற்கு ஒரு வகையாலும் ஹிச்சிடுதலென்னும் அட்சரம் உச்சரித்தலும் முடியாது, அப்படிக்கூட்டி உச்சரிக்கவும் வேண்டியதாகவும் இடங்கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

எ-று

ஏழு வகையான தௌஹீதிஃ, தெல்லோர் கட்குமே தெரியவொண்ணு-தாளும் பெரியோர்க்குத் தெரியுமிஃ,தாறு லொசிய்யத்தை யறிந்தவர்க்கு-நாளும் நபியுல்லா தமைய யறிந்து, நாலு யார்களோ டுடன்பேசியே-வாழி முகமான தௌஹீதிதை, மன்னனுமென்ன வோதிக்கொள்ளே. (101)

(இ-ள்):- ஆனல் இந்த மூன்று மகிமையுள்ள அட்சரங்களும் ஏழுவகைப்பட்ட தௌஹீதாக இருக்கின்றது. இதை எப்படிப்பட்ட ஆலிம்களானுலும் அறியமுடியாது, நபியுல்லாவை சந்தித்து அவர்களின் ஒசியத்தில் தேர்ந்து, நாயகத்தின் நடைபழகினவல்லவர்களான நான்குயார்களையும் தரிசனை செய்து அவர்களின் சமுகத்தில் இருந்து அந்த ஏழு இல்முக்களையும் கேட்டறிந்து முகியித்தீனைப் பிடித்து நிற்க வேண்டும் அப்பால் அந்த மூன்று உயிரெழுத்துக்களையும் மனதில் வைத்து தியானம் செய்தால் அது உன்னிடத்தில் ஐயத்துடன் உருவாகிப் போகும், அப்போது உனக்கு மலை, கடல், பூமி, ஆகாயம், பாதாளம், அக்னி மண்டலம், இவைகளில் இருக்கும் எல்லாவிதமான எவ்விதப் பொருளும் நினைத்தமாத்திரத்தில் உடனே உன் சமுகம் வந்து நிற்கும், அந்த அட்சரங்களை காமிலான பீர்களிடம் கேட்டறிந்து விளங்கவும்.

எ-று

நண்ணுங் கலாமுல்லா வானதிலே, நாளோர்வர்த்தகன் ஹாசிலாக்கி-லெண்ணு மவர்குள்ளே பிரியமாகு, மோனபியிறசூலோதினர்-கண்ணின் மணியான கலாமுல்லாவிற், கட்டையொடு நெட்டைபடாதவண்ணம்-அண்ணல் அஹ்தான வஹதியத்தை, ஆகும் நபியிறசூலோதினர். (102)

(இ-ள்):- அல்லாவின் திருவேதமாகிய குர் ஆனின் தாயாகிய அல்ஹம்தில் சூட்சியமாக இருக்கப்பட்ட அந்த ஆயத்தையாதொரு வர்த்தகன் உருச்செபித்து வாசலாத்துச் செய்து வந்தால் உடனே என்ன காரியங்களானுலும் ஹாசிலாகிப்போகும். அன்றியும் தவமுங் கைகூடும். சரீரசுவர்த்தியமும் உண்டாகும். என்று ஆண்டவன் கட்டளை யிட்டாரென்று றசூல் நாயகமவர்கள் திருவாய் மலர்ந்தார்கள்.

முந்த முதலான கலிமாவிலே, முஸ்தபாசொன்னுர் குருணயத்தில்-விந்தை யாகிய ஷரீஅத்துடன், வேந்தன் தரீக்கத்துஹக்கீகத்துடன்-அந்த மாகிய மஃரிபத்தும் அவ்வலாகிறு மதினுடனே-சொந்தமாகிய ஹயாத்துமுண்டுந் துல்லிப மான மவுத்துமுண்டு,

(இ-ள்);- அவ்வல் கலிமா என்பதில் குர்ஆனும், சரிகை கிரியை, யோகம், ஞானம், என்கிற நாற்பயனும், இன்னும் அவ்வல் ஆகிறு லாகிறு, பாத்தின் என்னும் நாற்பொருளும் இன்னும் ஹயாத்தும் உண்டும், மவுததும உண்டும, என்று, முஸ்தபா சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்திருக்கின்றுர்கள்.

எ-று

இன்னஞ் சொல்கிறேன் கலிமாவிலே, யியல்பாம்பனுபக்காவானதுவும்-உன்னுந்தன்சீஹு தசுபீஹுட,னுறு திலாஹிறுபாத்தினுவும்-பன்னுங் காபிறு மிசுலாமுமே, பகர்ச்சையாகிய ஹறும் ஹலாலும்-பின்னும் இதுபாத்து நபியுடனே வேந்தன் கலிமாவிலுண்டேயென்றுர். (104)

(இ-ள்);- இன்னும் சொல்கிறதைக் கேட்பீர்களாக ஷை கலிமாவில் பனுவும் உண்டும் பகாவும் உண்டும், இன்னும் தன்சீஹும் தஸ்பீகும் வெளிரங்கம் அந்தரங்கம் முதலிய பதவிகளும்; இன்னும் காபிறும் உண்டும், இஸ்லாமும் உண்டும், இன்னும் கலாமும் உண்டும், ஹறுமும் உண்டா

யிருக்கிறது, இன்னும் இது பாத்தும் நபீயும் இருக்கின்ற தென்று ஆண்டவன் உடைய சிர்ருகிய கலிமாவில் அடங்கியிருக்கின்றதுஎன்று நபிகள் சிரோமணிஅருளினார்கள்

ஊட்டு மங்கூசு மம்கூசுட, னுண்மை யாகிய பறுலுகளும் -நாட்டும் சுன்னத்தும்வாஜிபுவும், நளினமாகிய அதபுடனே கூட்டுங்கலாவு டனையனுக்கும், கோமான் திருத்தூதர் முஹம்மதுக்கு-மூட்டு மீமானைக்கொண்டதற்கு, முற்றும் நபுசைந்துண்டாமென்றார் (105)

(இ-ள்):- இன்னும் அந்த மூலமந்திரமாகிய கலிமாவில் மன்கூஸ் மஉக்கூஸ் ஆகிய குணங்களும், பறுலு, சுன்னத்து ஆகிய வணக்கங்களும், வாஜிபு அதபு, ஆகிய ஒழுக்க நடைகளும், இன்னும் அல்லாவுக்கும், றசூலுக்கும் இடையில் கொழுகக்கூடிய நப்சுகள் ஐந்தின் குணகுணங்களும் அடங்கிப்போய் விட்டது, என்று நபிகள் மஹான் அருளிச் செய்தார்கள். எ-று

கருணைக் கலிமாவிலம்மாருவும், கனதிலவ்வாமாமுல்ஹிமாவும்-பொருந்துமுத்வ இன்னுவானதும் போற்றுந்தாத்தான நபுசானதும் விரண மில்லாம லுண்டானதும், விஸ்தீரணமான சிபாத்தானதும்-தருணந் தனக்குள்ளே மலக்குவந்து, சாற்றினையன் சாற்றினதை, (106)

(இ-ள்):- இன்னும் அறிந்துக்கொள் கலிமாவில் அம்மாரு முல்ஹிமா, முத்ம இன்னு முதலிய நப்சுகளும் இன்னும் தாத்து சிப்பத்துக்குறிய நப்சுகளும் பொதிந்திருக்கின்றது என்று ஜிபுரீல் மூல்யமாய் ரகசியம் இறங்கியிருக்கின்றது. எ-று

வீறு நாயகன் சொன்னதெல்லாம்,வேந்தன் நபியிறசூல் கேட்கவே-ஆறு நான்குள்ள கலிமாவிலே, அழகார் நாசூத்து ஜபறூத்துவும்-ஊறு மலக்கூத்து லாஹூத்துட, னுற்ற ஹாஹூத்து பாஹூத்துடன்-மீறும் ஜெம்ஹூத்து, இன்னஞ்சொல்ல, விபரம்ஜமாலுடன் ஜலாலையுமே. (107)

(இ-ள்):- இன்னும் ஆறு அட்சரங்களால் பொதியப் பெற்றுள்ள கலிமாவுக்குள்ளே, நாசூத்து, ஜபறூத்து, மலக்கூத்து லாஹூத்து, ஹாஹூத்து, பாஹூத்து, ஜம்ஹூத்து, இன்னும் ஜலால், ஜமால் ஆகிய இவைகளையும் வைத்தேன்.

என்று நாயகன் றசூல் மஹான் அவர்களுக்கு உபதேசமருளினன். எ-று

துய்யவன் சொன்ன கலிமாவெல்லாந், தொடர்ந்து நாயகன் குறுணையத்தில்-ஹையுல் கையூமோடேழாயத்திற்கற்பித்தாளின்னஞ் சொல்லக்கேண்மோ-மெய்மை யாகவே சொன்னனென்று, மேலாம் நபிசொன்ன ருண்மையாக-வையம் புகழ்ஹபீப் நபியிறசூல் வகுத்தே யதிலுள்ள வகை சொல்வதாம். (108)

(இ-ள்);- இவ்வாறு ஆண்டவன் உதயமாக்கியிருக்கின்ற கலிமாக்கள் எல்லாங்கூடி நாயன் வேதமாகிய குர்ஆன் ஷரீபில் 'ஹைய்யுல்கையூம்'!என்றஓர் அரும்பதத்திலும்இன்னும் ஓர் ஏழுவகைப்பட்ட ஆயத்துக்களிடத்திலும் அடக்கிவைத்துப்போட்டான். என்று நபிய்யுல் ஆலம் தாஜுல் அம்பியா திருவருள் செய்தார்கள். இனி விபரம் சொல்லப்படுகிறது.

இதுவெல்லாம் ஆலம்கபீறிலேயும், இன்சான் அறுவாஹுசகீறிலேயும்-பதிவா யறுயத்தான் கலிமாவிலே, படைத்தோன்சொல்லினன் குறுஆனிலே-மதியா லறியாத பேர்களுக்கும், வணக்கமுண்டுமோ வணங்கினலும்-விதியார் படும்பாடு மேலுண்டெனெ, வெற்றி நாயகனேதினனே. (109)

(இ-ள்);- இவையாவும் ஆலம் கபீறிலும், இன்சானுடைய அறுகொர்ஹ என்னும் ஆவிகோலங்கள் ஆலம் சிரீறிலும் நிற்பதை அறிந்து கொண்டு மோட்சவீடு பெற்றுக் கொள்ள வேண்டிய அத்தனை சூட்சியங்களையும் ஆண்டவன் கலிமாவில் தினித்து வைத்து நபிகள் நாயகமவர்களுக்கு அறிவித்தான் ஆனதினலே இவ்வளவு அறிவுகளையும் ஒன்றென்றாய் புகுத்து அறிந்து வணங்காத நிர்மூடஜனங்கள் என்ன வணக்கங்களைச்செய்தாலும் என்னபிரயோசனங் கிடைக்கபோகின்றது அவர்களுக்குரிய பாவங்களும் குறையாது கேள்வி கணக்குகளும் சரியாய் ஏற்படும்என்று நாயன்அருளியிருக்கின்றான்

தந்தன் றிருக்கையாலமைத்திலே, தன்னிலொரு நுகத்தாவை வைத்து-அந்த நுக்தாவை ரண்டதனில், அவ்வலில் வாயி சுல்பில் வந்து-சொந்த மாகிய லாமில்நின்று, தூராய் வரவேணு மிருலாமொன்றாய்க்-கொந்ததாகிய கல்பில் ஹூவைக்,கோமானெழுத்திது தாறுமொன்றும். (110)

(இ-ள்):- இன்சானுடைய படைகோலத்தை அல்லா தன் கையால் அமைத்து அதிலே ஒரு நுக்தாவை றூஹாக வைத்தான். அவ்விதம் வைத்த நுக்தாவை இரண்டு பங்காக்கி வைத்து இரண்டு நேத்திரங்களுக்கும் கமலமணியாக்கி வைத்தான், நாவை லாமாக்கி சகலமும் அதில் வந்து தான் ஆகாரங்களாகச் செய்தான். இருதயத்தில் ஹாவை வைத்துப் பொதிந்தான். எ-று

கல்பில் நின்றொரு அலிபெழுந்து, கருணை நெஞ்சினில்
ஹேயில் வந்து-வெல்லு மீமானுங் கல்பில்வந்து. விரைந்து
நாவான்தானுனதைச்-சொல்லுஞ் செயலான சொற்செய
லைச் சுற்றி வருவது சூரியனும்-வெல்லுஞ்செயலான சந்தி
ரன், மன்னன் வெள்ளியும்வகையஞ்சுமே. (111)

(இ-ள்):- இருதயத்தில் வைத்த ஹாவானது, அலிபாயிற்று அதுவே அப்பால் ஹேயாயிற்று, அவைகள் மூன்றும் இன்சானில் சொல், செயல், நாட்டம் ஆகிய கருமங்களாகி சந்திரன், சூரியன் ஆதியகலை ஓட்டங்களாகி. ராசி வோட்டங்களாகவும் ஆகி நடத்திக்கொண்டு வருகின்றன. எ-று

அஞ்சு முன்சொன்ன எழுத்தான்து, அவ்வல்தையிபு
பனுவாச்சுது-கொஞ்சு மேழெழுத் தானதுவே, குறித்துப்பக்
காவாச்சுதின்னஞ்சொல்ல-மிஞ்சு தாய்தந்தை வீணையும்,
மேலோன் றனக்கெல்லாம் பயமானதும்-பஞ்ச மீதினில்
நான்குவகை, பனுவான இன்சான்றுவாஹிலே, (112)

(இ-ள்):- முன் பாராவில் சொல்லி வந்த ஐந்து அட்சரங்களும், தையிபுக்கலிமாவில் பனுவாகிவிட்டது, அத்துடன் ஏழு அட்சரங்களும், பக்காவாகி நிலைத்திற்று, ஆனதிலே இன்சான் அறுவாஹுடைய ஆலத்தில் தாயுடைய சூறத்தாகிய, சுரோணிதத்திலும், தகப்பனுடைய சூறத்தான சுக்கில் கோலத்திலும் கோலங்கொண்டிருந்தான். எ-று

இன்சான்றுவாஹுசகீறுக்குள்ளே, இஃதெல்லாம் பனு
பக்காவானமூலம்-துஞ்சாயாத்தினுக் கேழெத்துத், துய்
யோன் தான் சொன்னான் பக்காவாச்சுது-துஞ்சான் அலி
பாச்சு இதுபாத்தெனுந், தூயோ னபியாச்சுச் காபானது
-மன்சூ கெனுமொரு மீமாச்சுது, மகுஷுக் காச்சுது
யேயாச்சுது. (113)

(இ-ள்):- இன்சானுடைய அருவாஹானது, ஆலம் சகீர் என்ற பேர் படைத்து, மேலே சொன்ன ஐந்தில் பனுவாகி ஏழில் பகாவென்று பேரை உண்டாக்கி நின்றது, ஆனதினுலே இதுபாத்தென்றது, கலிமாவில் அலிபாய் நின்றது, காப் என்றது, நபீயாக நின்றதுமீமானது, மன்சூஉ, என்றமகாமன் மகுமூதாயிற்று, ஹேயானது மஉஷூக்காய் நின்று ஹுவாயிற்று, என்கிலும் இதன் விபரம் ஷெய்குமார்களின் சமுகம் கேட்டறிவேண்டியது என்று நான் சகோதரர்களை ஏவுதல் செய்கிறேன். எ-று

ஆறு வகையான காரியத்தில், அல்லாஹு அம்மதுவான
துவும்-மீறும் சுபுஹானி மவுஜூதென்னு, மிகுந்த தாலிபு
மஹ்பூபென்னும்-ஊறுப்பதினுன் கவ்வெழுத்தான துவுமொ
ருவன் குத்துபாவையோதினதும் கேறிடும் ஜாம்ஆ வானது
வுங், கேள்வி மஹுஷக்கி லோதுவதே. (114)

(இ-ள்);- ஆருவகைப்பட்ட கருமங்களில் அல்லா வானவன் முகம்மியத்தாக ஆய்க்கொள்கிறான். அதுவையும், இன்னும் மஹ்பூபு சுபுஹானி என்பது, மவுஜூதானதையும், ஆனதினுலே தௌஹீதுடைய பாதையில் நாட்டம்பெற்றவன் அப்பவே மஹ்பூபாய் விடுகிறான் அதன் விபரத்தையும், இன்னும் சரீரத்தில் பதினுன்கெழுத்து தௌஹீதாக இருக்கின்றதையும் ஒருவனுகிய வலம்புரி மணியோசை செய்வதையும் இன்னும் சரீரத்தில் ஜாம்ஆயிருப்பதையும் மஹ்ஷரென்பதையும் ஷெய்கிடம் விளங்கியரிய வேண்டியது. எ-று

வன்னமஹுஷுக்க கைந்தெழுத்து. வருத்தினு னிசுக்
கைந்தெழுத்துச்-சொன்னுன் ஆஷிக்க கைந்தெழுத்துத்
தொகுத்தும் பின்னுந்தான் சொன்னுனல்ல-மன்னன் படைக்
கமுன் ஊந்தேழுத்தும், மத்லூ பாகவே சொன்னதுபார்-
பின்னர் படைத்தைந்த தெழுத்தாக்கினுன், பெருத்துப்பறந்
துபோமைந்தெழுத்தில். (115)

(இ-ள்):- மஉஷூக் கென்றது ஐந்தெழுத்தாயிற்று, ஆஷிக்கும் ஐந்திலுண்டாயிற்று, இஷ்க்கும் ஐந்தெழுத்திலுண்டுபட்டது, இந்த உலகம் சராசரங்களைப் படைக்கமுன் ஐந்தெழுத்தில் இருந்தது படைத்ததும் ஐந்தெழுத்தைக் கொண்டே இனி மத்லூபு என்றதும் ஐந்தெழுத்தைக் கொண்டும் உண்டானயாவும் ஐந்தெழுத்திலே அடங்கிப் போய் ஒடுங்கும என்று தாயன் திருவுளம பற்றினுன். எ-று

ஆகப்பதினைந்தாய் வந்ததுவும், அதனாற்பதினைந்தாய்ப்
போனதுவும்-கோகப் படும்பதி னைந்தானதுங், குதாயு
னடுமைகள் பிழைபொருத்துப்-போகப்படும்பதினைந்தெழு
தாற், பொன்னார் தந்தல்லா தீதாறெனும்-நோயகவு
லாவேலை செய்தானென்றும், நோக்கினார் நபிபாக்கியமே ()

(இ-ள்):- ஆதியில் இந்த ஆலம் இருந்ததும், பதினைந்து அட்சரங்களில்தானே, இனி அழிகின்றதும் பதினைந்து அட்சரங்களில்தான், ஆலத்தின் ஜீவராசிகள் பிழைத்து வருவதும் பதினைந்து எழுத்துகளாலேயே, அடியார்களின் கர்மதோஷங்களை நிவாரணஞ் செய்கிறதும் பதினைந்து எழுத்துக்களாலேதான் சுவர்க்கலோகத்து இன்பங்களும் பதவிகளும் ஓயாப்போகங்களும், மாணிக்க வீடுகளும், உல்லாசங்களும், ஆடம்பர சௌபாக்கியங்களும் அந்தப்பதினைந்து எழுத்திலேயே என்று நபிகள் ரட்சகராகிய நமது தலைவர் அவர்கள் திருவாய் மலர்ந்தார்கள். எ-று

பூரண முண்டான பதினாலைத்தான், போத மறிந்திட
வேணும் பரி-பூரணமென்றார் பதினைந்ததையும், புதியோன்
திருத்தூதர்பயஹாம்பரே-ஆரும் பூரணம் பதினைந்தையும்
அவ்லியாக்களுக்கல்லா சொன்னான்-சேருந் திருமீதில் வரும்
வணக்கச், செய்கை யாவுமே யறியவேணும். (117)

(இ-ள்):- சந்திரனின் பதினாலாம் அன்று பூரணசந்திரன் என்றிருக்கும் குணத்தை எவ்விதம் என்று நன்கு பகுத்து உணர்ந்தறிய வேண்டும். அதைத்தான் பதினைந்து என்று நபிகள் நாயகம் சொன்னார்கள். பதினாறில் பூரணம் என்பதை ஔலியாக்களெல்லாம் அறியவேண்டிய மலையடிவாரங்களிலும் கெவியடாந்த இருள்டைவனங்களிலும் ஜீவித்திருந்து கண்டு படியேறினார்கள், இந்த பூரணம் முற்றிலும் தபோவணக்கங்களிருக்கின்றது, அவ்வொன்றையும் சாதித்திருந்து வணக்கஞ்செய்து பழகி, மேன்பதவியான வஹதாநீயத்தின் துறையில் இறங்கி பரமாநந்தத்தில் முழுகி, பரிபூரண பாக்கியங்களை ஒருமிக்க அடைந்து நிற்கவேண்டும், என்று அல்லாஹுத்தஆலா திருவுளம் செய்து தன் ஹபீபுக்கு நல்லுபதேசம் செய்தருளினான். யோக நிஷ்டையென்பது இலேசல்ல, இவ்விதமாகிய வணக்கங்களையும், முருக்கபா-முஷாஹிதா

முதலிய இரகசியவணக்கங்களை யெல்லாம் எடுத்து இடைவிடாது நடந்து சாதுசற்குண தேகியாகி, அப்பால் யோகியாகி உலகங்களை ரட்சிக்க சக்தி பெறவேண்டும். எ-று

சொந்தப் பதினைந்தா மெழுத்தானதிற், றேற்றும் பதி
னைந்திற் பரிபூரணம்-இந்தப் பதினைந்து மானபின்னர், ஈயும்
பீர்வெளி தன்னிற் றேற்றும்-அந்தப் பதினைந்தும் பதினைந்
துந்தான், ஆண்டவன் சொன்னான் பீரெனவே-முந்திப் பதி
னைந்து கூடுவது. முழுதுங் குறை வாரா தோதுவதும், (118)

(இ-ள்):- இனிபதினைந்தாவது அட்சரத்தில்பரிபூரணமானது வெளியாகி ஏக சமதியத்தின் மகாம் உண்டாகி விடும் ஷி பதினைந்தாம் அட்சரங்களின் தவம் நிறைவேறிய பின்னர் ஷெய்குடைய மகாம் தோற்றரவாகி வந்து உன்னிலுண்டான குறைகள் முழுவதையும் தீர்த்து மேல்படிகளில் உன்னைச்சேர்த்து அல்லாவின் ஹலரத்தாகிய வஹதாநீயத்தின் குதுறத்து இலாஹியத்தில் உன்னைப்புகுதச் செய்விக்கும், இந்த பதினைந்தா மகாமானது சற்குருவாகிய பீராக இருக்குமென்று ஆண்டவன் தன் கலாமில் அருளிச்செய்திருக்கின்றான், ஆனால் முன் சொன்ன பதினைந்து அட்சரங்களின் தவம் சரிவர நிறைவேறி வந்திருக்கவேண்டும், அந்த தவமானது காமிலான குருவைக் கொண்டே சகலமும் கைகூடி விடச் செய்தவன்தான் சரியான பக்குவியாவான். எ-று

ஒவ்வொன் றாய்ப்பதி னைந்தையுந்தா, னொருவன் ஹல-
றத்திலொவ்வொன்றாகி-கவ்வி யவரவர் பரிபூர்ணம், வந்து
வளைந்தது சந்திரனான் - எவ்வியிறைவன் ஹலறத்திலே.
யேகியிறை முன்னே வணங்கியவன்-செவ்வின் படியேதான்
சேருவது. சேர்ந்தபடிகேளஞ் சந்திரனே. (119)

(இ-ள்):- அவ்விதம் ஒவ்வொன்றாக பதினைந்தையும் நிறைவேற்றினால் அது அல்லாவின் ஹலரத்தில் சரிவர நிறைந்த பதவியாகிய பூரண சந்திரனாக இருக்கும் அவ்விதம் சந்திரகலை பூரணப்பட்டால் ஆலங்களின் கோறங்கள் யாவும் அவனாக இருக்கும்,

இந்த மகாமானது அல்லாவின் பகாவுடைய திரு ஹல
தாக இருக்கும் இதில் இருந்து யோகவணக்கஞ் செய்
வன் சந்திரகலேயை நிறை பூரணம் செய்தவனுக இருக்கு

இதுவேபதினைந்பதினைந்துதான் இறையோனெருமாதமெ
வேப்தினுன்-சுதியார் பதினைந்து பதினைந்துதான் சுபுஹா
றப்பில் ஆலமீனே-மதியால் மனுடர்க்கு மூச்சானதில், னை
தான் பதினைந்து எழுத்தாகவே-விதியாம்படியறிவாளருக்கு
விதித்தான் வணக்கத்தின் மூச்சுமிதே. (120)

(இ-ள்):- ஆண்டவன் தன் ஹபீபுக்கு இந்த பதினைந்து மறு பதினைந்துங்கூட்டி ஒரு மாதம் என்று தெரிவித்தான், இந்த பதினைந்தையும் அட்சரங்களாகச்சேர்த்து ஆண்டவன் மானிட்ஜனனங்களுக்கு சுவாசகலேயாக வைத்தான். இது தான் ஞானவான்கள்வாசி என்று சொல்லிக் கொள்கின்ருர்கள். இதுதான் வாசியோகம், இந்த பதினைந்தையும் பிடித்து வணங்கத்தான் ஆண்டவன் இன்சான்களுக்கு உத்திரவு செய்திருக்கிருன். ஒளலியாக்களெல்லாம் இந்த வணக்கத்தால்தான் ஈடேற்றம் பெற்ருர்கள். எ-று

அஞ் செழுத்தாலே யிறந்ததுவும்-அஞ் செழுத்தாலே
பிறந்ததுவும், அஞ் செலுத்திலே பறந்ததுவும்ஆகப்பதினைந்
து எழுத்தனுற்-கொஞ்சி விளையாடு மிரவுபகற். கோமானின்
முப்பதெழுத்தானதும்-நெஞ்சிலிருந்து றாதுமுன்னே, நிறுத்
திக்கொள்மூச்சை வணக்கத்திற்கே, (121)

(இ-ள்):- முன் அஞ்செழுத்தாக எழுந்து நின்றதுவும் அப்பால் அல்ஹம்து ஆகிய ஐந்தெழுத்தாக உற்பத்தி செய்த ஆலம்களும் அப்புறம் ஐந்தெழுத்தால் உண்டாகிய மக்லூக்காத்துகளும் இந்த பதினைந்தெத்தாகத்தான் கூடி இருக்கின்றது இதில் ஆஷிக் மஃஹூக் என்ற இரண்டு பதினைந்துங் கூடி முப்பதாகிய திரு அட்சரங்கள் உண்டானது, இந்த சூட்சியந்தான் வாசி என்று சொல்லக்கூடிய உன் மூச்சாக இருக்கும் கடைகாலமாகிய உன் கியாமத்தில் உன்னுடைய நெஞ்சாங்குழியுல் இந்து இஸ்ருபில் எழுந்து சூறுஊதுவதற்கு முந்தியே மூச்சை எழும்பவிடாமல் நிறுத்தி சந்திர கோலமானதில் பொருந்திக்கொள்வாயாக. எ-று

வணக்கம்-புடிய ந து-மாபாவியார்-வணக்கப்படித்துக்
கொண்டிறையவனே-மணக்குங் கலிமாவால் வணங்கிநின்று,
மகுபூபெனும் நபீரைத் தொடர்ந்துகொண்டே-அணக்கி முஸ்
தகீம் பாலத்திற்கங்கருளாம் பீர்கையைப்பிடித்துக்கொண்
டே-இணக்கஞ் சுவர்க்கத்திலேறவேண்டு, மென்றே முஹம்
மத ரோதினரே (122)

(இ-ள்):- றகுமானுகிற ஆண்டவனே, வணங்குகிற துப்புறவாகிய வணக்கம் இன்னவிதம்தான் என்று பக்குவத்தை அறியாத பாவிகளாகிய தீபாவிஜனங்கள் மஃபூபாகிய சற்குரு நாதனின் பாதார விந்தத்தில் காத்திருந்து அவர் பணிவிடை செய்து அவரின் கிருபையைக் கொண்டே, அல்லாவை வணங்கும் வணக்கத்தைத் தெரிந்து சகல ஆலங்களின் வாசபூஷ்ணமாகிய கலிமாவில் வைத்து வணங்கி நின்று அங்கு எதிரே வரக்கூடிய சிராத்துல் முஸ்தக்கீன் என்னும் வாளிலும் கூர்மையான பாலத்தை காமிலான அந்த ஷெய்கின் கையின் வலுவைக் கொண்டே பிடித்து நடந்து அப்பால் வரக்கூடிய சங்கற்பங்களாகிய கடவுகள் எல்லாவற்றையுங் கடந்து அப்பால் சுவர்க்க உல்லாச இன்பவுலகத்தில் புகுந்து அங்குள்ள நித்திய சாதனங்களை அடையவேண்டும், அங்கிருந்து திரு ஹலரத்தின் பதவிகளில் ஏறிவிடவேண்டுமென்று நபிநாய திருமணி திருவாய் மதுரஞ்சிந்தினர்கள். எ-று

ஆனுற் பதினைந்துமறியாத பேரவர்களைக்கேட்பேனென
வோதினன்-தானுற் பதினைந்து மறிந்தபேரைத், தனித்துப்
பேசுவேனெனவோதினன்-மானேர் குருவான முசிலிம்களே
வணணம் பதினைந்து எழுத்தானது-கோனு னறியவும் படிக்
கவுந்தான், கோமான் தான்சொன்னன் பறுலாமென்றே, ()

(இ-ள்):- மிஃருஜியின் அந்தரங்க ஸம்பாஷணையின் போது, கபீபை நோக்கி உன் உம்முத்துக்களில் இந்த பதினைந்தும் அறியாத பாவிப்பயல்களை இலேசாகவிடமாட்டேன் கேள்விகள் கடிசாகக் கேட்டு தண்டிப்பேன் என்ருன், மறுபடியும் சொன்னன், அந்தப்பதினைந்தும் அறிந்த புண்யர்களான மஹான்களை என் சமுகம் இருத்தாட்டிவைத்து சரிசமத்தும் செய்து கொடுத்து வேண்டிய வரங்களையும் வாரிக்கொடுப்பேன்என்றும்சொன்னன் அந்தப்பதினைந்தும் அட்சரத்தால்

ஆண்டவன் சுவர்க்கத்தில் முகம்மதுடன் அமைத்திருந்து ஹூருனி மாதர்களைத்தான் பூலோகத்தில் நம்பிராட்டிகளாய் உண்டுபடுத்தி வைத்தான். என்று சக்கரிச்சொல்லப்பட்டது.

வானேழ் புவியெல்பைத்துல் மஃமூறில், மருவுமிருப்பது நாலானதும்-தானேன் பகலேழுச் சிங்காசனந், தரித்த ஆறு தான் அறுஷு குறுசு-ஆனே னைம்பது ஆணினமும், அன்னூன் குன்னென்ற பேச்சானதில்-ஆனேன் ஈமானை நிறுத்தி வைத்தான், முஹம்மது நபியிதி லிருந்தார், (128)

(இ-ள்):- வானம் ஏழு அடுக்கும் பூலோகம் ஏழு தீவும் சந்திர சூரிய ஒளிகளில் ஏழுநாள் வட்டமுங்கூடி அல்லாவின் சிங்காசனமாக இருக்கும், ஆருதாரம் என்னும் ஆறு கோணங்களும் அறுஷு குர்சு ஆகிவிட்டது. நூனிலுள்ள ஆண் வகைகள் ஐம்பதும் குன்னென்ற வார்த்தையைக் கொண்டு (கல்பு) தாமரை கமலவட்டத்தில் ஈமான் என்ற ஆசனத்தை யிருத்திவைத்தான் முகம்மதியாவானது அந்த கமலாசனத்தின் ஆதிகாரியாக வீற்றிருந்து ஆலம் கபீரை ராஜிய பரிபாலனம் செய்து வருகின்றது. எ-று

பூமான் தனமான புதுமைகளைப், புகலக்கேளுங்காளெல்லோருமே-கோமா னுவனுக்கினதைக், குன் பயக்கூனிற் கேட்பதுவே-ஆமாமஃதுண்மையாகுமென்றே, யறிந்துகடவும் வியாதியமென்றே-சீமானபியும் மத்தானவரே, திடமாயறிந்துதானடப்பீர்களே. (128)

(இ-ள்):- சர்வ உலகத்தினவும் அரசாட்சியைப் பெற்றுக் கொள்ளும்-பொருட்டு இன்சான் கோலத்தில் வந்திருக்கின்ற முகம்மதின் கன்தி தங்கிய உம்மத்துமார்களே! இந்த இடத்தில் நல்ல கவனியுங்கள், குன் என்றதால் உண்டாக்கிய ஆலங்களின் சிர்றுபிள குன் பயக்கட்டுகை நீங்கள் பொருந்திய பின்னர்சகலஆலங்களின்தஸ்பீஹு ஓசைகளையும்இன்பங்களையும் நீ ஒன்றுன்றுய்த்தெரிந்து கொள்வாய் அப்போதுதான் மஅரிபத்துல்லாவின் பாரதூரமான பேரின்பவெள்ளம் கரைகடந்து பாயும் ஆச்சரிய சரத்தைக்காண்பாய். மகிழ்வாய் கூத்தாடுவாய் வாய்பொத்திக்கொண்டு ஷுக்றுசெய்வாய் ஆனதால் அவ்விதம் செய்யப்பழக்கம் செய்வது மாநுடாதிகள் பேரில் முக்ய விதியாக இருக்கும். எ-று

இஞ்ஜீலதௌஹீத்ரமிதுவாமென்றும் இன்னபடியாகும் காபும் நூனும் அஞ்சி யஞ்சாம லருளாமென்றும், ஆயத்து போனுல்வருமாமென்றும்-கொஞ்சிவிளையாடுந் தவுசானதிற் கோமனுனவன் காண்பா னென்றும்-நெஞ்சிலரிந்துபீர் முரீதாவதும் நிபுணர் நபியுடன் கூடுவதே. (130)

(இ-ள்):- ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கிறங்கின இன்ஜீல் வேதத்தில் வைத்துப்பொதிந்திருந்த மெய்ஞ்ஞான ரசமாகிறது இதுவாக இருக்கும். (குன்) என்றதில் இருக்கும் காபும் நூனும் இன்னபடிதான் என்று உணர்ந்து முஷாஹிதா செய்து வரவேண்டும். அப்போது ஒருவடிவு உன்பால் வரும் உடனே விநாடி நேரத்தில் மறையும், அதுறப்புடைய தஜல்லியாக இருக்கும் அதற்கு அச்சமில்லாமல் இருந்து நேசிக்க வேண்டும் சிலகாலஞ் சென்ற உடன் மோகமான ருபலாவன்னத்துடன்வந்து உன்னைமயக்கி உன்னுடன் விரகலாகிரியுடன் கொஞ்சி விளையாடி நடிக்கும், அப்பால் ஒரு சிம்மாசனம் தெரியும், அது பைத்துல் மஉமூரின் உச்சத்திலாயிருக்கும். அதில் நீ றப்புடைய திரு ஒளியைக்காண்பாய். அக்மல் ஷுஹூதின் பரமாநந்த வெள்ளத்தில் மிதந்து சுகிப்பாய் சற்குருவையும், நபியுல்லாவையும் அப்போது கூடிக் கொள்வாய். எ-று

உறுதி யினவயெல்லாம் நூற்றைம்பதினுள்ள பறுளாகு முஸ்தாதுக்கும்-மறதி யில்லாத முறுஷிதுக்கும், வைத்தானபிஷபா அத்துப்பெற-அறுதி குறையாத புறப்பறுலும்,ஆக நூற்றைம்பதானதையும் பொறுதி தரும்புறுக் கானுனதைப், போற்றிம் வகையதிற் சாற்றியதே. (131)

(இ-ள்) மேலே சொல்லி வந்துள்ள இப்பதவிகள் யாவற்றும் நூற்றைம்பது பறுலுகளைப் பொதிந்தாக இருக்கும். நபியவர்களின் ஷபா அத்தென்ற மன்றுட்டமானது யாருக்கென்றுள் காமலான குருவுக்கும் சொல்லைமறக்காத ஓர்மையான முரீதுகளுக்குமாக இருக்கும் ஷை சுறுதிமாறப்படாத உள் பறுலு புறப்பறுலு ஆக நூற்றைம்பதையும் அல்லா உம்முல்கிதாபாக சில ஆயத்துக்கள் குர்ஆன் ஷரீபில் இறக்கிவைத்தான் அதில் மேற்கண்ட பறுலுகளின் விபரங்களைத் தெளிவாய் உரைப்படுத்தியிருக்கின்றான், இர்ஷாதுடைய முர்ஷிது

களைப்பிடித்தால் வெளியாக்கித் தருவார், மற்றப்படி பகல் வேஷந்தரித்துகோழிக்கறிக்கலையும்சாப்பாட்டுராமன்களிடத்தில் விளங்கிக்கொள்ள முடியாது, வழிகெட்டுப்போவீர்கள், மெய்க் குருமார்கள் அழுக்கும் சிக்குமாகவும் அல்லது பட்டும் பட்டாளியாகவும் இருந்தாலும் சரியே மொத்தத்தில் சத்துள்ள புருஷர்களாய் இருப்பதைக்கண்டு பிடிக்கவேண்டியது.

நல்ல ஷரீஅத்து வித்தாச்சுது நலமாந் தரீகத்துமரமாச்சுது எல்லை ஹக்கீக்சத்துப் பூவாச்சுது, அலங்குங் கனியாச்சு மஹரிபத்துச்-சொல்லும் ஷரீஅத்துத் தோலாச்சுது, தோற்றுந்தரீக்கத்துத் தசையாச்சுது-வெல்லும் ஹக்கீகத்து எலும்பாச்சுது, வெண்மூளையுமேலு மகரிபத்தே. (132)

(இ-ள்):- மெய்ஞ்ஞானம் என்னும் ஓர் அற்புத விருட்சத்திற்கு விதையானது ஷரீஅத்தாக இருக்கும்,இனிதரீக்கத்தென்பது பணர்களாக இருக்கும்; அதின் அதிவாசனையுள்ள பூவானது ஹக்கீக்கத்தாக இருக்கும், அதன் இன்பரசமான கனியானது. மஅரிபத்துல்லாவாக இருக்கும் இ னும் (தெளஹீது என்ற ஒரு மனிதனுக்கு அவன் ஜடலத்தைச் சூழ்ந்துள்ள தோலாகிறது, ஷரீஅத்தும் சதையானது. சறீக்கத்தும் எலும்பானது, ஹக்கீக்கத்தும்,மூளையானது மஅரிபத்துமாக இருக்கும், ஷரீஅத்து என்பது நேர்வழியில் நின்று சிறுபாவம் பெரும்பாபங்களை அறக்களைந்து சாதுவாக நடந்து கொள்கிறது. தறீகத்து என்பது ஒரு குருவின் கையைத்தொடர்ந்து அல்லாவின் இல்மைவிளங்கிக் கொள்கிறது. ஹக்கீக்கத்து என்பது அந்த சற்குருவின் சொல்லையும் மற்றவைகளையும் உண்மைபடுத்திக்கொண்டு கொழுவிக்கொள்கிறது மஅரிபத்தானது, தவத்தில் இருந்து மனஸை ஒரு லயம் செய்து நாளாவட்டதில் பக்குவியாகி சமதியத்துடன் விரவி ஹக்குடன் ஒன்றுபட்டு தன்னை பனுசெய்து வஹதாநீயத்தியத்தின் துரையில் முழுகிறது, ஆக இவைகளாக இருக்கும் இவ்வித வரன்முறைபோல் அறிவை அறிந்து யோக சாதனம் செய்து பக்குவியாக வேண்டியது. எ-று

அலிபு முதல்ஹேயும் ஷரீஅத்தாச்சு, அருளு தாலமுதல் சாதுமட்டும் மெலிவில்லாமலே தரீக்கத்தாச்சு மேலோன்லாதொடு காயு மட்டும்-ஒலியியின் ஹக்கீக்கத்துத் தாஞச்சு.

உற்ற காபுடன் எமட்டாக-வலியோன் மஹரிபத் தாச்செளவே, மத்தோடிஃருபு முஹப்பத்தாமே. (133)

(இ ள்):- இனி அலிபு இருபத் தொன்பது அட்சரங்களும் இந்த நான்கு பதவிகளில் அடங்கியிருப்பதைத் தெரிவிப்பதாக இருக்கும்,அதாவது எப்படி என்ருலோ! அலிபு தொடுத்து. ஹேய்வரையிலும் உள்ள ஹர்புகள் எல்லாம் ஷரீஅத்தாக இருக்கும். அப்பால் தால் தொடுத்து சாதுவரையிலும் தரீகத்தாக இருக்கும், அப்பால் லாது தொடுத்து காபு மட்டிலும் ஹக்கீகத்தாக இருக்கும் அப்பால் காபு தொடுத்து, ஏய் மட்டிலும் மஅரிபாவாக இருக்கும், இனி மத்து தொகுத்து இஃருபு மட்டில் முஹப்பத்தாக இருக்கும், இப்படி அட்சரங்களையும் அவைகளின் குணங்களையும் படுத்து உணர்ந்து தெளிவடைய வேண்டியது. எ-று

அண்டர்ஜிபுரியீல் ஷரீஅத்தாச்சு, அருளு மீக்காயில் தரீக்கத்தாச்சு- பின்டா ரீசுரூபீல் ஹக்கீக்கத்தாச்சு, மேன்மை யிசுரூயீல் மஹரிபத்தே-தொண்டர் பணிவிடைச் சொல்லானது.சுஜூதிடும் பெரியோர்களைத்தான்-கொண்ட நாயகனல்லாவென்ருல், கூவே முஹப்பத் தானதுவே. (134)

(இ-ள்):- இனிமலக்குகளில் பகுத்தறிய வேண்டியது. ஜிபுரீல் என்பது ஷரீஅத்தாயிற்று, மீக்காயில் என்பது தரீக்கத்தாயிற்று, இஸ்ருபீல் என்பது, அகீகத்தாயிற்று. இஸ்ருஹில் என்பது மஅரிபத்தாயிற்று, இனி தலையைப் பூமியில் சாய்த்து சாஷ்டாங்கம் செய்கின்றவர்களுக்கே அடிமைத்தனம் என்ற பெயர் உண்டாயிற்று, மனக்கொலுவில் ஹுவை நிறுத்தி வணங்குகிறவர்களுக்கு சுயேசசை அதிகாரி என்ற ஔலியா என்னும் பட்டமுண்டாயிற்று, என்று ஆண்டன் அருளிச்செய்தான். இதுவே முகப்பததுடைய மகாமாக இருக்கும். எ-று

ஆனல் முஹம்மது ஷரீஅத்துக்கு ஆதார மாமி-தந்ஆலநபி தேஞர் தரீக்கத்து ஆதம்பாவா, செம்ம லாகின ருண்மையாகத்-தாஞே னிபுரூஹீம் ஹக்கீக்கத்துக்குக், தரித்தகாரணத்தனமுடையோர்-ஈன மில்லாத மஹரிபத்துக், கேவிஞன் புலியலியாரைத்தான். (135)

களைப்பிடித்தால் வெளியாக்கித் தருவார், மற்றப்படி பகல் வேஷந்தரித்துகோழிக்கறிக்கலையும்சாப்பாட்டுராமன்களிடத்தில் விளங்கிக்கொள்ள முடியாது, வழிகெட்டுப்போவீர்கள், மெய்க் குருமார்கள் அழுக்கும் சிக்குமாகவும் அல்லது பட்டும் பட்டாளியாகவும் இருந்தாலும் சரியே மொத்தத்தில் சத்துள்ள புருஷர்களாய் இருப்பதைக்கண்டு பிடிக்கவேண்டியது

நல்ல ஷரீஅத்து வித்தாச்சுது நலமாந் தரீகத்துமரமாச்
சுது எல்லை ஹக்கீக்சத்துப் பூவாச்சுது, அலங்குங் கனியாச்சு
மஹரிபத்துச்-சொல்லும் ஷரீஅத்துத் தோலாச்சுது, தோற்
றுந்தரீக்கத்துத் தசையாச்சுது-வெல்லும் ஹக்கீகத்து எலும்
பாச்சுது, வெண்மூளையுமேலு மகரிபத்தே. (132)

(இ-ள்):- மெய்ஞ்ஞானம் என்னும் ஓர் அற்புத விருட்சத்திற்கு விதையானது ஷரீஅத்தாக இருக்கும், இனி தரீக்கத்தென்பது பணர்களாக இருக்கும், அதின் அதிவாசனையுள்ள பூவானது ஹக்கீக்கத்தாக இருக்கும், அதன் இன்பரசமான கனியானது. மஅரிபத்துல்லாவாக இருக்கும் இன்னும் (தெளஹீது என்ற ஒரு மனிதனுக்கு அவன் ஜடலத்தைச் சூழ்ந்துள்ள தோலாகிறது, ஷரீஅத்தும் சதையானது. சறீக்கத்தும் எலும்பானது, ஹக்கீக்கத்தும், மூளையானது மஅரிபத்துமாக இருக்கும், ஷரீஅத்து என்பது நேர்வழியில் நின்று சிறுபாவம் பெரும்பாபங்களை அறக்களைந்து சாதுவாக நடந்துகொள்கிறது. தறீகத்து என்பது ஒரு குருவின் கையைத்தொடர்ந்து அல்லாவின் இல்மைவிளங்கிக் கொள்கிறது. ஹக்கீக்கத்து என்பது அந்த சற்குருவின் சொல்லையும் மற்றவைகளையும் உண்மைபடுத்திக்கொண்டு கொழுவிக்கொள்கிறது மஅரிபத்தானது, தவத்தில் இருந்து மனஸை ஒருலயம் செய்து நாளாவட்டதில் பக்குவியாகி சமதியத்துடன் விரவிஹக்குடன் ஒன்றுபட்டு தன்னை பனுசெய்து வஹதாநீயத்தியத்தின் துறையில் முழுகிறது, ஆக இவைகளாக இருக்கும் இவ்வித வரன்முறைபோல் அறிவை அறிந்து யோக சாதனம் செய்து பக்குவியாக வேண்டியது. எ-று

அலிபு முதல்ஹேயும் ஷரீஅத்தாச்சு, அருளு தாலமுதல்
சாதுமட்டும் மெலிவில்லாமலே தரீக்கத்தாச்சு மேலோன்லா
தொடு காயு மட்டும்-ஒலியியின் ஹக்கீக்கத்துத் தானுச்சு,

உற்ற காபுடன் எமட்டாக-வலியோன் மஹரிபத் தாச்சென
வே, மத்தோடிஃருபு முஹற்பத்தாமே. (133)

(இ-ள்):- இனி அலிபு இருபத் தொன்பது அட்சரங்களும் இந்த நான்கு பதவிகளில் அடங்கியிருப்பதைத் தெரிவிப்பதாக இருக்கும், அதாவது எப்படி என்றுலோ! அலிபு தொடுத்து, ஹேய்வரையிலும் உள்ள ஹர்புகள் எல்லாம் ஷரீஅத்தாக இருக்கும். அப்பால் தால் தொடுத்து சாதுவரையிலும் தரீகத்தாக இருக்கும், அப்பால் லாது தொடுத்து காபு மட்டிலும் ஹக்கீகத்தாக இருக்கும் அப்பால் காபு தொடுத்து, ஏய் மட்டிலும் மஅரிபாவாக இருக்கும், இனி மத்து தொகுத்து இஃருபு மட்டில் முஹப்பத்தாக இருக்கும், இப்படி அட்சரங்களையும் அவைகளின் குணங்களையும் படுத்து உணர்ந்து தெளிவடைய வேண்டியது. எ-று

அண்டர்ஜிபுரியீல் ஷரீஅத்தாச்சு, அருளு மீக்காயில்
தரீக்கத்தாச்சு- பின்டா ரீசுருபீல் ஹக்கீக்கத்தாச்சு, மேன்
மை யிசுருயீல் மஹ்ரிபத்தே-தொண்டர் பணிவிடைச் சொல்
லானது சுஜூதிடும் பெரியோர்களைத்தான்-கொண்ட நாயக
னல்லாவென்றால், கூவே முஹப்பத் தானதுவே. (134)

(இ-ள்):- இனிமலக்குகளில் பகுத்தறிய வேண்டியது. ஜிபுரீல் என்பது ஷரீஅத்தாயிற்று, மீக்காயில் என்பது தரீக்கத்தாயிற்று. இஸ்ருபீல் என்பது, அகீகத்தாயிற்று. இஸ்ருஹில் என்பது மஅரிபத்தாயிற்று, இனி தலையைப் பூமியில் சாய்த்து சாஷ்டாங்கம் செய்கின்றவர்களுக்கே அடிமைத்தனம் என்ற பெயர் உண்டாயிற்று, மனக்கொலுவில் ஹஜூவைநிறுத்தி வணங்குகிறவர்களுக்கு சுயேச்சை அதிகாரி என்ற ஒளலியா என்னும் பட்டமுண்டாயிற்று, என்று ஆண்டன் அருளிச்செய்தான். இதுவே முகப்பதுடைய மகாமாக இருக்கும். எ-று

ஆறல் முஹம்மது ஷரீஅத்துக்கு ஆதார மாமி-தந்ஆலநபி
தேனுர் தரீக்கத்து ஆதம்பாவா, செம்ம லாகினுருண்மையா
கத்தானே னிபுருஹீம் ஹக்கீக்கத்துக்குக், தரித்தகாரணத்
தனமுடையோர்-ஈன மில்லாத மஹரிபத்துக், கேவினுன்
புலியலியாரைத்தான். (135)

(இ-ள்):- இன்னும் ஒரு விபரமாவது, என்னவென்ருல் முகம்மது நபியவர்கள் ஷரீஅத்தாக இருக்கின்ருர்கள். ஆலங்களுக்கு ஆதாரப்பொருளாய் இருப்பதன் பொருட்டு, இதனுல்தான் அவர்களுக்கு ஆலநபி, என்ற திருநாமம் உண்டாயிற்று. இனி தரீக்கத்தானது, பாவா ஆதம் நபியவர்களாக இருக்கும், இன்சானுடைய வடிவம் அவர்களில் நின்றுமுண்டானதினுலே, இனி ஹக்கீகத்தானது நபி இப்ருஹீமாக இருக்கும். உண்மையில் வெளியான ஞானமார்க்கம் அவர்களில் நின்று முண்டுபட்டதினுலே, இனி மஅரிபாவானது, அருஷின் வேங்கைப்புலியாகிய ஹலரத்து, அலியாக இருக்கும். மெய்ஞ்ஞானத்தின் தலைவாசல் அவர்களானபடியால்.

பேச்சு ஷரீஅத்து மூச்சானது பெரியோன் தரீகத்து கேள்விதானும்-ஆச்சு ஹக்கீக்கத்து கண்ணது அருளு மஹரிபத் தெனவோதினுர்-பேச்சும் பல்க்குத்தி ஷரீஅததாகும், பேறு பெற்றுத்தான் தரீக்கத்தாகும்-வாச்ச ஹக்கீக்கத்துக் கருஈரலாம் வள்ளல் தாமை மஹரிபத்தே. (136)

(இ-ள்):- இனி அவ்விபரங்களை ஜடலத்தில் வைத்துப் பேசும்போது. ஷரீஅத்தானது இன்சானின் நாவில் உண்டாகும் வார்த்தையாக இருக்கும். இனிதரீக்கத்தானது, ஸ்வாசமாகிய வாசியாக இருக்கும். ஹகீக்கத்து கேள்வியாக இருக்கும் மஅரிபத்து இரண்டு நேத்திரங்களாக இருக்கும். அண்டத்தில் இவ்விதம் இருக்க, இனி கீழ் உலகமாகிய பிண்டத்தில் பல்குத்தியானது ஷரீஅத்து, நுரையீரலானது தரீக்கத்து கறுஈரலானது ஹக்கீகத்து. தாமரைக்காயானது, மஅரிபத்தாக இருக்கும், இவ்விதம் உடற்கூறையறிந்து ஒவ்வொன்றிலும் உணர்ச்சிசெய்து தெளிவடைந்து தேறி நடவடிக்கை நடத்தி பக்குவப்படவேண்டியது. எ-று

அந்த ஹேமீம் ஷரீஅத்தென்றும், அந்த யாசீன் தரீக்கத்தென்றும்-அந்தத் தாஹா ஹக்கீக்கத்தென்றும், அந்தவொளியுன்னு பூசல்முவ்மினத்தி-அந்த மஹரிபத் தாகுமென்றும், அல்லா தான் சொன்னுன் குறுஆனிலே அந்தமவுலாகாப் முஹப்பத்தென்றும், அருளோடழைத்துன்னுள் ளுடையவனே, (137)

(இ-ள்):- இனி குர்ஆன்ஷரீபில் அந்த ஹாமீம் என்பது ஷரீ அத்தாவும். அந்த யாசீன் என்றது தரீக்கத்தாகவும் அந்த தாஹா என்றது ஹக்கீகத்தாகவும், அன்னபுசல் முஉமினத் தென்றது மஅரிபத்தாகவும் இருக்கும். இனி அந்த மௌலாவும் காபும்கூடி முஹப்பத்தாகுமென்று அர்றஹ்மான் தன் கலாம் ஷரீபில் திருவுளம் பற்றினுன், இந்த மேலாம்பரங்களை யெல்லாம் வைத்து தன் அருளுடைய, ஹபீபுக்கு பேரிட்டழைத்தான், எ-று

தவ்ருத் தானது ஷரீஅத்தாகும், தாங்கும் சபூறுதான் தரீக்கத்தாகும்-எவ்வில் இஞ்ஜீல் ஹக்கீக்கத்தாகும், எங்கள் முஹம்மதுநபி தமக்குச்-செவ்விதாகவே சொன்னுனென்று செய்தியறியுங்காளென்றுசொல்லி-யவ்வா றுலகத்தோ ரறியவிதி, யேவும் பீருக்கு மற்றுளோர்க்கும், (138)

(இ-ள்):- இனி வேதாகமங்களில் தௌருத்தென்னும் வேதமானது ஷரீஅத்தாகவும் ஸபூறுவேதமானது தரீக்கத்தாகவும் இன்ஜீல் வேதமானது ஹக்கீகத்தாகவும் குர்ஆனே ஷரீபானது, மஅரிபத்தாகவும் இருக்கும் இந்தப்படியறிந்து குர்ஆன் ஷரீபில் புதைந்து போய்கிடக்கின்ற மெய்ஞ்ஞானத் தேனமிர்த ரசத்தை உண்டு கடைத்தேறுவதற்கு, உலகத்திலுண்டான சகலமானுடர்களுக்கும் முக்கியக்கடமை என்று ஆண்டவன் திருக்கட்டளை செய்தான். இதுவே முரீது கொடுத்துக் கொண்டிருக்கும் அறிய விதியாக்கினுன். எ-று

தருமதாகிய முஹம்மதுக்குத் தங்கும் புறுக்கானைத் தகுமதாக்கிப்-பகும தாகிய இல்முக்கெல்லாம்,பாங்காய்த் தாயாகும் குறுஆனது மகராஜன்புறுக் கானதுவே, மஹரிபத் தென்று பின்னுஞ் சொன்னுன்-மிகுரு ஜானதும் உம்முல் குருன், மிகுத்த முஹப்பத்தென்ருேதினுன். (139)

(இ-ள்):- அல்லா தன் தகுதி பெற்றிருக்கின்ற றசூலாகிய முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை வெளியாக்கி அவர்களுக்கு வேதங்களில் ஞானதேன்கனியாகிய குர்ஆன்ஷரீபை இறங்கியருளினுன் ஆனதினுல்தான் ஆலத்தில் வெளியான சகல இல்முல்களுக்கும் குர்ஆன்ஷரீபானது தாயாக இருக்கும். இனி மிக்ருஜி இரவையில் தன்

ஹபீபுடன் ஸம்பாஷித்தானே அந்த இரகசியங்களை உம்முரு குர்ஆன் என்று பெயர்சூட்டி அதைத்தான் முஹப்பத்தென்று திருவுளம்பற்றினன். (எ-று

அன்னக்கொடையிடுங்கருத்துடையா, ராலிமுஹம்மது
நயினருக்கு-மன்னன் ஷரீயத்துப் பகுத்துவைத்தான் வல்
லோன் பருலான காரியத்தை-மின்னும் சுஜூதுலாம், தரீ
கத்தென்று, மிகுந்த ஹக்கீக்கத்து வாஜிபென்னும்-உன்னும்
சுன்னத் மஹ்ரிபத்து,மோதும் கூவெல்லா முஹபத்தென்றும்

(இ-ள்);- அன்னக்கொடை என்றது, மனிதர்களுக்கு மோட்சத்தை கொடுக்காநின்ற அஷ்ஹது அன்ன முகம்மதன், என்ற கலிமாவை உம்மத்துகக்ளுகு உதவிதானம் புரிந்த மஹா வள்ளலாகிய, நபிகள் சிரோமணியவர்களுக்கு ஆண்டவன் ஷரீஅத்தை பறுலான காரியங்களில் நிறப்பி வைத்து விட்டான். இன்னும் லாம் என்ற சுஜூதை தரீக்கத் தாக்கினன். இனி வாஜிபென்றதை ஹகீகத்தாக்கி வைத் தான். சுன்னத்தானதை மஅரிபத்தாக்கி உதவி செய்தான், ஹூ வென்னும் கலிமாமந்திரத்தை முஹப்பத்தாக்கி தந்தான். எ-று

உன்னு முஷாஹிதா ஷரீஅத்தாச்சு, உற்ற முருக்கப்பா
தரீக்கத்தாச்சு-அன்ன இருஷாது ஹக்கீக்கத்தாச்சு, அரிய
காமிலே மஹ்ரிபத்தாம்-துன்னுந்தையுபு ஷரீஅத்தாச்சு,
சொல்லும் ஷஹாதத்துத் தரீக்கத்தாச்சு-மின்னுந்தன்சீகு
ஹ்க்கீக்கத்தாச்சு. மிகுந்ததசுபீகு மஹரிபத்தே. (141)

(இ-ள்):- இனி முஷஹிதாவின், இருப்பானது ஷரீஅத் தாயிற்று, முருக்கபா என்னும் நினைவிற் கொழுவிக்கொள் கிறது தரீக்கத்தாயிற்று இர்ஷாது என்ற உறுதிசாதனையானது, ஹகீகத்தாயிற்று, அறிதான சற்குணத்தில் கோலங் கொண்டமைந்தமைந்து பரிசுத்த காமிலாகிறது மஅரிபத் தாயிற்று இனிகலிமாவில் இந்தப்பதவிகள் தையிபுக்கலிமா, ஷரிஅத்தாகவும். ஷஹாதத்துக் கலிமா, தரீகத்தாகவும், தன் சீஹூக்கலிமா ஹக்கீகத்தாகவும், தஸ்பீஹானது மஅரிபத் தாக இருக்கும், இதுவே தௌஹீதுக்கலிமாவாக இருக்கும். இவ்விதம் ஒன்ரென்றையும் விபரத்துடன் தெரிந்து தெளிந்து நப்ஸை காமிலாக்கிக் கடைத்தேற வேண்டியது. எல்லாம்

காமிலான ஷெய்கைத்துயர்ந்தால் தான் கிடைக்கும், ஆசை யிருந்தால் அதுவும் அகப்படும். எ-று

லாஇ லாகாஇல் லல்லாகென்று, நாடிச் சொல்திக்கீர்
ஷரீஅத்துக்கும்-ஒய்வில்லா மல்இல் லல்லாகென்று,மோதுந்
திக்கீறுதான் தரீக்கத்தாகும்-ஆயுமூமினல் லாகெனவே அரு
ளுந் திக்கீறுதான் ஹக்கீக்கத்தாகும்-நாயக னல்லா அருளு
திக்கீர், நளின மஹ ரிபத்தாகுமென்ருர் (142)

(இ-ள்):- இனி கலிமாவில் சொல்கிறேன் லாஇலாஹ் இல்லல்லாஹு, என்று சொல்கிற திக்ருனது ஷரீஅத்தாக இருக்கும் இல்லல்லாஹு என்று சொல்லுகிறது, தரீக்கத் தாக இருக்கும் மூஉமினல்லாஹ், என்று செய்கிறதிக்ருனது ஹக்கீகத்தாக இருக்கும், அல்லாஹ என்று செய்கிற திக்ருனது, மெய்ஞ்ஞானமாகிய மஅரிபத்தாக இருக்கும். எ-று

கூவென்ற திக்கீருனதுதான், கோமன் முஹம்பத்த தாகு
மென்ருர்-காவென்ற பருவானதிலே, காணும் காசிலாகிய
காரியம்-ஏவென்ற தாலி லிருப்பதும்,இல்மு நளினங்கொண்
டிருப்பதும்-ஆயும் கலிமாவில் வணங்குவதும், அல்லா தான்
சொன்ஞன் பக்கருவிலே. (143)

(இ ள்):- இனி (ஹூ)என்று செய்கிற திக்ருனது முகப் பத்தாக இருக்கும். ஹா என்றது, அதாவது உன்னுடைய அனுநீயத்துகள் அத்துப்போன பிறகு அப்பால் உன்நாட்டம் போல் காரியங்களும் ஹாசிலாகுவதைக் காண்பாய், ஏ ய் என்று சொல்லக்கூடிய தாலில் அதாவது நிஷ்டையில் இருக் கும் விதத்தையும் முஷாதாவின சகலமான வணக்கங்களும் இன்ன மாதிரிதான் என்று நாயன் குர்ஆன் ஷரீபில் சூறத்து பக்ருவில் திருவுளம் பற்றினன். அதில் நோட்டமிடுகிற ஆரிபீன்களுக்கு விளங்கும். எ-று

மன்னுங் கலிமாவில் தன்சீகுண்டும், வரிசை யருளுண்
டுந் தசுபீகுண்டும்-உன்னும் பருவுண்டும் பக்காவுமுண்டு,
முறுதி இதுபாத்து நபியுமுண்டு-மின்னும் ஜமாலுடன் ஜலா
லுமுண்டு, மிகுந்த கமாலுடன் கருணையுண்டும்-பின்னி வினை
யாட்ப் பிறவியுண்டும்,பிறவியதை நீக்கமுறையுமுண்டும். ()

(இ-ள்):- திக்ருகளை எடுத்துச் செய்பவர்கள் அறியவேண்டியது, என்னவென்றால் ஷி கலிமாவில் தன்சீஹ் என்பதும் உண்டும் தஸ்தீஹுமும் உண்டும், பனுவும் உண்டும் பகாவும் உண்டும் நபீ இதுபாத்தும் உண்டும். இன்னும் அதில் ஜலாலுமிருக்கிறது. ஜமாலுமிருக்கிறது இன்னும் அநேகமான கமாலியத்தின் கிபாயத்துகளும் இருக்கின்றது, இன்னும் நீ நினைத்தபடி இந்தஉடலை எவவாறு சுருபிக்கவும் இருஜனுகப்பிறப்பிக்கவும், அறவே பிறவி எடுக்காமல் நீடூழிகாலம் நிலைக்கவைக்கவும் வகைகள் இருக்கின்றன. எ-று.

அவ்வல் ஆகி ருவுமுண்டும், அல்லா முஹம்மது தாமு
முண்டும்-செவ்வின் மன்கூசு மகுக்கூசுண்டும், சீமான் குத
றத்துஸ் தாதுமுண்டும்-கொவ்வுமு லாகிறு பாத்தினுண்டும்,
கோமான் ஹயாத்து மவுத்துண்டு-பவ்ஷ அடியார்கள் பிழை
பொறுக்கப் படைத்தோன் பணிவிடை தானுண்டுமே. (145)

(இ-ள்);- இன்னும் அதில் அவ்வலும் ஆகிறும் இருக்கின்றன அல்லாவும் முகம்மதுவும் இருக்கின்றன. மன்கூஸ் மஉக்கூஸ்களும் இருக்கின்றன, இனிகரைகடந்த மகிமைகளை உடைய குதுறத்தும் உஸ்தாதும் இருக்கின்றன, இனி லாஹிரும் பாத்தினும் உண்டும் இன்னும் ஹயாத்தும் இருக்கின்றது, மவுத்தும் இருக்கின்றது, இன்னும் நீ செய்த கரும வினைகளை தீர்த்துக்கொள்ளக்கூடிய சிலவழிகளும் அதிலிருக்கின்றது. எ-று

ஆறு திசையுண்டு மமரருண்டும் அவலி யாவானோர்
தாமுமுண்டும்-மேவுமியார்களு முசல்லிலுண்டு, மிகுந்த பல
பல நூல்களுண்டும்-ஊறு மறிவையாய்ந் தறிவதாகு, முற்ற
முருக்கபா முஷாஹிதாவும்-தேறுந் தெரிசனைக் குணமுமுண்
டும், செய்கை பெண்ணுன் முத்தலக்குண்டே. (146)

(இ-ள்):- இன்னும் அதில் அருகோணசக்கரத்தின் வல்லபங்களும் இருக்கின்றன, வானவர்கள் இறங்கி பணிவிடை செய்யவும் வகையிருக்கின்றது. ஔலியாக்களில் இராஜாளியாகிய சற்குரு முகியத்தீனுடைய கிருபாகடாட்சமும் இருக்கின்றது. இன்னும் நால்யார்களும் முசல்லியும் இருக்கின்றன மிகுதிபாக்கியங்களைப் பெறக்கூடிய அநேக கலைக்கியான

நூல்களும் இருக்கின்றன இன்னுஞ் அறிவைத்தெளிந்து செய்யக்கூடிய முஷாஹிதா முருக்கபாக்களும் ஆண்பெண் மோகதாபங்கள் அற்றுப்போகுதலும் இருக்கின்ற, கூட்டவும் துறையிருக்கின்றது. எ-று

உற்ற ஹலாலுண்டும் ஹருமுமுண்டு, மோசையுள்ள
பாஷைதானுமுண்டும்-செத்துப் போகவும் பிழைக்கவுந்தான்
திருமுன்னே நின்று றகுமானைத்தான்-மெத்தப் புகழ்வு
மேதுண்டென, மீண்டு பேசவு மிடைவிடாமல்-அத்தந் தரும்
றெப்பில் ஆலமீனை, யல்றும் பகல்காண அருளுமுண்டே. ()

(இ-ள்):- இன்னும் அதில் ஹலாலும் ஹருமும் இருக்கின்றன, ஒருவித உதிப்பினுலுண்டாகும் ஓசையும் இருக்கின்றது. நீசாகாமல் எக்காலமும் ஜீவியத்துடன் இருப்பதற்கான உபாயவழிகளும் இருக்கின்றன, றகுமானுடன சதாவுங் கலந்திருக்கக் கூடிய ஏதுவுகளு மிருக்கின்றன, இன்னும் இரவு பகல் எந்நேரவேளையும் அவனது அருளான கிருபையைச் சொந்தமாய்க் கொண்டிருக்கவும் திராணியிருக்கின்றது.

நஞ்சு கோபமுந் தீமையுண்டும், நல்ல பறுலுண்டும்
சுன்னத்துண்டு-மிஞ்சும் ஷறுத்துண்டும் வாஜீபுண்டு, மிக்க
ஷாஹிது ஹக்குமுண்டும்-கெஞ்சிப் பிறவிகள் கருவிதங்கள்,
செடிகள் மலைகடல் வான்புவியும்-விஞ்சும் பார்வையை
யெழுத்தினுலே, விசைகொண்டிருக்கியே பார்ப்பதுவே. ()

(இ-ள்):- இன்னும் பாஷாணவர்க்கங்களைப்போன்ற கோபமும் உண்டும். அத்துடன் கொடிய பாவதீவினைகளும் உண்டும். இன்னும் பறுலு வாஜிபு,சுன்னத்தென்பவைகளும் அதில் உண்டும் இன்னும் ஷறுத்துக்கள் ஷாஹிது முதலிய ஹக்குக்களும் உண்டும், இன்னும் அதன் சிபத்தினுலே மலை கடல் பாதாளம் கெபிகள் ஆகாய முதலிய சமஸ்தங்களிலும் நிரம்பிய அந்த ஜவைதை யறியக்கூடிய நேத்ர நிலையையும் அதில் பார்த்துக்கொள்ளவுங் கூடும். எ-று

கேட்கு மோசையைக் கலிமாவிலே. கிருபையுடன்வைத்
துக் கேட்பதுவும்-கேட்கும் வேளையில் ஹாலிருக்கும், கேட்குங்
கேளாமலிருக்க வேண்டாம்:-கேட்கு மொருநேர மந்நேரமே
கிபுலாத்தனை நோக்கியிருப்பதுவே-கேட்கு மிவ்வகையாவை
யுமே, கிருபை வைக்கவும் விதியாகுமே. (149)

(இ-ள்):- உனக்குள்ளே ஒரு மணியோசை ஒன்று கேட்கும் அந்த ஓசையை கலிமாவாகிய ஹூவால் நிறுத்திவைத்து கேட்கவேண்டியது அவ்விதம் மணியோசையை நீ கேட்கும்போது ஹக்த ஆலாவின் தஜல்லி வெளியாகிவரும், அப்போது நீ ஒன்றும் ஆட்டம் அசைவில்லாமல் கேள் விப்புலன்கள் வாசல்களெல்லாம் மூடியடைத்தவனுகவும் இருக்கவேண்டும். அப்படியிருப்பதுகிட்டலாவைமுன்னேக்கியிருக்கவேண்டும் இவ்விதப் பக்குவத்துடன் இருப்பது சகலமும் தவத்தில் இருக்க ஏற்பட்டவன் பேரில் விதியான காரியமாக இருக்கும்.

இதுதானே யொன்றுண்டானதுவு மில்லா மல் நபியானதுவும்-அதுவு மல்லாம லப்பாற்சொலவே ஞதியாஷக்க தானதுவும்-பொதுவா மகுஷூக்க தானதிலே, போது முஹம்மது நபியைப் பாத்துச்-சதுமா மறைகொண்ட கலிமாவிலே தானுய் முஹம்மதரென்றதுவும். (150)

(இ-ள்):- ஆதியில் இருந்த வஸ்த்து இதுதான் என்று ஒரு குறிப்பு சொல்வதற் கேலாத பான்மையில் இருந்துவும் அப்பால் அந்த பான்மையான கன்ஜுல் மஃபியானதே முகம்மதியாவின் ஒளிவாய் எழுந்து நின்றதுவும், அப்பால் ஆதியாகிய ஆஷிக்காய் உதயஞ்செய்ததுவும், அப்பால் இந்த பூலோக சராசரங்களாய் எழுந்துள்ள தோற்றப் பொருள்களான மஉஷூக்காய் ஆனதுவும் இனியந்த மஉஷூக்கிலே நீ முகம்மதியாவின் வடிவைக்கண்கூடாய்க்கண்டு கலிமாவில் உன்னை முகம்மதியாவின் வடிவில் வார்ப்பிடஞ் செய்து விட்டுவிட வேண்டியது. எ-று

உறக்க மானது மவுத்தாமென்று முன்னும் விழிப்புத் தான் ஹயாத்தாமெறும்-சிறக்கும் றசூலென்ற எழுத்தினுலே சிறந்தேயிருந்தது ஹயாத்தாச்சுது-பறக்கு முறக்கந்தான் ஜம் ஆகிய பார்வை விடாமலே முகம்மதுவை-நிற்கப் பாருங்கள் மூமின்களே, நீங்கள் தீன் கலி மாவதிலே. (151)

(இ-ள்):- இனி நீ அறியவேண்டியது எவ்வித மென்ருலோ இதோ உணர்ந்துகொள். உன்னுடைய நித்திரை என்றதை மவுத்தாகவும், சதாநேரமும் விழித்துக்கொண்டு தியானஞ் செய்வது எப்போதும் நித்திய வாழ்வாகிய ஹயாத்தா

கவும். அந்த ஹயாத்தென்கிற வடிவானது, றசூலுடைய சிபத்தில் பொதிந்துகொண்டிருந்ததென்றும் இனி உன்னை மறதியிலும் சோம்பேறித்தனத்திலும் பார்க்கக்கூடிய அந்த நித்திரையில் நினைவை விடாமல் தேன்கனியாகிய தௌஹீதுக் கலிமாவில் உன்யாத்தைப் பூட்டி முகம்மதியாவில் நிறைபூரணஞ்செய்வதற்கான உபாயம் எது? என்று ஒற்றுமையுடன் இடுப்புக்கட்டவேண்டும் இதுவே முஸ்லீம்களான புண்ணிய ஜனங்கள் யாவர்க்கும் உபதேசமாக இருக்கும். எ-று

நேர்மை யென்பது முஸ்தகீமாம், நேர்மைக்கெட்டதங் கொயிலோடையாம் நேர்மைக்கொண்டது ஹலாலதுவாம், நேர்மைகெட்டது ஹறுமது தாம்-ஒற்மையென்பது நிலையானதாம், ஊறும் நிலையது மகுஷறுவாம்-கூர்மை யென்றது மேற்பார்வையாங், கூர்மையொருநெறி நேர்மையமே.

(இ-ள்):- ஞானமென்ற முத்தெடுக்க வந்தவனே! உணர்ந்துக்கொள்! உனக்கு முதலாவது நேர்மையானதுயானது அவசியம் வேண்டியபொருளாக இருக்கின்றது. அதாவது:- சிருத்துல் முஸ்தக்கீம் என்ற பாலமாக இருக்கும் இதில் நீ சகல நீதியுடன் உலகத்தைக் கடந்து தாண்டவேண்டும். இதில் ஒரு ஆர்ப்பளவும் நீதிதவறிவிட்டால் உடனே அது ஒயிலின் என்ற அக்னிப்பிரவாக ஓடையில் கொண்டுபோய் தள்ளி வேதனை செய்விக்கும் கருத்தாவது:- துன்ப பிறவியில்உன்னைத் திருப்பிவைக்கும். ஷி நீ தீயில் ஹலால் என்ற நற்செயல்களை யெல்லாம் நடை பழக்கிக் கொண்டு வந்து துன்பவீடாகிய ஹறுமான செயல்களெல்லாம் தள்ளி சாலிஹீனுய் நிற்கவேண்டும் இனி உனக்குசக்கு சந்தாபங்களென் கொடிய இருளைக்களைந்து வைராக்ய சாதனை என்பது அவசியம் வேண்டிய கருவியாக இருக்கும் அதுவே உன்னை, உயர்ந்த சமதியத்தான பதவியில் கொண்டுபோய் நிலைநாட்டி வைக்கும், அந்த நிலைதான் மஃஷ்ராக இருக்கும் இனி உனக்கு கூர்மை என்பது வேண்டும் அந்தக் கூர்மையே நேத்ர ஜோதி என்ற ஐனுல் எக்கீனுக இருக்கும் இதுவே உறுதிக்கு முதல் வாசற்படியாக இருக்கும். எ-று

முன்னே சொன்னது முறையானசொல், முற்று மறு
ஷூக்கு மதுவேயாகும்-பின்னே கொபரென்ற சொல்லானது
பெருத்துப் பூமியிலிவை கொண்டாக்கும்-தன்னை அக்குப
றென் றதுதனையே, தரித்தங் கறிந்தவ னெடிதாகவே,
அன்னை தந்தைக்கு முன்னுனவ, னதுவே நுக்தாவா
மழகாகவே. (153)

(இ-ள்);- ஆதியில் நான்சொன்ன அறிவாளர்கள்ளு அறி
யக்கூடிய முறையாக இருக்கிறது, அதாவது, நீ அறுஷில்
ஹக்தஆலாவை சந்திக்கக்கூடிய வல்லபம் இதுவேயாக
இருக்கும். அதன் பின்னுல் கொபூர் என்ற சொல்லானது
பூமியில் உள்ள சகலபாக்கியங்களையும் தந்து ரட்சிக்கின்ற
தகா இருக்கும் அதை தன்னுக்குள் அறிந்து தவத்தில்சாதித்
த மன்னவன் ஆலம் அக்பருகிய மகாமில் இருந்து சகல இன்
பங்களையும் அனுபவிக்கக்கூடியவனுக ஆகி மாதா பிதாக்க
ளின் மணி ஒளிவிற்கு முந்தின நுக்தா வென்னும் உஜூதில்
தரிபட்ட மஹ்றானுக இருக்கும். எ-று

வெளியாலிருள்ளாகும் பக்காவானதை,வேந்தநபியிறசூல்
கேட்கவே-அழிவில் லாதவைந் தொழுத்தாமஃ, றகுமதே
பனுவாகுங்கலிமாவிலே-தெளிலா இலாக இல்லல்லாகென்ற
சிறந்த வொளியிஃ தெனவோதினுன்-அழிவில்லான்றூதர்
ஹபீபானவர்க்காணுமாண்பிள்ளை முஹம்மதுவே. (154)

(இ-ள்);- இருட்டுடைய கோலத்தில் இல்ஹாமாகி
வெளியாகின்ற பக்கா, என்றதைப்பற்றி நபிகள் மஹான்
அவர்கள் றகுமான் சமுகத்தில் வினவியபோது றப்பு, சொன்
னதாவது. ஐ ஹபீபே! அதுவான ஐந்து புஞ்சாட்சரங்களாக
இருக்கும் கலிமாவில் அது எல்லாவஸ்தையும் பனுசெய்து
தான் ஒன்றே சர்வத்திலும் பரிபூரண பக்காவாக அழியா
வல்லமை கொண்டு நிற்கும், அதுவானது இலாஹ இல்லல்
லாஹு. என்ற சுயம்வொளிவாக இருக்கும், என்று திருவு
ளம் பற்றினுன். இந்தப்படி முகம்மதின் நடையில் பழக்கங்
கொண்டு நடக்கின்ற ஆண்பிள்ளைச்சிங்கமானவன், எவனுனு
லும் சரியே அவன் திட்டமாக முகம்மதாக இருக்கும். இதில்
ஒரு சிறிதும் சந்தேகங் கொள்ளங்கூடாது. எ-று

வழியாம் அவ்வலே முன்சொன்னது, வரிசை நாயகன்
அஹமதென்ருன்-எளியோர்க்கிரங்கிய இறசூலென்ருன்,இது
வே மேலாம்லேலாவுமென்ருன்-பழிபோகச்சொன்னுன் பள
பளெனப், பார்க்கப் போகவும் கூவானதை-யொளிவீசுந்
தாஹாமுஸ்தகமி லொருநிலை கொண்டார் கலிமாவிலே. ()

(இ-ள்):- அல்லாதன் கலாமில் இந்த விழியைத்தெரி
வித்ததாவது, அஹ்மதே லேலா வென்னும் மஉஷூக்காக
இருக்கும் என்ருன், என் ஹபீபானவர் உலகத்தில் அறிவு
கடந்து தெளியாத எளியவர்களுக்கு றகுமத்தாக வந்தவ
ராக இருக்கும் என்று சொன்னுன் லேலா என்பதை முகம்ம
தாகவும், மஜ்னூன் என்பது, ஆஷிக்கானவனுகவேண்டியது.
என்றும் சொன்னுன் அப்போது இன்சான் என்ற மனிதங்
உலகத்தில் செய்துவந்த தீவினையானதுதீர்ந்து விமோசனம்
உண்டாகும் என்றும் சொல்லினுன். பாவதோஷமானது
தீர்ந்து சென்றபோது ஹூ என்ற தௌஹீதின் ஒளிச்சுடரா
னது பளபளவென்று வெட்டிமின்னும் அந்த மின்னலுக்குள்
தாஹாசல்லல்லகஹூ அலைஹிவசல்லமவர்களிருந்து உத
யஞ்செய்வதை முஸ்தக்கீம் என்ற ஒருநிலைகொண்ட மஹாத்
மாக்கள் பார்த்துப் பரமானந்த மடைவார்கள். எ-று

ஒலிமா ருலமாக்க ளிடந்தனிலே, யுவந்தே யறிவுகள்
படிக்கவேண்டிய-மெலிவாய்ப் பயந்தஞ்சித் திரைகட்டிய பீவி
மார் பலர் சொல்லல் லவர்-சலியாமனத்துடன் சந்தோஷ
மாய்த், தனித்து முடுகியே கொல்கிறது. அலிமாமனுரவர்
ஹதீதின்படி, யழியாவமானதச் செயலாகுமே. (156)

(இ-ள்):- இப்படிப்பட்ட மேலான அறிவுகளை யெல்லாம்
ஒலிமார்களான உலமாக்களான ஷெய்குமார்களிடத்தில்
சென்று உள்ளச்சத்துடன் கால்மடித்திருந்து அவர்கள் கை
யின் பேரில் நசீஹத்தென்னும் முரீது உபதேசம்பெறுதல்
அறிவுடைய ஆண்பிள்ளைகளுக்கும் சீதேவித்தனம் கற்புநிலை
பதிவிரதா பத்தியம் இவைகளுடைய பெண்களுக்கும் ஆகு
மான விஷயம் என்று நபி நாயகம் அவர்கள் சொன்ன ஹதீ
தின்படி ஏற்றமுள்ள காரியமாயிருக்கும். இதுவே நல்ல
அமாநிதமாக இருக்கின்றது. எ-று

மிச்ச மாகவே மகருவைத்து, மேலோன் விதிப்படி நிகா
ஹு செய்து-புருஷனைக் குருவுமாக, வரிசை யறிவாளர் பீரு
மாக-அச்சமாகவே யறிவுகேட்டே. அல்லாதனை நித்தம்
வணங்காமலே-பிச்சை வாங்கிற பக்கீறுகளைப், பிடித்து நடப்
பது மடிப்பாகுமே. (157)

(இ-ள்);- இனி ஸ்திரி ஜனுதிகளான பெண்களுக்கு
மாத்திரம் இங்கே நான் சொல்ல அவசிமான நகீஹத்து
என்னவென்றால், பொருந்துகையாக மஹ்று உன்னும் ஸ்ரீத
னம் ஏற்படுத்தி ஊர் உலகமறிய சாட்சிகளுடன் கல்யாணஞ்
செய்த தன் புருஷமார்களை சற்குரு வாகக்கொண்டு சாலி
ஹீன் களான ஷெய்குமார்களை பீர்களாகபாவித்து,அவர்களி
டம் வரிசை பொருந்திய மஅரிபாவின் அறிவுகளைக் கேட்ட
றிந்து அல்லாவை வணங்கவேண்டுமே ஒழிய மற்றப்படி,
வயிற்றுச் சோற்று ராமன்களையும். ஊரூராய் பிச்சை எடுத்
துக்கொண்டு பணம் வசூல்செய்து மன இச்சையுடன் அலை
கின்ற பக்கீர்ப்பயல்களையும் ஷெய்கொன்று நம்பி அவர்களித்
தில் கைனீட்டிமுரீது பெற்றால் அதுபிசகானவழியாக இருக்
கும். அதில் கெட்ட ஹராம்களும் பித்னுக்களும் உண்டாகும்.

கண்கள் காணுத காட்சிகளைக், கண்டபேர் சென்று கவ
லும் போது-பெண்கள் கிடைக்காமற்பெருமூச்சிட்டு, பிச்சை
வாங்கியே தின்போர்கள் தா-ஞெஜீவத்தொபணங் காசியி
னுதவியாலுடல் கொழுத்தே யுங்கள்-பெண்கள் தனியேவரு
வதுபார்த்துப்,பெருமூச்சுத்தீர அமல்கள் செய்வார். (158)

(இ-ள்).- மனிதர்களே! சற்றுக்கவனியுங் கண்தெரியாத
குருடன் நான் இன்ன அலங்காரசித்திரத்தைப்பார்த்தேன்
என்று சொல்வதைப்போல ஊரூராய் பிச்சைக்குவந்தபக்கீ
ருகள் வாய்பிதற்றுதலை நீங்கள்கேட்டு அறிவில்லாத குணத்
தால் ஏமாந்து திடீரென யானைகொப்பிக்குழியில் விழந்த
பான்மையாக நீங்களும் உங்கள் அழகிய பெண்களும் அவர்
களை ஷெய்காக எண்ணி நம்பி முரீதுவாங்கி நல்லருஷிகர
போஜனங்களையும் ஆக்கிக்கொடுத்து பணங்காசுகளும் நல்ல
மேலான உடைமானங்களும் கொடுத்தவுடன் அவன்கண்
உங்கள் ஊண்களையும் உண்டு மஸ்தேறி காமசுவாலைமிமைத்
து உங்கள் வஜீகரமான பெண்கள் கிட்டவர நோக்கினவுடன்
அவர்கள் அழகைக்கண்டு மோசித்து சம்போசிக்க எண்ணங்

கொண்டு பெருமூச்சிட்டுத்தருணம் வாய்ப்பதை எதிர்பார்ப்
பார்கள் அதுசூதுஉங்களுக்குத் தெரியாதிருக்கும்படியாக
அவசரம் அவசரமான கள்வணக்கங்களும் செய்துதஸ்பிஹு
உருட்டுவார்கள் அதையெல்லாம் நீங்கள்கண்டு மோசம்
போகாமல் நேர்வழியைத் தேடிக்கொள்வீர்களாக. எ-று

ஷறகில் நடவாத ஷெய்கிடத்திற், றையல்கைநீட்டி முரீ
து கேட்டால், விறகில்நெருப்புப்போற் பிடித்தவளை, வேண்
டுங்கருமங்கள் செய்திடுவார்-உரவு போனுலு மவளைவிடா
ருடலுமுயிரும் போற்கலந்து கொள்வார்-பறவைபடக் கண்
ணிவைத்த வேடன்-பாய்ந்தேயமுக்கல்போ லமுத்திக்கொள்
வார் (158)

(இ-ள்):- முரீது கொடுப்பதற்கு தத்துவம்பெற்றுக்
கொண்ட ஒருஷெய்க்கு முதலாவது அடையாளம் ஷரீஅத்
தின்படி நடக்கின்ற நல்லொழுக்கம் நிறைந்திருக்கவேண்டி
யது. அப்படியல்லாத பேணுதலிற்ற ஷெய்குமார்களிடம்
பெண்பிள்ளையானவள் கைநீட்டி முரீது பெறுவாளானால்
அவளுடைய உருவமானது விரகுபோலவும் இந்த முரட்டு
ஷெய்கின் மனஸானது காம நெருப்பாகவும் பிடித்துப்பற்றி
உடனே அவளை ரகசிமாப்பிடித்து இழுத்து செய்யாத பாவக்
கருமங்களை யெல்லாம் செய்து போடுவார்கள். அப்பால் உங்
களுடைய உறவுபோய்விட்டாலும் சரியே அந்த இன்பங்காட்
டிய பெண்களைக்கைவிடாமல் ரகசிய வாட்டிகளாக வைத்துக்
கொள்வார்கள். அவளின் உடலும், அவர்களின் உடலும் ஏக
உயிராகவும் கலந்து கொள்வார்கள். நீங்கள் அருமையாகத்
தேடி கல்யாணஞ் செய்த அருமையான பெண்களை குறவன்
கண்ணியில் ஒட்டுவைத்த பறவைகளை அமுக்கிக்கொள்ளும்
தன்மைபோல, அமுக்கி வசியஞ்செய்து போடுவார்கள், அப்
படிப்பட்ட கள்ள ஷெய்குமார்கள் விஷயத்தில் உஷாராக
இருங்கள், எ-று

தனிந்த பெண்கள்தான் கிட்டவந்தாற், சறகுசறுகிய
ஷெய்குமார்கள் நினைத்தநினைவுகள்தான்தவலி,நீலிகோலத்
தைப் பார்த்துப் பார்த்தே-இனித்தே யிருக்மென் றவள்தனை
யே, எட்டிப்பிடித்துதான் கட்டிக்கொள்வார்-கனைத்தகுரலாற்
பெண்குதிரையது, கரந்து வழிசெல்கி லான்குதிரை-ரினைத்
துக் கனைத்துத்தான் தூரத்தியோடி, நேரே யொன்றுபோற்
கூடுமென்றார். (160)

(இ-ள்):- யாதொரு துணையின்றி தனித்துவந்து நசீ
கத்துக் கேட்கும் பெண்டுகளைஷறகில் நடக்காத ஷெய்கு
மார்கள் காண்பார்களானுல் உடனே நீலியாகிய அப்பெண்
களின் மோகமான அழகு ரூபத்தைப்பார்த்து காமலாகிரி
கொண்டு மயங்கி உடனே தங்கள் அறிவைப் பறிகொடுத்து
அவளைப்பாய்ந்து பிடித்து கனைத்த குரல் சத்தத்தைக்கண்டு
பெண்குதிரையானது காதவழிதூரம் ஓடிப்போன போதைக்
கும் ஆண்குதிரையானதுஅதைவிடாதுஓடிப்பிடித்துபுணர்ச்சி
செய்வதுபோல் இன்பத்துடன் புணர்ச்சி செய்து தன் வசத்
தில் சிக்கச்செய்து போடுவான்கள், எ-று

மஹ்ரி பத்தானமாணிக்கத்தை, வண்டப்வெண்டுகள்
கிருவிக்கவே-பயிருபற்றியே பயன்கொள்வதின் பருவமறியா
மற் கிரமந்தப்பிவயது பத்துக்குள்தேடியக்கூடி, வலிய இரு
பேரும்ஸினுவிலாவார்-கயிரும் ஷறக்குள்ள ஷெய்கைகத்
தேடி, ஹலாலாமுரீதுகள் வாங்குமென்றுர், (161)

(இ-ள்);- ஹே! மஅரிபாவின் ரசத்தை அறுந்துவதற்கு
வந்த அறிவாளனே! ஞானமென்ற மாணிக்கத்தை காமக்
கோட்டியுடைய பெண்களுக்கு அறிவிக்கிறதாவது, விதை
முதிர்வதற்குள்ளே, தூவி அது கருகி யல்லது முளை காணுது
அழிகிப்போவதுபேலோகும். இன்னும் சிறுபருவப்பெண்க
ளுக்கு கற்பித்தால் அவர்களும் தன் ஷெய்குடன் சிறிக்கப்
பேச இருந்து பழகி தன்சமையாத பருவத்திலேயே சினுவில்
முடுகிதாறுமாருய் அழுந்துகெட்டுப்போவார்கள்,ஆனதாலே
நமது நாயகம் அவர்கள் முரீதுபெறுகிறவர்கள் வயதுமுதிர்ந்
தவர்களாகவும் முரீது கொடுக்கிற ஷெய்கு வயது முதிர்ந்த
சாலிஹீன்களாய் இருக்க வேண்மென்று திருவாய் மலர்ந்
தருளினுர்கள், எ-று

மத்திரவாளன் மஹரிபத்தன், வகையையறிந்து பேரேர்க்
கவேண்டும்-தந்திர மில்லாப் பேரெடுத்தாற், றவறிக்காயங்
கள்பட்டுச் சாவார்-அந்தர மான அறிவதுதா, மழகாமொலி
மார்கட்காகுங்கண்டீர்-இந்தக் காலத்தில் மூடப்பெண்க
ளெல்லார்க்குஞ் சொல்ல ஆகாதென்றுர், (162)

(இ-ள்):- ஏ! அறிவைத்தேடி அதில் குணங்கொள்ள
வந்தவனே! மரிபத்துள்ளாவாகிறது ஒரு கூறிய மந்திர

வாளாக இருக்கும்.அதைமதிதெளிந்த தந்திரவாளான்தான்
எடுத்து கையாள வேண்டியது அப்படியல்லாதவர்கள் எடுத்
தாண்டால் வீணில் கோறைபட்டுக்கொள்வார்கள். அதோ!
மஹா அந்தரமான அறிவாக இருக்கின்றது. அதை சமத்தர்
களான ஒயலியாக்கள்தான் கையாட்சி செய்து பெரும் வாழ்
வுகளைப் பெற்றுக்கொண்டார்கள் அவர்களுக்கே யன்றி மற்
றப்படி சாமாண்யப்பட்ட மௌடீகர்கள் பழகினுல் ஆளுக்கே
மோசம் வந்து நேரிடும்.ஆனதாலே பைத்தியக்காரன்களான
சில ஷெய்குமார்கள் அப்பேர்கொத்த மஹாசாதனந்தை
சுத்த மூடப்பெண்களுக்கெல்லாம் இந்தக் கலிகாலத்தி
போதிக்கும்படியாக நேரிட்டிருக்கின்றது. அது ஆகாத கரும
மாக இருக்கும்,

ஆணி முத்தான மாணிக்கத்தை, யறிந்த பீரிடமடுக்கா
மலே.தோணிதனிலேறி மீன்பிடிக்குந்,தொள்ளை நூளையார்க்
குக் கல்வியீந்தாற்-பேணி வைக்கவுந், தெரியாமலே, பெரிய
கடைதனில் விலைகூறுவார்-காணிக்கையான மாணிக்கத்
தைக் களவு கொண்டாரென்றெட்டிப்பாரே. (163)

(இ-ள்):- மஅரிபத்துல்லாவானது ஒரு மதிப்பில்லாத
ஆணிமுத்தாக இருக்கும். இப்படிப்பட்ட மாணிக்கத்தை பரம்
பரையாண்டிகளான காமிலியத்தான ஷெய்குமார்கள் எடுத்
து விலை கூறினுல் தகுமானதாக விற்கப்படும் அப்படியல்
லாமல் பிச்சையெடுக்கவந்தவன்களெல்லாம் நசீஹத்துச்
செய்தால் உலமாக்கள் என்னும் வியாபாரிகள் அது எங்குள்
ளது எவ்விடமுள்ளது என்று தூண்டிக்கேட்டு சோதனைப்
போட்டு இன்காறு செல்து பழிப்பார்கள் எதுபோலயானுல்
மீன்பிடிகாரருகிய கரையான் ஒருவன் தன் கையால் மாணிக்
கமொன்றை வைத்து பொத்திக்கொண்டு இரத்ன பஜாரில்
நின்று விலைகூறி இளக்கவிலைகூறுவதை அதிகாரிகள் கண்டு
நோட்டமிட்டு இந்த மாணிக்கம் இவனுக்குடையதல்ல எங்
கேயோ திருடினதாக இருக்கும் என்று யூகித்தறிந்து அவனை
மிரட்டி உதைத்து மாணிக்கத்தைப் பிடிங்கிக்கொண்டு துறத்
திவிடுவது போலாக இருக்கும். எ-று

தொட்டா பேர்சிலர் கெட்டுப்போவார், தொடாதபேர்
சிலர் கெட்டுப்போவார்-திட்டமறிந்தவர் லட்சத்திலே

தெரிந்தபேர் தேடியெடுத்டக்கொள்வார்-மட்டிலாப் பெரும் வாழ்வுடையோன்-வரிசைமுஹம்மது பேராஞோர்-வெட்டிபிபு லீசைவெல்லுமந்த மெய்யா முகியிதீன் வழிதனேயே. (164)

(இ-ள்):- இன்னும் கேள் அந்த மஹா வல்லபமுடைய சிற்றுல்லாவாகிய மஅரிபாவை தொட்டவர்களும் கோடான கோடி ஜனங்கள் கேட்டு நட்டவாளராய் ஆய்விட்டார்கள், தொடாத பாமரஜனங்களும் கோடாநுகோடிப் பேர்கள் கை சேதப்பட்டு இற்றழிந்து போய்விட்டார்கள். அந்த மகத்துவத்தை இலட்சத்தில் ஒரு பாக்கியவந்தன் திட்டமறிந்து கண்டு ஜயம் பெற்றுப்போவான். ஆனல் இந்தவழி யாருடையதென்று கேட்டால் இதாகிறது எங்கள் நாயகம் முகம்மது சல்லல்லாகு அலேஹிவசல்லம் அவர்களின் பேரப்பிள்ளேயாகியவர்கள் இன்லும் கொடியமுரியாட்டைந்தையுடைய இப்லீசை வென்று ஜெயக்கொடி நாட்டிய என் உண்மை ஹக்காகிய பீரானப்பீர் தஸ்தக்கீர் ஜகத் குருகாமில் காஜா முகியித்தீன் அப்துல் காதிருல் ஜீலானி ஆண்டவர்களின் சொந்த வழியான மஹாறகுமத்தான காதிரிய்யாவாக இருக்கும்,

ஆதியிறக்கியே வேதந்தன்னே, யறிந்த முதம்மதரவர்க் குப்பின்னர்-ஓதி யிருக்கின்ற ஆலிமவ, ருண்மைச் சாலிஹா யிருந்தாலுமாம்-பேதைமடவர்கள் தனித்தேகாமாற், பெலமாய்ப் பலபேருங்கூடிக்கொண்டு-காது தலேமுகம் கால்கையுடற் காணுமற் பேணிஹதீது கேட்பீர், (165)

(இ-ள்);- அல்லாகுத்த ஆலா இறக்கி வைத்த வேதத்தை உணர்ந்த நல்லசாலிஹான நடத்தையுள்ளவராகிய ஆலிம்கள் கதீது சொல்கிற மஜ்லிசாயிளுந்தாலும் சரியே அந்த இடங்களுக்கு போய்ஹதீது கேட்கப்போகிற பெண்கள் தங்கள் காது, கண். மூக்கு, முகம், புருவம் ஆகிய இவைகளே மறைத்துக்கொண்டு நல்ல ஒழுக்கமாக இருந்து ஹதீது கேட்கவேண்டும் என்று நபியவர்கள் திருவுளம்பற்றிஞர்கள்,

கொடியகுபிரேது பாவமேது, கொத்தவனேல் விளக்கேதென்றும் நெடியோன் பறுலுகள் தானுமேது'நீண்ட நபி சுன்னத்தேதெனவே, அடியார்ஷெய்ஹரு மேதெனவே,ஆன ஹால்மக்றூஹே தெனவே வடிவாய் ஹதீதுகெட் டேநடந்தால் வல்லோ தனக்கான முரீதுதானே. (166)

(இ-ள்):- குபிரும் இல்லே. பாவகருமங்களும் இல்லே. ஏவல் விலகலும் இல்லே. பறலு சுன்னத்தும் இல்லே அடியார்களுக்கு ஹ்ருும் ஹலால் என்பது ஏதும் கிடையாது என்று கெட்ட ஷெய்குமார் சொல்லி வழிகெடுப்பார்கள். அப்படிப்பட்ட ஷெய்குமார்களேத் துயர்வதற்குள்ளதாக நல்ல உபதேசமான ஹதீதுகளே கேட்டு மனசை உறுதிபடுத்தி ஷரீஅத்தின்படி நடந்துக்கொள்ள வேண்டியது என்று நபிகள் நாயக சிரோன்மணி யவர்கள் திருவாய்மலர்ந்தார்கள், எ-று

அறுஷா தலேயாகும் குறுசுநெற்றி ஆபுறுக் காபக் கபுசைனிதான்-புருவ மிடையாது மகுமூதாகும், பொங்கு மூளேயும் நசிருவாகும்-நெறியும் காசியே தூறாசினு. நிறைந்த தந்தமும் அறுஷுதின்பாம் கருத்தானது பைதுல் மகுமூறெனக், காட்சிக் குருவிதைக்காட்டினுரே. (167)

(இ-ள்);- இனியாரும் உலகத்திலே அறியாமல் மகுபியாக இருக்கப்பட்ட ரகசியமாகிறதுசொல்லிவிடுகிறேன் அதாவது அறுஷாகிறது சிரசாக இருக்கும். குர்ச்சாகிறது நெற்றியாக இருக்கும். கபாகௌஸைனி என்கின்றது புருவமத்தியாக அதுவே மகாமன் மகுமூதாவும் இருக்கும். இனி கபாலத்தின் மேலாலேயுள்ள மூளேயுடைய ஸ்தலமாவது எதுவென்ருலோ அது தான் சுல்தானன் னசீருவென்னும் இரகசிய பீடமாக இருக்கும் நேத்ரவட்டங்கள் தூரி சீனுமலேயாக இருக்கும் பல் வரிசைகளெல்லாம் அறுஷுடைய தூண் தீபங்களாக இருக்கும். அறிவின் உதயமாகிய நினேவு நாட்டமானது பைத்துல் மஃமூருக இருக்கும். எ-று

ஓதும் நெஞ்சது சுவர்க்கமாகு வொளிவாம் பைத்துல்லா கல்பதாகுல்-தீதின் வயிறுமே நசரமாகுந், திரண்ட நாவியுமக்கமாகும்-போது மிருகையும் லெல்குகலம்,புல்சிருத்துமேல் வயிறதாகும்பா-தந் தகுத்தருவுமீசான், பால்பின்வாழ்வுமுன் பரமாகுமே. (168)

(இ-ள்):- இனி நெஞ்சாங்குழியானது சுவர்க்கமாக இருக்கும். கல்பு என்கிற இருதயமானது கஃபத்துல்லாவாக இருக்கும். வயிருனது நரகலோகமாக இருக்கும்.

நாவியாகிய தொப்பூழ் வரையானது மக்கமா நகரமாக இருக்கும் இன்னும் இரண்டு கைகளும்லௌஹூம்,கலமுமாகஇருக்கும் மேல் வயிறானது சிறுத்துல் முஸ்த்தக்கீம் பாலமாக இருக்கும்.பாதமானது பாதாளமென்கின்ற தஹ்தஸ்ஸருவாகவும் இருக்கும் அதற்கிடையிலுள்ள மொழிகள் மீசான் என்னும் தருசியாகவும் இருக்கும். எ-று

பாரி லாறுக ளருவிகள்போற்,பாரவுடலிலே நரம்புகளாம் தேறு மெலும்புகள் மலைகள்போல, தேக ரோமங்கள் செடிகள் போலவே-வாரி கடல்முதுகேயாகும். வைத்ததினுலும் நரம்புநாலேதாரி லுயர்போகளிவையறிந்து, தவங்கள் செய்யவுங் கடனுகுமே, (169)

(இ-ள்):- உலகத்திலுள்ள ஆறு அருவிகளானது சரீரத்தில் நரம்புகளாக இருக்கும் உலகத்திலுள்ள மலை கெபிகளானவைகள் சரீரத்தில் எலும்புகளாக இருக்கும் உலகத்தில் மரஞ்செடி கொடிகளானவைகள் சரீரத்தில் உரோமங்களாக இருக்கும். உலகத்தில் சமுத்திரவளவுகள் சரீரத்தில் முதுகுதண்டாக இருக்கும் இவைகளை நன்கு அறிந்துவ தங்கள் செய்தால்தான் நிலை ஒழுங்குபடும். எ-று

நாவிலெலும்பு நெல்ளெவிலுண்டும், நயனமதிலெலும் பெள்ளளவாம்-தாவும் கல்பிலே தினையளவாம், தக்க றிலெலும்பு கோதும் பைபோலாம்-மேவும் ஜடத்திலேவலதுபாகம், மிக்க மமுதின் பாங்காகுமே-ஏவு மிடதுபால் அஜாஸீலாகும், எங்குமிருபங்கென்றியம்பலாமே. (170)

(இ-ள்);- இன்னும் அறியவேண்டியதென்னவென்றல் இதுயாருமறியாத இரகசியமாக இருக்கும். அதாவது நாவில் எலும்பு ஒருநெல்லுடையபிரமாணம் இருக்கின்றது.இன்னும் நேத்திரத்தில் எலும்பானது எள்ளுடைய பிரமாணம் இருக்கின்றது.இனி சல்பாகிய இருதயத்தில் எலும்பானது ஒரு தினையுடைய பிரமாணம் இருக்கின்றது இனி ஆண்குறியில் எலும்பானது ஒரு கோதுமையுடைய பிரமாணம் இருக்கின்றது இன்னும் சரீரத்தில் வலதுபாலில் எல்லாபாகங்களும் மகுமுதுடைய பாகங்களாகயிருக்கும் இடதுபாலில் உள்ள

பாகங்கள் எல்லாம் இப்லீசுடைய வெற்றியாக இருக்கும் ஆனதால்தான் மனுஷீக கோலத்தில் ஒரு குணம் சற்குணமாகவும் மற்றொரு குணம் துற்குணமாகவும் இருப்பதை அறியவும். எ-று

வான மேழையு மதனுடலில், வகுக்கக்கேள் தாழ்வாய் நாசியுடன்-காணுங் கண்ணுடன் புருவம்நெற்றி, கனத்தவுச்சியு மண்டையோடாம்-தோணும் புவியேழில் முதலாவது தோள்மார்பிடை வயிறெடுதுடையாம்-பூணுஞ்செவியோடு கரமுடனே, பூமியிஃதேழென்றிய்பலாமே. (171)

(இ-ள்);- அவசியம் மானுடன் அறியவேண்டிய முதலாம் பண்பு இரண்டு அதாவது ஏழு வானங்கள் ஏழு பூமிகள் இவைகளில் ஒன்ருவது ஏழு வானங்களாவது வாய், நாசி, கண், புருவம், நெற்றி. மண்டையோடு ஆக ஏழு இனி பூமிகள் ஏழாவது தோள். மார்பு, இடை, வயிறு, துடை. காது. கை ஆக ஏழு இப்படி அறியவேண்டியது இதுதான் இன்சானுண்டான படை கோலத்தின் வரம்பாக இருக்கின்றது.

ஹையுல்கையூமான அமாவதிலே, கன்சுல்மகுபியாயிருந்ததுவும்-ஐந்துவிதமான திக்கிறதிலே,ஹையுல கையூமாயிருந்ததாலே சையி திறசூலுந் திருவொளிவுஞ் சகல வஸ்துவுஞ் சதுர்வேதமும்-வையமதிலுள்ள வகைபலவும், வாகாய்ப்படை கோலமானதுவே. (172)

(இ-ள்):- ஹைபுல் கையூம் என்கிற இருளாகிய அமாவில் தன்னுட்டமென்ற ஊசாட்ட மின்றிய கன்சுல் மகுபியாக அடங்கியிருந்து உஜூதுல் முத்லகாத் என்பது அப்பால் ஐந்து விதமான திக்றுகளாயிற்று. அதில் ஒன்று ஹையுல் கையூமாயுமிருந்தது, இதில்தான் நூறுல் முகம்மதியாவும், நான்கு வேதங்களும் சகலமான ஜீவராசிகளும், சகல உலகங்களும் அவைகளிலுண்டான படைபினங்கள் யாவற்றும் உற்பத்தியாயிற்று. எ-று

அந்த விதமைந்தும் ஜல்லிக்கல்பி, லடக்க மாம்றூஹி சிர்றிகபீர்-எந்த விதமிதைச் செய்வதென்ன, இயல்பாம் ஷெய்கிட மிணங்கிக்கேளு-முந்த கபீயினில் நுஜூலாகியு, மூர்க்க ஜல்லியில் முழக்கமான்-விந்தை யறிவ்தா லுன்ஜடலம், வீணி லழியாதே யுண்மைபாரே. (173)

(இ-ள்):- ஷை திக்றுகள் ஐந்துகளின் திருநாமங்ள் என்னவென்ருல் 1-வது ஜல்லி, 2-வது கல்பி, 3-வது றூஹி, 4-வது சிர்றி, 5-வது கபி. ஆகியவைகளாக இருக்கும். இவ்வைந்தையும் எடுத்துச்செய்யும் உபாயங்களைப்பற்றி உன் சற்குருவானவரிடத்தில் அடுத்துக் கேட்கவேண்டிய கருமமாக இருக்கும் திக்றுகளில் முதன்மையான (கபீ) என்னும் திக்றில் வாசியை யேற்றிக்கொண்டேயானுல் அது ஜல்லி என்றதில் கொழுவிக்கொண்டு உனக்குள் முழக்கஞ் செய்யத் துடங்கிவிடும் அந்த தொனியாகிய, வோசைதான் ஆதியில் நீ சமைந்ததான விந்து நாதமாக இருக்கும், அவ்வோசையைக் கேட்டபோது உன் சரீரம் எக்காலமும் அழியாமல் சாகா வரம்பெற்ற மஹானுகிவிட்டாய். இதுவே மகத்தான ஔலியாக்கள் செய்து கொண்ட சமர்த்தாக இருக்கும். இது உண்மை சங்கதி. எ-று

ஆதி யொளியஃ தாதமிய்யாய் அமைத்த வகையஃ தருளக் கேளீர்-சோதி அஹதியத் துஹதத்தாகித், தூக்கமான வாஹிதியத்தாகி-நீதி ஆலமுல் அறுவாஹென்றும், நிழலாமிதாலென்றும் அஜிஸாமென்றும்-சாதியறிவுயி ரின் சானென்றும், சாற்று மறுத்தபா ஏழாகுமே. (174)

(இ-ள்;- இனி மனிதன் அறியவேண்டியது, 2-வது ஏழு மறுத்தபாக்களாக இருக்கும். அதாவது அல்லாகுத்த ஆலாவின் சிர்றின் ஒளிவில் நின்றும் ஆதமி உண்டுபட்ட விதமாவது. 1-வது அஹதியத்து 2-வது உஹதத்து, 3-வது வாஹிதத்து, 4-வது ஆலமுல் அர்வாஹ். 5-வது ஆலம் மீதால், 6-வது ஆலம் அஜ்ஸாம், 7-வது ஆலம் இன்சான் என்றும் இப்படியாக மறுத்தபாக்கள் ஏழாக இருக்கும். எ-று

தாத்துப் பொங்கியே இசுக்குண்டாச்சு, தக்கஇசுக்கினுல் நூறுண்டாச்சு-சாற்றும் நூறெனு மொளிவதாலே, சருவரகசியற் சிர்றுண்டாச்சே-தோற்றும் நபுசினுல் றூஹுண்டாச்சு துய்யறூஹினுல் ஜடலமென்ருர். (175)

(இ-ள்);- ஆதியில் எழுந்ததாத்தானது மோகக்கடல் போலபொங்கி இஷ்க்கு என்னும் ஆசைஉண்டாயிற்று அந்த ஆசைஎன்ற அக்னியினுலேயே முகம்மதியாவின் ஒளிவானது உண்டாயிற்று அவ்வொளியின் தத்துவத்தாலேயே, சகல ஜீவராசிகளின் இரகசியங்களும் உண்டாயிற்று. அந்த சிர்றுகளின் குணகுணங்களினுல், நப்சிகளின் குணங்கள் உண்டாயிற்று. மேற்கூறிய நப்சிகளின்நின்று றூஹ் என்கிற ஆத்மா உண்டாயிற்று. அந்த ஆத்ம தத்துவத்தாலேயே ஒவ்வொரு இனங்களின் சரீர சட்டங்களும் உண்டு பட்டது. எ-று

சோதி யொளியான றூஹுடைய,சொந்த வீடறு பத்து நாலாம்-பாதியதீ லைந்துபூதமதின், பாரக்குணங்களுமக்காமும்ரண்டாம்-சாதி நபுசுடல் கல்புமன்சில்,சருவ அக்கிலவை வகைக்கைந்தாகும்-ஆதி யான சிபாத்தேழுட,னுக அறு பத்து நான்குமிதே. (176)

(இ-ள்):- இனி மேற்கூறிய முகம்மதியாவின் ஒளிவினுலுண்டான ஆத்மத்திற்குச் சொந்த வீடுகள் அறுபத்து நாலு வகைகள் இருக்கின்றது இதன் விபரமாவது,பூதங்கள் ஐந்துடைய குணங்களும் முப்பத்திரண்டு வீடாக இருக்கின்றன. மற்ற பாதியும், ஏழு நப்சுகளும், ஜடலமும், இருதயமும் ஒவ்வொரு ரகசியமான மன்சில்களும். அறிவும் கூடி ஒவ்வொரு வகைக்கும் ஐந்தைந்துபங்காகி. சிபாத்துறப்பானி ஏழுவகைகளுடன் ஆக அறுபத்து நான்குவிடாய் நிரப்பமாயிற்று. எ-று

சொல்லும் றூஹதில் நாலுவிதம், சுபஹா னமைத்த தோர் பங்குகேளீர்-கல்லு மலைமண்ணுஞ் சமாலியத்தில் கலந்து றூஹது தபக்கியத்தாம்-நல்லதபக்கியாம் கேவும் வேலைநாட்டமுடன் செய்ய அடுமைரண்டாம்-வெல்லு மதின் பேரு கிப்பாதென, விளையும் திஃலென விளம்புவாமே. ()

(இ-ள்):- இனி றூஹ் உடைய பாடத்தில் மனிதன் அறியவேண்டிய பறுலானவைகள் நான்கு வகைகளாக இருக்கும் அதாவது:- கல்லுக்கு மலைக்கு மண்ணுக்கு உடைய றூகுகள் நாலுவிதம் அதில் எ ஜ மா னி ய த் தா ன றூகுகள் இரண்டுண்டும். அவைகளின் பெயர் தபக்கியத்து தபக்கி என்பனவாகும் இவைகளுக்கு ஏவல் செய்கிற அடிமைகள் இரண்டு, அவைகளாவன சிப்பாது, திக்லு ஆக இரண்டாக இருக்கும், எ-று

இரண்டா வதுறூஹு நபாதியத்தாம்,இருக்கும் புற்பூடுவர்க்கமதி-லென்ரு லிசைந்தோர் முவ்வெட்டுட,னிருநான் கடுமைமே லதிகமாகும்-கொண்ட ஜாதிபா மாசிக்காவுங், கொல்லுங்காமாவும் காபிக்காவும்-விண்ட முமையிசாமுசவ்விருவும், விளங்குமுனமியாமு அல்லிதாவும். (178)

(இ-ள்);- இரண்டாவது. றூஹுக்குப் பெயராகிறது நபாதியத்து இது புற் பூண்டு மரஞ்செடி கொடிகளுடைதாக இருக்கும் இதற்கேவல் ஊழியஞ் செய்கின்ற றூஹுகள் முப்பத்திரண்டுகளாகும். இந்த அடிமைத்தன றூஹுகளின் பெயர்களின் விபரமானது:- ஜாதிபா, மாசிக்கா, காமா, தாபிக்கா, முமையிசா முசவ்விரு. முநவ்மியா, முசுல்லித்தா ஆக இப்பெயர்களுக்குரியனவாக இருக்கும். எ-று

மூன்ரு வதுறூகுஹைவானியத், முன்ஞன் கடுமை முன்
சொன்னதுடன்-பானு லாமிசா ஷாமிஆவும், பாசிருஷாமி
தாயிக்காகவும் ஊணும் ஹிபுலுடன் பிக்குவரும், உற்ற கியா
லுடன் முஸ்தரிக்கும்-காணும் கோபமும் சகுவத்துடன்.
ஹைவானியத்ததடுமையாகும். (179)

(இ-ள்):- இனி மூன்ருவது றூஹான ஹைவானி என்கின்ற விலங்கினங்களுடையதாக யிருக்கும், இதற்கு பனிரண்டு அடிமை றூஹுகள் உண்டும். அவைகளின் குறிப்பாவது;- லாமிசா, ஜாமிஆ, பாசிரு, ஷாமி, தாப்பிக்கா, ஹிபுலு பிக்ஹு சியாலு, முஸ்த்தரிக்கு ஆக இவைகளாக இருக்கும். இவைகள் அடங்கலும் கோபங்களும். மோகங்களுமாக இருக்கும். எ.று

இன்சா னிய்யத்தாம் நாலாவதிங். கிசையும் நாத்திக்கா
பஷரியத்தாம்-முன்சொல் அறுவாஹும் அடுமைகளு,
மூவெட்டோடொன்று மிதுக்குள்ளாகும்-தஞ்சும் அமலது
நலரியத்துந், துலங்கும் அமலேயும் சொந்தமாக்கும்-இன்சா
னிதுவகை இருபத்தெட்டும். இதமா யறியவே பறுலா
மென்ருர். (180)

(இ-ள்):- இனி நரன்காவதானது இன்சானியத்தின் றூஹுகளாக இருக்கும். இதன் குறிப்பு பெயராகிறது, நாத்திக்கர பஷரியத்து, இதில் அர்வாஹுவும், அப்துஞ்சேர்ந்து, இருபத்தைந்து அடிமை றூஹுகள் உண்டும், நலரியத்து, என்றூஹுவும் இவைகளில் ஒன்ருக இருக்கின்றது இதன் குணமானது, இன்சானுடைய பதவியை நல்ல அமலில் கொண்டு நடத்தும் ஆனதாலே இதன் விபரங்கள் எல்லாம் கூடி இருபத்தெட்டு வகைகளாகின்றது இவைகளே மனிதன் அறிந்து தவத்தில் கொழுவிக்கொள்வது, முக்கிய கடமை

யான பறுலான காரியமாக இருக்கும், என்று நபிகள் சிரோமணியவர்கள் திருவாய் மலர்ந்து சொன்ஞர்கள். எ-று

என்றே யுடல்தானும் மத்துநீல, மிலங்கும் சுக்கூனஃ
திருப்பாமென்றும்-நின் றஹறுபது நுகத்து றூஹாம், நிறை
யும் வட்டமே கண்ணுடியாம்-கொண்டல் குடைமேவும் நபியி
றசூல் கோமானுரைத்ததைக் கூறிஞரே-என்ரு லிவ்வகை
யறியவேணு, மேவல்பீருக்கும் குருமார்க்குமே, (181)

(இ-ள்):- இந்த ஜடலவடிவானது மத்து என்றதின் நீளமாகவும் இன்னும் இருப்பானது சுக்ஞகவும் இனி நுக்தானது பரமாத்மாவாகவும், அந்த நுக்த்துடைய வட்டமானது இருகண்களாகவும். இது மேகக்குடையையுடைய றசூல் நாயகமவர்கள் மிஃருஜியின் போது ஆண்டவன் திருவுளம் பற்றியதை அறிவித்தார்கள். இந்த விபரங்களே அறியவேண்டியது எப்படிப்பட்ட ஷெய்காய் இருந்தபோதிலும் சரி. அவர்களுக்கெல்லாம் மேல்விழுந்த கடஞக இருக்கும். எ-று,

முரீதுப்படலம் பூரணமாயிற்று.

ஆகப்படலம் 25-க்கு விருத்தம் 905,

யோகமூலிபுனுகு கரந்தைப்படலம்

தொங்கல்.

ஆக்கும் வகைகேளு மூமீன்களே
யானல் வாசியைத் திறப்படுத்த
நோக்குஞ் சரீரத்தைக் காமிலாக்க
நுண்மையாகிய வோரெழுத்தைப்
பார்க்கப் பார்க்கவே வெளியாமது
பராக்கொன் றில்லாமல் நிலேநிறுத்த
ஏர்க்கு நுத்துபுதான் வெளியிற்போகா
தென்ரு லொருமொழி சொல்லக்கேளும், (1)

(இ-ள்);- மெய்ஞ்ஞானமென்னும் தெளிவைத் தெரிந்துக்கொள்ளக்கூடிய சாதுகுண சீலர்களுக்கு ஒரு சூட்சியமானவழி ஒன்று சொல்கின்றேன் அதாவது:- வாசிஎன்று சொல்லக்கூடிய நினேவின் மூச்சியைக் குறையவிடாமல் திறப்

படுத்திக்கொண்டு சதாகாலமும் பூமியின் முகத்தில் நடந்தோடித்திரிவதற்கும் இன்னமும் இந்த சரீரத்தை பரிசுத்த நடையில் பழகிக்கொண்டு வந்து இதை மண்முதலிய எந்த வஸ்துந் தீண்டவிடாமல் செய்து கொள்ளவும் கலிமா என்னும் மூலமந்திரத்தில் இருக்கக்கூடிய ஹூ என்னும் ஒருதிரு அட்சரத்தை நிலையில் நிறுத்திக்கொண்டு பார்க்கப் பார்க்க சகலமும் வெளியாகும், இன்னும் உன்னுடைய மனம் என்னும் கவனமானது ஒருலய மாகுவதற்கும் உன் விந்து நாதமானது வெளியே சிந்தா மலிருக்கவும் ஒருதகுந்த உபாயமொன்று இருக்கின்றது. அது என்னவென்றால்:- சொல்கிறேன் கேளுங்கள், எ-று

நோக்கு நுத்துபுதா னேயாதென்றும்
நோய்கள் வந்துதா னடாரதென்றும்
சேர்க்கு மருந்தொன்றும் வேண்டாமென்றுஞ்
செய்யும் வினைசேர முறியுமென்றும்
பார்க்கு முஷாஹிதா வெளியாமென்றும்
பரிந்த மூமின்தா னுவாளென்றும்
ஆர்க்கு மிதுபோது மென்றார்நபி
யானு விதுதின்னுங் கருவைக்கேளீர். (2)

(இ-ள்):- நான் சொல்க்கூடிய தத்துவத்தை நீ உட்கொண்டால் உன் சரீரத்தில் நுத்பா என்கிற விந்தானது சதாவும் ஊறிக்கொண்டிருப்பது வோய்வடையாது இன்னும் எப்பேர்பட்ட நோய்களும் வந்து இம்சிப்பதற்கிடமில்லாமல் ஆய்விடும், இனி இந்த ஜடலத்திற்கு இயாதொரு அவிழ்தங்களும் சாப்பிட வேண்டிய அவசியமே இல்லை, யாராவது பகையாளிகள் செய்கின்ற வினைகள் அடங்கலும் முறிந்து போகும் இன்னும் அல்லாவின் ஆகைகடலானது பொங்கி வழிந்து முஷாஹிதாவும் வெளியாகும் நப்சுகள் ஒடுக்கங்கொண்டு மூமின் குணத்தில் சற்குணங்கொண்டுவிடும், இந்த ஒன்றே தப்சிகளுக்கும் யோகப் பழக்கஞ்செய்கின்றவர்களுக்கும் போதுமை யானதாக இருக்கும் என்றும்

இந்த வஸ்தை உட்கொள்ளும் விதமானது இன்னதென்று சொல்கிறேன் என்று வள்ளலாகிய நபிகள் சிகாமணியானவர்கள் திருவாய் மலர்ந்து அருளிச்செய்தார்கள். எ-று

தண்ணி னிழலதிற் படவொண்ணாது
தனக்கு மதினிழற் படவொண்ணாதிங்
கெண்ணி முப்பஃ தாயத்தினை
யிதமா யோதிக்கொண் டேமுடிக்கச்
சொன்ன படியந்த ஆயத்திற்குத்
துலங்கும் அல்லா முன்னே வரும்
அண்ணல் சொன்னான் குறுஆனிலே
அலாஇன்ன ஔவியா ஆயத்திலே (3)

(இ-ள்):- எப்படிப்பட்ட வஸ்தென்றால் போய்ப்பறிப்பவனுடைய மேனியின் நிழலும் அந்த மூலிகையின்பேரில் படப்படாது அதனுடைய நிழலும் இவனுடைய மீது படவே படாவும், அன்றியும் திரு குர்ஆன்ஷரீபில் நின்றும் ஒரு முப்பது ஆயத்துகள் சரியாய் அடங்கியுள்ள ஒரு சூரு இருக்கிறது அந்த சூறவுக்கு தலையில் அலிபும் லாமும் மகுடமாக வரும் அந்த சூறத்தை, சரிவரவோதிமுடித்து உருவாக்கிக்கொண்டு அந்த மூலிகையைப்பறிக்க வேண்டும் இது மிஃருஜியில் நபிகள் சிகாமணி யவர்கட்கு ஆண்டவன் அருளுத்தாரம் புரிந்தான் ஷை ஆயத்தானது, எதுவென்றால் "அலா இன்ன ஔலியாயல்லாஹு" என்றதாக இருக்கும். எ-று

நல்ல கரந்தையாம் புனுகரந்தை
ஞாய ருட்சையிற் சூரியனு
மெல்லை யுடனேதா னுதிக்குமுன்னே
யேக நாயனைத் தொழுதுகொண்டே
யல்ல லறச்சமூலத்தினுட
ஞ்கப் பிடுங்கிக்கொண் டேயுலர்த்தித்
தொல்லை யறப்பொடி யாக்கிக்கொண்டு
தொகுத்துத் தின்னத்தான் சொல்லக்கேளீர். ()

(இ-ள்) உலகத்தில் ஆண்டவன் சிருஷ்டித்த மூலிகை வஸ்த்துக்களில் கரந்தைகள் பதினொன்று இருக்கிறது, புநு கரந்தை என்று ஒருபூண்டிருக்கிறது, அதை இருக்கிற இடத்தில் போய் தெரிந்து வந்து அப்பால் ஞாயிற்றுக்கிழமை தினம்சூரியன் உதயஞ் செய்வதற்கு முன்னே நீ எழுந்து, உலுச்செய்து பரிசுத்த மனசுடன் அல்லாகுத்த ஆலாவை தொழுது முடித்துக்கொண்டு அப்பாலே மேற்கூறிய ஆயத்தைக்கூறி அப்பத்தியத்துடன் மேலேசொல்லியவற்றில் ஒன்றும் பழுதாகாமல் நடத்தி அப்பால் ஷை புநூகரந்தை என்ற திவ்ய ஞான யோக மூலிகையை சமூலமாகப் அதை உலர்த்தி அப்பால் இடித்துச் சூரணஞ்செய்து, ஒரு அளவு வைத்து சாப்பிட்டுவரவேண்டும். அப்படி சாப்பிடும் பக்குவங்களைச் சொல்லிவிடுகிறேன் கேளுங்கள். எ-று

புழுகு கரந்தையைப் பொடித்தபொடி
புதிய பாண்டத்தில் வைத்துக்கொண்டு
வழுவறுந் தேனு லதைக்குழைத்து
வைத்துச்சூரிய னுதிக்கும்போது
தொழுது தீர்த்தக்கா லதையெடுத்துத்
தொகுத்தே யேழுநா ளேழ்களஞ்சி
பழகித் தின்னுங்காள் நபியும்மத்தே
பகரும் லுக்குமானுல் ஹக்கீமோதினார். (5)

(இ-ள்):- அதாவது:- புநுகு கரந்தையின் சமூலத்தைப் பிடிங்கி உலர்த்தி சூரணித்த அந்த தூளை ஒரு புதிய மண் பாண்டத்தில் அடைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு வேளை ஓர் அளவு எடுத்து அதை தேன் விட்டுக்குழைத்து. சூரியன் உதயஞ் செய்வதைக் கண்ணால் கண்டு அல்லாவை இரண்டு ரகஅத்தென்னும் சாஷ்டாங்க வணக்கஞ்செய்து, தீர்ந்த உடன் தேனில் விட்டுக்குழைத்த சூரணத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு களஞ்சி வீதம் ஏழு நாளைக்கு ஏழு களஞ்சி சாப்பிட்டால் வெகு பிரயோசனம் ஹே நபிகள் மஹானின் கூட்டங்களே! இதைப்பற்றிப்பிடியுங்கள், இதைப்பற்றி மூசா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தரப்பில் லுக்மானுல் ஹக்கீம் அவர்களும் வற்புறுத்திக்கூறியும் இருக்கின்றார்கள். எ-று